REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூன் 13 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 138 | Tuesday 13, June, 2023 | 16பக்கங்கள் | 50/-




## வடக்கில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

### ஆளுநரை சந்தித்து சுமந்திரன் MP கலந்துரையாடல்



வடக்கில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள், நிர்வாக நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை, தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேரில் 06

## ரஷ்ய சுற்றுலா பயணிகளின் வருகை கிழக்கிற்கு அதிகரிப்பு

### ஆளுநர் செந்திலிடம் ரஷ்ய தூதுவர் உறுதியளிப்பு



கிழக்கு மாகாணத்துக்கான ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்துத் தருவதாக கிழக்கு ஆளுநரிடம் ரஷ்ய தூதுவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ்.ஸகாரியன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் நேற்று 06

## உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனுக்கள்; ரத்துச்செய்வது குறித்து அரசு கவனம்

### பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராய்வு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுவை ரத்துச் செய்வதற்கான யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் இடம்பெற்றுள்ள பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக ஒத்திப் போடப்பட்டுவரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் 06

## மழையுடன் கூடிய காலநிலையால் நோயாளர்கள் எண்ணிக்கை வேகமாக அதிகரிப்பு;

# டெங்கு அபாய வலயங்களாக 67 MOH பிரிவுகள் அறிவிப்பு

- நாளொன்றில் 328 பேரும் வாராந்தம் 2500 பேரும் டெங்கு நோயால் பாதிப்பு
- எச்சரிக்கையாக இருக்க சுகாதாரப் பிரிவு மக்களிடம் வேண்டுகோள்

நாடு முழுவதும் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர் தொகையில் 25 வீதமானோர் பாடசாலை மாணவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்



லோரன்ஸ் செல்வநாயகம்

மழையுடன் கூடிய காலநிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருவதாகவும் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சின் டெங்கு நோய் பிரிவு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. டெங்கு நோயினால் நாளாந்தம் 328 பேரும் வாராந்தம் 2500 பேரும் பாதிக்கப்படுவதாகவும் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களில் 25 வீதமானோர் பாடசாலை மாணவர்கள் என்றும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் நாட்டில் 67 சுகாதார மருத்துவ 06



கடற்றொழில் திணைக்களம் தனது செயற்பாடுகளில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் மற்றுமொரு நடவடிக்கையாக, இலங்கை வங்கியுடன் இணைந்து இணையத்தள வசதியை அறிமுகம் செய்துள்ளது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த ஆகியோரின் தலைமையில் நேற்று (12) கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது...



அதிவேக நெடுஞ்சாலை பயணத்தில்

### பயணச்சீட்டை மாற்றி CTB சேவையில் மோசடி

CIDயில் முறையிட சபை தீர்மானம் 02

## கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழா இன்று



கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று கொண்டாடப்படுகிறது. இன்று காலை திருவிழா கூட்டுத் திருப்பலி மற்றும் விசேட திருப்பலி பூசைகள் மூன்று மொழிகளிலும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன. தமிழ் மொழியில் திருவிழா திருப்பலியை கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு என்டன் ரஞ்சித் ஆண்டகை ஒப்புக் கொடுக்கவுள்ளார்.

இன்று மாலை புனித அந்தோனியாரின் திருச்சுரூப பவனி இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இறுதி சிறப்பு வழிபாடும் இறுதி ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளன. 06

## வெளிநாட்டு அந்நிய செலாவணி 75 சத வீதத்தால் அதிகரிப்பு

### மே மாதத்தில் மட்டும் 479.7 மில். டொலர் வருமானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

கடந்த மே மாதத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டவர்களிடமிருந்து நாட்டுக்கு வெளிநாட்டு அந்நிய செலாவணியாக 479. 7 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் கிடைத்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மே மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த தொகை 175 மில்லியன் அமெரிக்கன் டொலரால் அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை இந்த வருடத்தின் கடந்த ஐந்து மாதங்களில் வெளிநாட்டு வேலை 06

## இரு தினங்கள் காய்ச்சல் நீடிப்பின் மருத்துவ உதவியை நாட அறிவுரை

### சுகாதார அதிகாரிகள் மக்களிடம் வேண்டுகோள்



இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருப்பவர்கள் கட்டாயம் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஓய்வு எடுப்பதே மிக முக்கியமான விடயம் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் அறிகுறிகள் காணப்பட்டால் அவர்கள் பாடசாலைக்கோ அல்லது வேலைக்கோ செல்லாமல் சில நாட்கள் வீட்டில் இருந்து ஓய்வெடுக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். 06

## அமரகீர்த்தி அத்துகோரள படுகொலை சம்பவம்

### சந்தேக நபர்கள் 42 பேருக்கு எதிராக சட்ட மாஅதிபர் வழக்குத் தாக்கல்

லோரன்ஸ் செல்வநாயகம்



பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த படுகொலை சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபர்கள் 42 பேருக்கு எதிராக சட்டமா அதிபரினால் கம்பஹா உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 06

## புதிய வாக்காளர்கள் Onlineஇல் தமது பெயர்களை பதிய ஏற்பாடு


### தேசிய தேர்தல் ஆணைக்குழு நேற்று அறிவிப்பு



தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் இணையதளத்தைப் பயன்படுத்தி, வாக்காளர் பதிவேட்டில் புதிய வாக்காளர்கள் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தளமான Election.gov.lk ஐப் பார்வையிடுவதன் மூலம் வாக்காளர்களை பதிவு செய்ய முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். தற்போது புதிய வாக்காளர் பதிவேடு தொகுக்கப்பட்டு வருகிறது, கணக்கெடுப்பின் போது, திருத்தம் செய்யலாம். 06

அடுத்த பெரும்போகத்திலிருந்து

## ஒரு மூடை யூரியா ரூ. 5000க்கும் குறைவாக விநியோகிக்க அரசு நடவடிக்கை



அடுத்த பெரும்போகத்திலிருந்து ஒரு மூடை யூரியா உரத்தை 5,000 ரூபாவுக்கும் குறைவான விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். திஸ்ஸமஹாராம பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 06



### சர்வதேச விண்வெளி போட்டியில் சாதனை படைத்த வகதி மாணவன்

அமெரிக்க போட்டியில் இந்தியாவிலிருந்து சாதனை 02



### மேல், மத்திய மாகாணங்களிலும் கால்நடைகளுக்கு தோல் நோய்

02



### பகிடிவதையில் ஈடுபட்ட 11 மாணவருக்கு வகுப்புத்தடை

பேராதனை பல்கலை நிர்வாகம் அதிரடி 02

## பொரளையில் பொலிஸ், STF அதிரடி சோதனை

### 35 சந்தேக நபர்கள் கைதாகினர்



கொழும்பு பொரளை பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நடத்திய விசேட கூட்டுச் சோதனை நடவடிக்கையில் குறைந்தது 35 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹெரோயின் வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்களும், ஐஸ் போதைப்பொருளுடன் நான்கு 06

## டிப்பர் வண்டியுடன் ஆட்டோ மோதல்; குருநாகலில் நேற்று கோர விபத்து

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, மகன் பலி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு – குருநாகல் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலியாகியுள்ளதாக வரக்காபொலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று காலை கொழும்பு



குருநாகல் பிரதான வீதியில் துல்கிரிய பகுதியில் டிப்பர் 06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில்

# ஓமானிலிருந்து வந்த யூரியா விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஓமானிலிருந்து 22,500 மெட்ரிக் தொன் யூரியா உரம் நாட்டுக்கு கிடைத்துள்ளதுடன் அதனைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் நேற்று தினம் முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள் ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள கமநல சேவை மத்திய நிலையங் களுடாக அந்த உரத்தை விவசாயி களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக் கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக அமைச்சர் தெரிவித் துள்ளார்.



அதேவேளை, 50 கிலோ கிராம் எடை கொண்ட யூரியா உர மூடையொன்றை எதிர் வரும் பெரும்போகத் திற்காக 5000 ரூபாவை விட குறைந்த விலையில் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள் ளார். இக்காலங்களில் தனியார் துறையினர் யூரியா உரத்தை அதிக விலைக்கு விற்பனை செய்துவரும் நிலையில் அரசாங்கம் விவசாயிக ளின் நலன் கருதி ஏற்க னவே விற்பனை செய் யப்பட்ட நிலையை விட குறைந்த விலையில் விவசாயிகளுக்கு அதனைப் பெற்றுக் கொடுக்க தீர் மானித்துள்ளதாக அமைச்சர் தெரி வித்துள்ளார்.

அந்த வகையில் விவசாயிகளுக் குத் தேவையான உரத்தை தட்டுப் பாடு இன்றியும் எந்த வித சிக்கல் கள் இன்றியும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் மிக அதிக மான விலையில் உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் அரசாங் கம் அது தொடர்பில் கவனம் செலுத்தி மானிய விலையில் அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# IMF உடனான ஒப்பந்தங்கள் 03 மாதங்களுக்குள் நிறைவு

62 இல் இதுவரை 25 நிறைவேற்றப்பட்டுள்ளது

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை அடுத்த மூன்று மாதங்களுக்குள் பூர்த்தி செய்ய அர சாங்கம் அர்ப்பணிப்புடன் செயற் பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட 62 ஒப்பந் தங்களில் 25 மட்டுமே தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளதாக இரா ஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித் தார்.

அதன் முன்னேற்றம் குறித்து ஆராய, இது தொடர்பாக, மத்திய வங்கியினால் குழுவொன்று நிய மிக்கப்பட்டுள்ளது என்றும் வரை யறுக்கப்பட்ட காலக்கெடுவுடன் செயல்திட்டமொன்று அமுல்படுத்



தப்பட்டுள்ளதாகவும், தற்போது அது முன்னேற்றம் அடைந்து வருவதா கவும் அமைச்சர் மேலும் தெரிவித் தார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற் குள் சர்வதேச நாணய நிதிய ஒப்பந் தத்துடன் தொடர்புடைய இலக்கு களை அடைவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# மக்களுக்கு வரி நிவாரணம் பெற்று கொடுப்பதில் அரசு விசேட கவனம்

சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சுவார்த்தை என்கிறார் அமைச்சர் பிரசன்ன

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மக்களுக்கு வரி நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் இந்த நாட்களில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தி வருவதாக ஆளும் கட்சியின் பிரதமகொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதங்களில் மக்க ளுக்கு வரிச் சலுகைகளை வழங்கு வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ள நிலையில் எவ்வாறு அதனை வழங் குவது என்பது தொடர்பில் சம்பந்தப் பட்ட தரப்பினருடன் இந்த நாட்க ளில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரூபாவின் பெறுமதி அதிகரித்து வரும் நிலையில் அத்தியாவசி யப் பொருட்களை விற்பனை செய்யும் போது வர்த்தகர்கள் அதன் பிரதிபலனை மக்களுக்கு வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் வர்த்தகர்கள் அவ்வாறு பொருட்க ளுக்கான விலைக்குறைப்பு செய் வதில் சிக்கல்கள் காணப்பட்டால் அதனை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கு மென்றும் அவர் தெரிவித் துள்ளார்.



நேற்றைய தினம் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் முனையத்தில் விமானப் பயணிகள் மற்றும் விசேட அதிதிகளுக்கான நவீன உணவகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் அமைச்சர் விசேட அதி தியாகக் கலந்து கொண்டார். அந்த நிகழ்வையடுத்து ஊடகவியலாளர்க ளால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# நச்சுத்தன்மை கொண்ட மீனை உண்ட மற்றொரு பெண்ணும் உயிரிழப்பு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

நச்சுத்தன்மை கொண்ட மீனை உண்டதில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மற்றுமொரு பெண்ணும் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு , மாங்காடு கிராமத் தில் கடந்த வியாழக்கிழமை கடல் மீனினமான பேத்தை இன மீனை சமைத்து உட்கொண்டத்தில் சுகவீ னமுற்று வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மற்றுமொரு பெண்ணும் உயி ரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த வியாழக்கிழமை மாங்காடு பகுதியிலுள்ள கடலில் மீனவர்களின் வலையில் சிக்கிய குறித்த மீன்கள் மீனவர்களால் வீசப்பட்டுள்ளன.

உணவுக்கு ஒவ்வாத மீன் என்ப தாலேயே மீனவர்கள் அதனை வீசி யுள்ளனர். அந்நிலையில் அங்கு சென்ற ஒரு குடும்பத்தினர் அவ்வாறு மீனவர்கள் வீசிய அந்த மீன்களை பொறுக்கி எடுத்துச் சென்று சமைத்து சாப்பிட்டுள்ளனர்.

அவை உணவுக்கு உகந்தவை அல்ல என மீனவர்கள் அறிவுறுத் தியும் அவர்கள் அதனை எடுத்துச் சென்று சமைத்து சாப்பிட்டுள்ளனர்.

அன்றைய தினம் மாலை அதனை உட்கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் திடீர் சுகவீனமுற்ற நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அன்றயதினம் மாலை அவர்களில் ஒருவரான 27 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் மூவர் அதே வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இவ்வாறு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 50 வயதுடைய யூலியா மலர் என்ற பெண்ணும் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசா லையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் களுவாஞ் சிக்குடி பகுதி பொது 06

அதிவேக நெடுஞ்சாலை பயணத்தில்

# பயணச்சீட்டை மாற்றி CTB சேவையில் மோசடி

CIDயில் முறையிட சபை தீர்மானம்

இலங்கை போக்குவரத்து சபை யினால் வழங்கப்பட்ட பயணச் சீட்டுகளை வழங்காமல் வேறு பயணச்சீட்டை விநியோகித்த சம்ப வம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்ய இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

மாத்தறையிலிருந்து மாகும்புர பஸ் நிலையத்துக்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த போக் குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்





நடத்துனர் ஒருவரே இவ்வாறு பய ணச்சீட்டுக்களை விநியோகித்துள் ளார்.

எனினும், இது தொடர்பில் உள்ளக விசாரணை ஆரம்பிக்கப்ப டும் என போக்குவரத்து திணைக்கள பிரதிப்பொது 06

# சர்வதேச விண்வெளி போட்டியில் சாதனை படைத்த அகதி மாணவன்

அமெரிக்க போட்டியில் இந்தியாவிலிருந்து சாதனை

இலங்கையில் இருந்து அகதியாக புலம்பெயர்ந்து இந் தியாவில் கல்வி கற் றுவரும் ஈழத்தமிழ் மாணவனான விஜேந் திரகுமார் மேனகா தம்பதிகளின் புதல்வ னான அர்ச்சிகன் அமெரிக்காவில் உள்ள தேசிய விண்வெளி சங்கம் (National Space Society (NSS) சர்வ தேச ரீதியாக மாணவர்களிடையே நடத்திய போட்டியில் வெற்றி பெற்று பெருமை சேர்த்துள்ளார்.




விண்வெளியில் மனிதர்களைக் குடி யமர்த்தும் போது பின்பற்ற வேண்டிய அறிவுசார் நுட்பங் களை உள்ளடக்கி, அவரது சிந்தனையில் உருவான செயற் றிட்டம் வெற்றி பெற்றுள்ளதாக NATIONAL SPACE SOCIETY (NSS) அறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் 19 நாடுக ளில் இருந்து 26,725பேர் பங்கேற்ற நிலையில், 06

# மேல், மத்திய மாகாணங்களிலும் கால்நடைகளுக்கு தோல் நோய்

லோரன்ஸ் செல்வநாயகம்



மாடுகளுக்கிடையில் பரவும் சர்மநோய் கார ணமாக இறைச்சிக்காக மாடுகளை போக்குவரத் துச் செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதாக கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஹேரத் தெரிவித் துள்ளார்.

இந்த நோய் பிரதேசங்களக்கி டையில் பரவுவதைத் தடுக்கும் வகையில் இத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரி வித்துள்ள அவர், அவ்வாறான மாடுகளுக்கு தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கால்ந டைகள் மத்தியில் பரவும் தோல் நோய் மேல் மாகா ணத்திலும் பரவிவருவ தாக அரசாங்க கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள் ளது. அதனைக் கட்டுப்படுத்த துரித மான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவேண்டுமென்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார்.

தற்போது மேற்படி மிருகங்களுக் கிடையில் பரவும் தோல் நோய் வடமேற்கு மற்றும் 06

# ஆசிய விஞ்ஞானிகள் 100 இல் 04 இலங்கையர் இடம்பிடிப்பு!

ASIAN SCIENTIST 100 இதழின் 2023 பதிப்பில் நான்கு இலங்கை யர்கள் இடம்பிடித்துள்ளனர். Asian Scientist Magazine என்பது ஒரு விருது பெற்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்ப இதழாகும், இது ஆசியாவின் R&D செய்திகளை உல களாவிய பார்வையாளர்களுக்கு எடுத்துரைக்கிறது.

ஆசியாவின் முன்னணி STEM மற்றும் ஹெல்த்கேயார் மீடியா நிறு வனமான சிங்கப்பூரைத் தலைமை யகமாகக் கொண்ட வைல்ட் டைப் மீடியா குழுமத்தால் இந்த இதழ்




வெளியிடப்படுகிறது. Oceans well இன் ஸ்தாபகரான Asha DeVos, மற்றும் Dr. Rohan Pethiyagoda ஆகியோருடன் கொழும்பு பல் கலைக்கழகத்திலிருந்து சதுரங்க ரணசிங்க மற்றும் மொரட்டுவ பல் கலைக்கழகத்தில் இருந்து அஷானி சவிந்த ரணதுங்க 06

# பகிடிவதையில் ஈடுபட்ட 11 மாணவருக்கு வகுப்புத்தடை

பேராதனை பல்கலை நிர்வாகம் அதிரடி

பேராதனைப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் புதிய மாணவர் குழுவை துன்புறுத்தி, பகிடிவதைக்கு உட்படுத்தியதா கக் கூறப்படும் அப்பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் 11 பேருக்கு தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது என பேராத னைப் பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தரும் ஊடகப் பேச்சாளரு மான பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

முகாமைத்துவ பீடத்துக்கு புதிதாக சேர்க்கப்பட்ட மாணவர்கள் தங்கி யிருந்த விடுதிக்குச் சென்று அங்கு



தங்கியிருந்த மாணவர்களை பகிடி வதைக்கு உட்படுத்தியதாக செய்யப் பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், 11 மாணவர்களும் விசாரணைக்கு உட் படுத்தப்பட்டு தற்காலிகமாக வகுப் புத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய பாடசாலைகளை கண்காணிக்க விசேட குழு

கல்வி அமைச்சு தீர்மானம்

தேசிய பாடசாலைகளை மேற் பார்வையிட கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களை கொண்ட குழுவொன்றை உருவாக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய பாடசாலைகள் தொடர் பில் முறையான கண்காணிப்பு செயற்பாடுகள் இல்லாத காரணத்தி னால் அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதுடன், அமைச்சின் தேசிய பாடசாலை பிரிவும் மாகாண கல்வி அமைச்சும் இணைந்து இந்த குழுவை நியமிக்கவுள்ளது.

முறையான ஒழுங்கு முறையைப் பின்பற்றி இந்தப் பாடசாலைகளை வழமையான நிலைக்குக் கொண்டு வருவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும் 06

# ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை உள்ளிட்ட கட்டடங்கள் விரைவில் ஜயவர்தனபுரவுக்கு

ஒரே இடத்தில் நிர்வாக வளாகம் அமைக்க திட்டம்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமரின் உத்தி யோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகை ஆகியவற்றை ஸ்ரீ ஜயவர் தனபுர பகுதிக்கு மாற்றுவதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளது.

உத்தேச புதிய கொழும்பு பாரிய நகர திட்டத்தின் கீழ் இந்த மாற்றங் கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வும் அதேவேளை தற்போதைய ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமரின் அலரி மாளிகை ஆகியவற்றை சுற்றுலாத் தலங்களாக மாற்றுவதற்கும் நட வடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் பணிப்புரையின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேசத்தில் ஒரே இடத்தில் இந்த நிர்வாக வளாகத்தை நிர் மாணிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அதற்கான காணியை இனங் காண்பதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப் பாளர் பிரசாத் ரணவீர தெரிவித் துள்ளார்.

காணிகள் இனங் காணப்பட்ட பின்னர் மேற்படி கட்டடங்களை கட்டம் கட்டமாக அங்கு மாற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டும் என்றும் இந்த திட்டத்தின் கீழ் கொழும்பு நகரிலுள்ள ஏனைய பல கட்டடங்களும் முதலீட்டாளர் களுக்கு குத்தகைக்காக வழங்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.



அதற்கிணங்க வெளிவிவ கார அமைச்சு கட்டடம், பொலிஸ் தலைமையகம், தபால் தலைமையகம், விமானப் படை தலைமை யகம், கடற்படை தலைமை யகம், நீர்ப்பாசன திணைக் கள கட்டடம், வெளிக்கடை சிறைச்சாலை மற்றும் பழைய பாதுகாப்பு அமைச்சு கட்டி டம் உள்ளிட்ட பல கட்டடங் கள் இவ்வாறு குத்தகைக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரிச்சலுகை விதிமுறைகளுடன் மேற்படி கட்டடங்களை 30 ஆண் டுகளுக்கு குத்தகைக்கு விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொரளை துப்பாக்கிச்சூடு

# மற்றுமொரு சந்தேக நபரை கைது செய்ய பொதுமக்கள் உதவியை நாடியுள்ள பொலிஸார்

கடந்த மே மாதம் 20 ஆம் திகதி பொரளை லெஸ்லி ரணகல மாவத்தைக்கு அருகில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்து டன் தொடர்புடைய மற்று மொரு சந்தேக நபரை கைது செய்ய பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்.



பொரளை லெஸ்லி ரணகல மாவத் தைக்கு அருகில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப் பட்டதில் 53 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத இரண்டு துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளில் பயணித்த மற் றுமொரு நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார். அடையாளம் காணப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் வசிப்பிடத்திலி ருந்து தப்பிச் சென்றுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் கண்டறி யப்பட்டுள்ளது.

கடந்த மே 30 ஆம் திகதி தேடப் படும் சந்தேக நபர் ஒருவரைப் பிடிக்க பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடினர். இந்த சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வரும் மற் றுமொரு சந்தேக நபரை கைது செய்ய சமீபத்திய முறையீடு வந்துள்ளது.

சந்தேக நபர் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் 071 8591733, 071 8591735 அல்லது 071 8596503 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல் தெரிவிக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.




# கோடி அற்புதருக்கு இன்று கொச்சிக்கடையில் திருவிழா



கோடி அற்புதராம் புனித அந்தோனியாருக்கு கொச்சிக்கடை திருத்தலத்தில் திருவிழா எடுத்து மகிழ்கின்றனர் கத்தோலிக்கத் திருச்சபையின் விசுவாசிகள். ஆனி மாதம் 13ம் திகதி என்றால் அது நம் மனதில் எப்போதும் பதிந்து நிற்கும் தினமாகும். அன்றைய தினத்தில் தன்னை அண்டி வந்தோரை ஆதரித்து அரவணைக்கும் கோடி அற்புதரின் திருவிழா.

இலங்கையில் பல பகுதிகளிலும் புனித அந்தோனியார் ஆலயங்கள் காணப்பட்டாலும் கொழும்பு, கொச்சிக்கடை ஆலயம் தனிச் சிறப்பு பெற்றதாகும். இலங்கையில் மட்டுமல்ல முழு உலகிலும் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக இந்த ஆலயம் மக்கள் மனதில் பதிந்துள்ளது என்றால் மிகையில்லை.

புதுமைகளுக்குப் பேர் போன ஆலயமாகவும் இன, மத பேதங்களுக்கு அப்பால் அனைத்து மக்களினதும் நம்பிக்கையை வென்ற ஆலயமாகவும் இது திகழ்கிறது. செவ்வாய்க்கிழமை தோறும் அணியணியாக வந்து உருக்கமாக தமது வேண்டுதல்களை சமர்ப்பித்துச் செல்லும் மக்கள் அதற்கு சான்றாக உள்ளனர்.

தன்னை நம்பி வருவோரை புனித அந்தோனியார் வெறுங்கையோடு அனுப்ப மாட்டார் என்ற நம்பிக்கையோடு அவர்கள் ஆலயத்தில் முழந்தாள்படியிடுவதை நாம் காண முடியும். உண்மைதான்! குடும்பநலம், உடல்நலம், மனநலம், ஆத்மநலம் என பல்வேறு நன்மைகளைத்தேடி ஓடிவரும் விசுவாசிகளை புனித அந்தோனியார் ஒரு போதும் வெறுங்கையோடு அனுப்புவதில்லை.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு ஒரு சிறப்பான வரலாறு உண்டு. பதினெட்டாம் நூற்றான்டில் இலங்கையானது ஒல்லாந்தரால் ஆளப்பட்டபோது நாட்டில் கத்தோலிக்க மதம் தடைசெய்யப்பட்டிருந்தது. கத்தோலிக்க மத குருமார்களை கண்ட இடத்தில் சிரச்சேதம் செய்வதற்கு படைவீரர்களுக்கு அன்றைய அரசு உத்தரவிட்டிருந்தது.

கத்தோலிக்க மக்கள் பெரும் அவல நிலையை எதிர்கொண்டனர். பிறப்பு, திருமணம், இறப்பு போன்றவற்றிற்குக் கூட குருமார் இன்றி அவதியுற்றனர். தொழில், வரி அரச சேவை முதலியவற்றிலும் கடும் பறக்கணிப்பும் துன்புறுத்தலும் காணப்பட்ட காலம் அது.

இக்காலத்தில்தான் வண. யோசேப்வாஸ் அடிகளாரும், யாக்கோமே கொன்சல்வெஸ் அடிகளாரும் தம்முயிரைப் பணயம் வைத்து திருத்தொண்டாற்ற முற்பட்டனர். அவர்கள் கொழும்பிற்கு நிலையான தொண்டாற்ற அன்டோனியோ என்ற குருவானவரை இரகசியமாக வரவழைத்தனர். அன்டோனியோ அடிகளார் அன்றைய மெலிபன் வீதியில் ஒரு வியாபாரி வேடம் பூண்டு தங்கினார்.

எப்படியோ அதனை அறிந்த ஒல்லாந்தர் அவரைக் கைது செய்ய முயன்றனர். அவர்களது கண்களில் படாமல் ஒளிந்து வாழ்ந்து அவர் கொச்சிக்கடை பகுதிக்கு வந்தார். அக்காலத்தில் அது ஒரு சிறு மீனவர் கிராமமாகும். அக்கிராமத்தோருக்கும் குருவானவருக்கும் இடையிலான ஈடுபாடு ஒல்லாந்த படைவீரர்களை சற்று பணிய வைத்தது.

ஆண்டாண்டு காலமாக இப்பகுதி மக்கள் கடல் அரிப்பினால் தங்கள் நிலத்தை இழந்து வந்தார்கள். அதனைக் கட்டுப்படுத்த வல்லவர் என மக்கள் குருவானவரை நம்பினார்கள். அன்டோனியோ அடிகளார் தம் செப வல்லமையால் கடலரிப்பைக் கட்டுப்படுத்தினால் எப்படியாவது அவரைக் காப்பாற்றுவது என்றும் உறுதி கொண்டார்கள். அதுவரை அவருக்கு எந்த தீங்கு இழைக்கலாகாது என ஒல்லாந்தரிடமும் உறுதியுடன் கேட்டுக் கொண்டார்கள்.

அன்டோனியோ குருவானவருக்கான உடையணிந்து ஒரு பெரிய மரச்சிலுவையை கையில் ஏந்திக்கொண்டு கடற்கரையை அடைந்தார்.இறைவனின் மகிமை வெளிப்பட வேண்டுமென்று மிக உருக்கமாக மன்றாடி கடலரிப்பு உச்ச நிலையிலிருந்த இடத்தில் அச்சிலுவையை நிறுவினார். அன்பே உருவான ஆண்டவர் தம் அடியாரின் இன்னல் தீர்க்க சித்தம் கொண்டார். அதனையடுத்து மூன்றாம் நாள் கடல் பின் வாங்கியது. அனைவருமே காணக்கூடிய வகையில் மணல்மேடு உருவானது. ஒல்லாந்தர் அவர் மீது பெரும் நம்பிக்கை கொண்டனர்.அவர் விருப்பம்போன்று திருத்தொண்டாற்ற அவருக்கு அனுமதியளித்தனர்.

அன்று முதல் இன்று வரை இந்த திருத்தலத்தில் பல அற்புதங்கள் நடைபெற்று வருகின்றன. புனித அந்தோனியார் பெயரால் சிறுகுடிசை ஆலயம் அங்கு உருவாயிற்று.அன்டோனியோ அடிகளார் தம் கடைசிக்காலம் வரை அங்கிருந்து இறைவனின் மகிமையைப் பறைசாற்றி மரித்தார். அவரது உடல் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இன்று நாம் காணும் புனித அந்தோனியாரின் சிறிய பீடம்தான் கடலரிப்பு அற்புதத்தின்போது மரச்சிலுவை நடப்பட்ட இடம். 1806ஆம் ஆண்டு ஆலயம் விரிவாக்கப்பட்டதன் பின்னர் 1822ஆம் ஆண்டு கோவாவிலிருந்து கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டதுதான் இப்பீடத்திலுள்ள சிறிய திருச்சுரூபம். புனித அந்தேனியார் திருநாக்கு புதுவையில் பேணப்பட்டு வந்ததை நாம் அறிவோம். அதிலிருந்து கொண்டுவரப்பட்ட சிறிய பகுதியினையே இந்த சிறிய பேழையில் காணக்கூடியதாக உள்ளது. அதன் பின்னர் பல தடவைகள் ஆலயம் புதுப்பிக்கப்பட்டும் பெருப்பிக்கப்பட்டும் வந்தது. அது போன்ற நீண்ட ஒரு வரலாற்றை இந்த திருத்தலம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்கொலை குண்டுதாரியினால் தகர்க்கப்பட்டாலும் மீண்டும் இந்த ஆலயம் முன்னரை விட கம்பீரமாக தோற்றமளித்து தம்மை அண்டி வருவோருக்கு அற்புதங்களை வழங்கி வருகின்றது. புனித அந்தோனியாருக்கு திருவிழா எடுத்து மகிழும் இந்த நாளில் எமது நாட்டையும் மக்களையும் புனிதரிடம் ஒப்படைத்து நாட்டில் அமைதியும் சமாதானமும் என்றும் நிலவ பிரார்த்திப்போம்.

- **லோரன்ஸ் செல்வநாயகம்**

## Program of Activities for the Feast

- Monday, June 12th evening service at 7 p.m.
  (Presided over by His Eminence Malcolm Cardinal Ranjith, Archbishop of Colombo.)
- June 13th - Masses.
  At 4.00 a.m. in Tamil.
  At 5.00 a.m. in Sinhala.
  At 6.00 a.m. in Tamil.
  At 7.00 a.m. in Sinhala.
  At 8.00 a.m. High Mass in Tamil.
  (Presided over by His Eminence Anton Ranjith, Assistant Bishop of Colombo.)
  High Mass at 10.00 a.m. in Sinhala.
  (Presided over by His Eminence Maxwell Silva, Assistant Bishop of Colombo.)
  High Mass at 12 noon in English.
  (Presided over by His Eminence J.D Anthony, Assistant Bishop of Colombo.)
- At 5.30 p.m. : Procession with the miraculous statue of St Anthony. Afterwards at 7:00 p.m., people will be blessed with the miraculous statue of Saint Anthony, presided over by His Eminence Malcolm Cardinal Ranjith, Archbishop of Colombo.

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
Little ASIA
Dream Big Think Big Achieve Big
Wellawatte / Pettah
No,317,317A,Galle Road Wellawatte,Colombo 06,T.P-2504470
No,73,75A, Main St, Colombo 11,0112391745

St. Anthony
Please pray for us
New Rathna Mahal
JEWELLERS (PVT) LTD
97,Sea Street,Colombo-11.Tel:011-2 431 357
155,Main Street, Negombo.Tel 031-2231854

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
Dealers in Forage, Fetilizer, Animal Feeds and Medicines
S K SONS
25, Wolfendhal St, Colombo - 13.
T.P : 011 - 2433105 Mob: 077 - 7396162

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
SRI VIJAYAS
No.309 Sea St, Colombo 11.
T.P : 0112 449 373, Mobile - 0773813978.

ஹரே கிருஷ்ணா
ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம்
BANK - HATTON NATIONAL BANK
BRANCH - JAMPETTAH STREET
ACCOUNT NAME - ISKCON
ACCOUNT NO - 207010000891
SWIFT CODE - HBULKLX
BANK - COMMERCIAL BANK
BRANCH - KOTAHENA
ACCOUNT NAME - ISKCON
ACCOUNT NO - 1050669901
SWIFT CODE - CCEYLKLX
ஆலய அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது வங்கி வைப்பினூடாகவோ நன்கொடைகளை வழங்கலாம்
ISKCON
No,188 New Chetty St, Colombo 15,
T.P: 0112433325/0772288166/iskcon@slt.lk

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
SARITA Textorium
Right Place for Right Choice
No. 99, Main Street, Colombo 11.
Tel : 2446023 Web : www.saritatex.com
www.facebook.com /saritatextorium

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
DEVI
JEWEL OF THE ISLAND
Devi Jewellers, 131, Sea Street, Colombo-11.
+94 713 131 131, +94 743 813 454, 011 239 5001

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
ROBINSON
(PRIVATE) LIMITED
176, Main Street,Colombo11.
T.P: 0112 422 565,011 2448755,E-mail: ashok@robinsonlk.com

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
NAVEEN CERAMIC (PVT) LTD
297/12 George R De Silva Mw Colombo 13
T.P : 011 2325406,011 2345197,011 2345198 Fax : 011 2335637,
E-mail : info@naveen.lk, Web : http://www.naveen.lk

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
APSARAS SAREE CENTRE
அப்சராஸ் சாரி சென்டர்
113, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 0112 336799 Hotline: 077 9997242
www.apsarassareecentre.com / E-mail: info@apsarassareecentre.com
எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
KAMALESWARY
No. 214, Main Street, Colombo 11.
Web: www.kamaleswary.com
No. 25, Grand Bazaar, Jaffna.
Web: www.kamaleswary.com

புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
Ranjanas
127, Main St, Colombo 11. Phone: 2320 824, 2320834, 2320900
Fax : 2331714, E-Mail :info@ranjanaslk.com,Web :ranjanas.lk.com


புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்...
Ram Bros
140 Main St, Colombo 11.
T.P. : 0112 320 127,0112 447698,Fax 0112 543424

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 30ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்கஃதா பிறை 22



**குறள் தரும் சிந்தனை**

நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு

மது மயக்கம் எனும் வெறுக்கத்தக்க பெருங்குற்றத்திற்கு ஆளாகியிருப்போரின் முன்னால் நாணம் என்று சொல்லப்படும் நற்பண்பு நிற்காமல் ஓடிவிடும்.

# பொருட்களின் விலைகள் இன்னுமே குறைக்கப்படாமலிருப்பது தவறு!

பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்றுவந்த இலங்கை, தற்போது மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கின்றது. இதன் பயனாக பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் நிலவிய நெருக்கடிகளும் அசௌகரியங்களும் பெரும்பாலும் தணிந்து நீங்கியுள்ளன. வாரத்திற்கு ஒரு தடவை கோட்டா அடிப்படையில் வழங்கப்படும் எரிபொருளின் அளவும் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றது.

அத்தோடு எரிபொருள் மற்றும் எரிவாயுவின் விலைகளும் அவ்வப்போது குறைக்கப்பட்டு வருகின்றன. ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதியும் கடந்த சில வாரங்களாக நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

இந்நிலையில், 'வெளிநாட்டு நாணயக் கையிருப்பு ஸ்திரமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கை மத்திய வங்கி, 'கடந்த (2023) ஏப்ரல் மாதம் 35.3 வீதமாகக் காணப்பட்ட பணவீக்கம், மே மாதம் 25.2 வீதமாக வீழச்சி அடைந்துள்ளது' என்று அறிவித்துள்ளது. நாட்டின் பணவீக்கமும் கடந்த சில மாதங்களாகத் தொடராக வீழ்ச்சி அடைந்து வருவதை இந்த அறிவிப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது.

இதேவேளை, வெளிநாட்டு நாணயக் கையிருப்பு ஸ்திரமடைந்துள்ளமை, டொலரின் பெறுமதி வீழ்ச்சி என்பவற்றின் அடிப்படையில், கடந்த வருட ஆரம்பப்பகுதியில் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டு இருந்த ஒரு தொகுதி பொருட்களுக்கான இறக்குமதித் தடையும் தற்போது நீக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ள நாட்டில் பல்வேறு விதமான நிவாரண நடவடிக்கைகளும் சலுகைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்கள், சேவைகளின் விலைகள் இன்னும் போதியளவில் விலைகுறைக்கப்படவில்லை. பொருளாதார நெருக்கடி நிலவிய போதுதான் இந்நாட்டின் பொருட்கள், சேவைகளின் விலைகளும் கட்டணங்களும் பெரிதும் அதிகரிக்கப்பட்டன. ஆனால் இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்றுள்ள போதிலும், பல பொருட்களின் விலைகள் இன்னும் பொருளாதார நெருக்கடி காலத்தின் போன்றே காணப்படுகின்றன. இந்த நிலைமை பல மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது.

இவ்வாறான நிலையில்தான் நிதி இராஜாங்க அமைச்சர் ரன்ஜித் சியம்பலாப்பிட்டிய, 'பணவீக்கம் குறைவடைந்துள்ள போதிலும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைவடையவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். சந்தையில் ஒரு சில பொருட்களுக்கு கேள்வி குறைவடைந்துள்ளது. ஆனாலும் அப்பொருட்களின் விலைகளும் குறைவடையாதுள்ளன. அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் விலைக் குறைப்பின் ஊடாகவே பொருளாதார முன்னேற்றத்தின் பயன் மக்களை சென்றடைய முடியும்' என்றுள்ளார்.

அதன் காரணத்தினால் இவ்விடயத்தில் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'பணவீக்கம் குறைவடைந்து இறக்குமதி மீதான தடை தளர்த்தப்பட்டுள்ள பின்னணியில் அத்தியாவசியப் பொருட்களின் விலையில் மாற்றம் ஏற்படாமல் இருப்பது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

உண்மையில் இது காலத்திற்கு அவசியமான ஆலோசனையும் நடவடிக்கையும் ஆகும்.

பொருளாதார நெருக்கடியினால் நாட்டின் எல்லா மட்ட மக்களுமே அசௌகரியங்களுக்கும் தாக்கங்களுக்கும் முகம்கொடுத்தார்கள். நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்கள் அர்ப்பணிப்புக்களோடு செயற்பட்டார்கள்.

இதன் பயனாக குறுகிய காலப்பகுதிக்குள் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்று மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்துள்ள நாட்டின் மக்களது நலன்களை முன்னிலைப்படுத்தி பல்வேறுவிதமான நிவாரண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சலுகைத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நெருக்கடியைத் தணித்து கட்டுப்படுத்துவதற்கு தேவையான எத்தனையோ நிவாரண நடவடிக்கைகள் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வேலைத்திட்டங்களுக்கு ஏற்ப பொருட்கள் சேவைகளின் விலைகளைக் குறைக்க முடியும் என்பதுதான் மக்களின் கருத்தாகும். ஆனால் அவ்விலைக்குறைப்பைத் தவிர்ப்பதற்காக வர்த்தக தரப்பினர் முன்வைக்கும் சாக்குபோக்குகளும் நிபந்தனைகளும் கொஞ்சநஞ்சமல்ல.

அதனால் பொருளாதார நெருக்கடி காலத்தில் அதிகரிக்கப்பட்ட விலைகள்தான் பல பொருட்களுக்கு இன்னும் நடைமுறையில் இருக்கும் நிலை காணப்படுகிறது. இது எவ்விதத்திலும் நியாயப்படுத்தக் கூடியதல்ல.

இந்த நிலையில் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி இவ்விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இதனை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். பொருளாதார நெருக்கடியைத் தணித்து கட்டுப்படுத்தவென முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் பிரதிபலன்கள் மக்களுக்கு கிடைக்கப்பெற வேண்டும். அதுவே அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# வேல்கள் தாங்கிய முருகபக்தர்கள் ஆயிரம் பேர் வேலோடுமலையிலிருந்து கதிர்காமம் யாத்திரை

## சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தானகுரு சிவசங்கர்ஜி ஏற்பாட்டில் இன்று ஆரம்பம்

**ஆயிரம் வேல்களுடன், ஆயிரம் முருகபக்தர்கள் கதிர்காமம் நோக்கி பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரை வரலாற்றில் முதல் தடவையாக இன்று (13) செவ்வாய்க்கிழமை வேலோடுமலையிலிருந்து சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் ஆரம்பமாகின்றது.**

இந்த மாபெரும் வேல் யாத்திரையை வேலோடுமலை முருகன் ஆலயத்தின் ஆதீன கர்த்தா முருகஸ்ரீ தியாகராஜா ஆசிரியர் வேல் சாமியாக இருந்து இவ்வருடம் முதல் யாத்திரையை தலைமையேற்று நடத்துகிறார்.

திருமூலர் பெருமானின் அருளாசியுடன், சித்தர்களின் குரல் சிவசங்கர் குருஜியின் நேரடி வழிகாட்டலின் கீழ் இவ்வருடத்தில் இருந்து ஆயிரம் வேல்களுடன், ஆயிரம் முருகபக்தர்கள் பயணிக்கும் மாபெரும் வேல்யாத்திரையாக, கதிர்காமம் நோக்கி கந்தனை தரிசிக்க வேலோடுமலையில் இருந்து பாத யாத்திரை தொடங்குகிறது.

அதற்குரிய சம்பிரதாய வழிபாடுகள் அனைத்தும் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் கடந்த சனிக்கிழமை பௌர்ணமி தினம் வேலோடுமலை முருகன் ஆலயத்தில் நடைபெற்றன.

வேலோடுமலையிலிருந்து சிறப்பு பூஜைகள் சகிதம் வேல் யாத்திரை ஆரம்பமாகி சித்தாண்டி முருகன் ஆலயம் மற்றும் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை தரிசித்து உகந்தைமலை முருகன் ஆலயத்தை சென்றடைந்தது. இன்றிரவு அங்கு அடியார்கள் தங்கியிருப்பர்.

நாளை 14 ஆம் திகதி புதன்கிழமை உகந்தைமலை முருகன் ஆலயத்தில் இருந்து ஆறு நாட்கள் கொண்ட வேல் யாத்திரை முறைப்படி ஆரம்பமாகின்றது. இந்த யாத்திரை 19 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் கதிர்காமத்தை சென்றடையும்.



அனைத்து ஏற்பாடுகளும் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத்தலைவர் மனோகரன் ஆகியோரின் நேரடி ஏற்பாட்டின் கீழ் நடைபெறுகின்றன. தினமும் ஒவ்வொரு இடத்திலும் சக்தி வாய்ந்த வேல் பூஜை, அபூர்வ வனமூலிகைகளினால் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி, வன ஜை, வன போஜனம் ஆகியன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு தலைவர் ஆதித்தன் (077 313 8048), துணைத்தலைவர் மனோகரன் (077 119 2223), ஆலோசகர் மகேஸ்வரன் சுவாமிகள் (077 639 2368) ஆகியோருடன் தொடர்பு கொள்ள முடியும்.

**வி.ரி.சகாதேவராஜா**
(சித்தர்கள் குரல் அமைப்பின் ஆலோசகர்)

# இலக்கியப் பயணத்தில் பொன்விழா கண்ட கோவிலூர் செல்வராஜனுக்கு பாராட்டு நிகழ்வு

## மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தில் விமரிசையான விழா

**மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம் நடத்திய எழுத்தாளரும், பல்துறைக் கலைஞருமான கோவிலூர் செல்வராஜனின் இலக்கியப் பயணத்தின் பொன்விழா நிகழ்வும், 'இலக்கியத் தென்றல்' மலர் வெளியீடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.**

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் கலாநிதி மு.கோபாலரெத்தினம், கொழும்பு தேசிய கல்வி நிறுவக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் முருகு தயாநிதி மற்றும் அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளரும், ஆய்வாளருமான சட்டத்தரணி பாடும்மீன் ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு வெளியீடு செய்யப்பட்ட 'இலக்கியத் தென்றல்' மலரின் முதல் பிரதியை கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் கலாநிதி மு.கோபாலரெத்தினம் பெற்றுக் கொண்டார்.









அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் மற்றும் பிரமுகர்களுக்கு சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது பொன்விழா நாயகன் கோவிலூர் செல்வராஜன் தொடர்பான அறிமுகவுரையினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கப் பொதுச்செயலாளர் மு.கணேசராஜாவும், இங்கு வெளியீடு செய்யப்பட்ட 'இலக்கியத் தென்றல்' மலர் தொடர்பான ஆய்வுரையினை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் உதவி விரிவுரையாளர் முருகையா சதீஸ்ும், வாழ்த்துரையினை எழுத்தாளரும், கவிஞரும், பாடலாசிரியருமான பாவேந்தல் பாலமுனை பாறூக்கும், ஏற்புரையினை கோவிலூர் செல்வராஜனும் நிகழ்த்தினர்.

பொன்விழா நாயகன் கோவிலூர் செல்வராஜன் கிழக்கின் புகழ்பூத்த கலைஞர்களோடு இணைந்து மட்டக்களப்பு மண் சார்ந்த பாடல்களைப் பாடி நிகழ்வில் கலந்து கொண்டோரை மகிழ்வித்தார்.

அத்தோடு இவரை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தினர் உட்பட பல்வேறு இலக்கிய அமைப்புக்கள் பொன்னாடை போர்த்திப் பாராட்டிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

**க.கிருபாகரன்**
கல்லடி

# மருதமுனை கல்விப்புலத்தில் பாராட்டுக்குரிய ஆசிரியை ஐனுல் ஜாரியா முகம்மட் மஜீட்

**மருதமுனையின் கல்விப்புலத்தில் பெண் கல்வி ஆளுமைகளில் ஒருவர் ஐனுல் ஜாரியா முகம்மட் மஜீ ட் ஆவார். மாணவர்களுடன் மிகவும் நெருக்கமான நல்லுறவைப்பேணி சிறப்பாகக் கற்பிப்பதில் ஆற்றல் மிக்கவர். இவரது பதவிக்காலத்தில் ஒவ்வொரு வருடமும் தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணர்கள் அதிகளவில் சித்தியடைந்து வந்துள்ளனர்.**

அதே போன்று தமிழ்தினப் போட்டிகளில் மாணவர்களுக்கு பயிற்சியளித்து மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என பதக்கங்களை பெற மாணவர்களுக்கு வழிகாட்டியவர்.இவர் 31 வருட ஆசிரிய சேவையில் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் மருதமுனையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.எம்.மஜீத்_ எஸ்.எம்.செய்தத் தம்பதியின் புதல்வியாக 1961.12.12ஆம் திகதி மருதமுனையில் பிறந்தவர்.

இவர் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை, மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தரப் பாடசாலை (தேசிய பாடசாலை)ஆகியவற்றின் பழைய மாணவியாவார்.

இவர் பாடசாலைக் காலத்தில் கல்வியிலும் விளையாட்டிலும் ஏனைய போட்டி நிகழ்ச்சிகளிலும் பல வெற்றிகளையும் சாண்றிதழ்களையும் பெற்றுள்ளார்.



1988.08.06ஆம் திகதி ஆரம்பக் கல்வி ஆசிரியராக நியமனம் பெற்று மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் கடமையேற்றார். 1990ஆம் ஆண்டு தொடக்கம் 1991ஆண்டு வரை அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றார். ஆசிரிய பயிற்சியின் பின் முதற் பாடசாலையான மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரில் 1992.01.01ஆம் திகதி கடமையேற்று அங்கு கடமையாற்றிய நிலையில் 2010ஆண்டு 10ஆம் மாதம் இடமாற்றம் பெற்று 2013.05.17ஆம் திகதி வரை பாண்டிருப்பு அல்மினன் வித்தியாலயத்தில் கடமையாற்றினார். 2013.05.17ஆம் திகதி அல்மனார் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று 2021.12.12ஆம் திகதி ஓய்வு பெற்றார்.

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டியில் பேச்சு, பாவோதல், வாசிப்பு ஆகிய நிகழ்ச்சிகளில் பல தங்கப் பதக்கங்களையும், வெள்ளிப் பதக்கங்களையும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் மாணவர்கள் பெறும் வகையில் பயிற்றுவித்துள்ளார். இணைப்பாடவிதாச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாவிருந்து பல போட்டிகளில் மாணவர்கள் வெற்றி பெற உழைத்துள்ளார். தமிழ் மொழித் துறைக் குழுவில் அங்கத்தவராக இருந்து ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் தேசிய மட்டத்தில் பல மாணவர்கள் பதக்கங்கள் பெற அனுசரணையாக இருந்துள்ளார்.


இவரது கல்விப்பணி ஓய்வின் பின்னரும் தொடர வேண்டும் என்பதே பெற்றோரின் எதிர்பார்ப்பாகும்.

**பி.எம்.எம்.எ.காதர்**
மருதமுனை தினகரன் நிருபர்

# அக்கரைப்பற்றின் மூத்த இஸ்லாமிய உலமா அல்-ஆலிம் அப்துல் லத்தீப் (பஹ்ஜி)

**மர்ஹூம் முகம்மது மீராலெப்பை ஆலிம், முகையதீன் பாவா மரியம் உம்மா தம்பதியின் மகனாகிய அஷ்-ஷேக் அல்-ஆலிம் எம்.எம்.ஏ. அப்துல் லத்தீப் (பஹ்ஜி) 1943.05.23 ஆம் திகதி அக்கரைப்பற்றில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை அக்கரைப்பற்று றோமன் கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் கற்றார். ஆரம்ப மார்க்கக் கல்வியை அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியில் கற்ற பின் இலங்கையின் மிகப் புராதன கல்விக் கூடமான காலி கோட்டை பஹ்ஜதுல் இப்றாஹீமிய்யா அறபுக் கலாசாலையில் உயர்கல்வி கற்று முடித்துக் கொண்டு இக்கலாபீடத்திலிருந்து 1969 ஆம் ஆண்டு மௌலவி பட்டம் பெற்று வெளியேறினார்.**

மௌலவி அப்துல் லத்தீப் கல்லூரியில் பயிலும் காலத்தில் இஸ்லாமிய சட்டக் கலையில் (இல்முல்பிக்ஹ்) சிறப்பான புலமையும் ஈடுபாடும் கொண்டவராகக் காணப்பட்டார். அரபுப்பாட ஆசிரியராக 1972 ஆம் ஆண்டு ஆரம்ப நியமனம் பெற்ற இவர், அநுராதபுரம் மாவட்டம் நொச்சியாகம முஸ்லிம் வித்தியாலயம், கலாவெவ முஸ்லிம் வித்தியாலயம், அக்கரைப்பற்று அல்பாத்திமியா வித்தியாலயம், அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) ஆகியவற்றில் தனது ஆசிரியர் பணியை மேற்கொண்டார்.



1977,1978 ஆகிய இரு ஆண்டு கால ஆசிரியர் பயிற்சியை அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நிறைவேற்றிக் கொண்ட மௌலவி அப்துல் லத்தீப் அரச தொழிலிலிருந்து தனது ஓய்வு காலத்திற்கு முன்னரேயே ஓய்வு பெற்று அட்டாளைச்சேனையில் அமைந்துள்ள கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியில் போதனாசிரியராக இணைந்ததன் பின்னர் அதனைத் தொடர்ந்து அங்கு அதிபராகவும் நீண்டகாலம் பணிபுரிந்தார்.

தர்ஹா நகர் அல்முஅய்யிதுல் இஸ்லாம், அக்கரைப்பற்று மன்பஉல் கைறாத், பேருவளை கெச்சிமலை அல் அஷ்றபிய்யா ஆகிய அறபுக் கல்லூரிகளின் அதிபராகவும் பணியாற்றினார்.

தஃவாப் பணியில் நீண்டகாலமாகத் தன்னை அர்ப்பணித்து அக்கரைப்பற்று ஜம்மியதுல் உலமாவின் செயலாளராகவும், அதன் பின்னர் தலைவராகவும், அக்கரைப்பற்று ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் தொடர்ந்தேர்ச்சியான காலம் பேஷ் இமாமாகவும், கதீப் ஆகவும் கடமையாற்றிய பெருமையும் இவரைச் சாரும்.

பயன்மிக்க நூல்கள் இவரால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன. சுமார் 50 வருடங்கள் அக்கரைப்பற்று உலமா சபையின் தலைவராகவும், செயலாளராகவும் செயற்பட்ட இவர், 2023.05.26 ஆம் திகதி தலைமைத்துவப் பணியிலிருந்தும் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

**எம்.எஸ்.எம்.றிஸ்வான்**
அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



# மலைச்சாரல்

## நிலத்தடி நீரின் தரம் குறைவடைவு

# ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள சீனா இணக்கம் தெரிவிப்பு–அமைச்சர் ஜீவன்



இலங்கையில் நிலத்தடி நீரின் தரம் குறைவடைந்துள்ளதால் மக்களுக்கு சுகாதார ரீதியில் ஏற்படும் பாதிப்புகளை இனங்கண்டு கொள்வதற்கான ஆய்வு நடவடிக்கையை பரந்தளவில் மேற்கொள்வது தொடர்பிலும், தீர்வுகளை பெறுவது சம்பந்தமாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஐ.நாவின் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் நாட்டில் நீர் மற்றும் சுகாதாரத்தை உகந்த மட்டத்தில் பேணுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் தேசிய முயற்சியை வலுப்படுத்துவதற்கு அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன், சீன ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான அகாடமியால் நாட்டில் பல விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நீர் வழங்கல் சபையின் புதிய கட்டடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் சிறப்பு அதிதிகளாக சீன ஆராய்ச்சி மற்றும் அறிவியல் அகாடமி பேராசிரியர் Min Yang, பேராசிரியர் Wei Yuansong, பேராசிரியர் Yawei Wang உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இலங்கையில் குடிநீரின் தரத்தை மேம்படுத்துவதற்காக உலகின் அதியுயர் தொழில்நுட்பத்தை வழங்கி, அனைத்து வசதிகளுடன் கூடிய ஆய்வு கூடங்கள், புதிய ஆராய்ச்சி சாதனங்கள், சுத்திகரிப்பு இயந்திரங்கள், இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்படுகின்ற சீனாவின் நடவடிக்கைக்கு அரசின் சார்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நன்றிகளை தெரிவித்தார்.

சீன இலங்கை கூட்டு நீர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் எமது நாட்டில் நீர் வழங்கல் மற்றும் நிலத்தடி நீர் தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சிக்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# நாட்டில் பிரச்சினைகள் இருப்பதையே எதிர்க்கட்சி விரும்புகிறது

## ஐ.தே.க. உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம்

**மாவத்தகம தினகரன் நிருபர்**

நாட்டில் தொடர்ந்து பிரச்சினை இருக்க வேண்டும். அதை கொண்டு அரசியல் செய்ய வேண்டும் என்ற அவா எப்பொழுதும் எதிர்க்கட்சிகளுக்கு இருந்து கொண்டிருக்கிறது என ஐ. தே.க. உப தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் தொடங்கஸ்லந்த தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கான பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து பேசிய அவர்,..

இந்நாடு பொருளாதார விழ்ச்சியில் இருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்நாட்டை பொறுப்பேற்றார். அவருடைய ஆட்சியின் கீழ் இன்று எரிபொருள் வரிசையில்லை. எரிவாயு வரிசையில்லை, 18 மணித்தியால மின் வெட்டு இல்லை.

இன்னும் சொற்ப காலங்களில் வங்கியில் உள்ள வட்டி விகிதங்களும் படிப்படியாக குறைக்கப்படும். மீண்டும் நல்லதொரு சுபீட்சமான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு ஜனாதிபதியின் சிறந்த அரசியல் அனுபவமும் ஏனைய நாடுகளுடன் இருந்த நல்லுறவும்தான் காரணம். ஆனால் எதிர்க்கட்சியினர் இவ்வாறானதொரு இக்கட்டான நிலையிலுள்ள நாட்டை கட்டியெழுப்பியவர் பற்றி ஆதரவாகப் பேசாமல் இன்றும் அடிப்படை அரசியலைப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இன்று பெற்றோல் டீசல் வரிசை தொடர்ந்து இருக்க வேண்டும் ஐ. எம்.எப். கிடைக்கக் கூடாதென்ற ஆசை எதிர்கட்சிக்கு இருக்கிறது. அடிப்படையில் வங்குரோத்து நிலையிலுள்ள அரசியல் கட்சிகள் தான் இவை பற்றி பேசுகின்றன என்றார்.

# அக்குறணை தாக்குதல் சம்பவத்தில் 7பேர் கைது

**அக்குறணை குறூப் நிருபர்**

அக்குறணைப் பிரதேசத்தில் காணி ஒன்றை குத்தகைக்காகப் பெற்று அதில் வசித்த ஒருவரை தாக்கி அவரிடம் இருந்து சுமார் நான்கு இலட்ச ரூபா பணத்தையும் பெறுமதி மிக்க கையடக்கத் தொலைபேசி ஒன்றையும் களவாடியதாக அளவத்து கொடைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அக்குறணைப் பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி காணி இரண்டரைப் பேர்ச்சஸ் பரப்பையுடையது என்றும் அதற்கு உரிமையாளர்கள் மூவர் இருந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளதோடு, சம்பவ தினத்தில் ஒரு கோஷ்டியினர் வந்து அதில் குடி இருந்தவரைத் தாக்கி அவரிடமிருந்த பணம் மற்றும் பெறுமதியான கையடக்க தொலைபேசி என்பவற்றை கொள்ளையிட்டதுடன் அவரைக் கடுமையாக தாக்கியதாகவும் மாத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட அளவத்துகொடைப் பொலிசார் சந்தேகத்தில் 7 பேரைக் கைது செய்துள்ளதோடு மேலதிக விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

# வீட்டுப் பணியாளர் ராஜகுமாரிக்கு நீதிக்கோரிய போராட்டம்

**புசல்லாவை தினகரன் நிருபர்**



வீட்டுப் பணியாளர் ஆர். ராஜகுமாரிக்கு நீதிக்கோரிய போராட்டம் புசல்லாவை இரட்டைப்பாதை நகரில் சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட அதிகாரி ஆர். சண்முக தீபாவின் தலைமையில் நடைபெற்றது.

நயாபனை மற்றும் அட்டப்பாகை கிராம அபிவிருத்தி சங்க கூட்டமைப்புகளும் இப் போராட்டத்தில் ஒன்றிணைந்தன.

பதுளையை வசிப்பிடமாக கொண்ட வீட்டுப் பணிபுரிந்த இவர் கடந்த 2023 மே மாதம் பதினோராம் திகதி அவரது தொழில் வழங்குனரான சுதர்மா நித்திக்குமாரா என்பவரின் வீட்டில் தங்க மோதிரம் ஒன்றை திருடிய குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டதாகவும் அதன் பின்னர் வெளிக்கடை பொலிசில் சிறைகாவலில் இருந்தபோது விசாரணைகள் நடைபெற்ற வேலையில் இறந்ததாக செய்திகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இதுபோன்ற மரணங்கள் இடம்பெறுவது ஒரு சாதாரண விடயமாகவே உள்ளதுடன் கடந்த காலங்களில் இது போன்ற சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. இவ்வாறு மரணித்த வீட்டு பணியாளர் ஆர். ராஜகுமாரியின் மரணத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு பக்க சார்பின்றி உயர் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

மேலும் வீட்டுப் பணியாளர்களின் விபரத்தை தொழிற் திணைக்களத்திற்கு வழங்கும் வகையில் சட்டம் கொண்டுவர வேண்டும் என்ற பல கோஷங்களுடன் இப் போராட்டம் நடைபெற்றது.

# பேராதனை பல்கலை 80 வருடம் பூர்த்தி

## ஜுலை 1 முதல் மக்கள் பார்வைக்கு

**அக்குறணை குறூப் நிருபர்**

பேராதனைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 80 வருடம் பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் ஜூலை மாதம் 1ம் திகதி 'ஓபன்டே' எனக் குறிப்பிட்டு பொதுமக்கள் பார்வைக்காக பல்கலைக்கழகம் திறந்து விடப்படவுள்ளதாக பல்கலைக்கழக பதில் உபவேந்தரும் ஊடக பேச்சாளருமான ட்ரஸ் மதுஜித் தெரிவித்தார்.

இயற்கை வனப்பு நிறைந்த பாரிய நிலப்பரப்பில் அமைந்துள்ள இப் பல்கலைக்கழகம் தென்கிழக்காசியாவில் உள்ள பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக இருப்பதுடன், சர்வதேச ரீதியில் பேசப்பட்டு வரும் ஒரு பல்கலைக்கழகமாகவும் காணப்படுகிறது. பல்வேறு வளங்களும், பீடங்களும் அதற்கான கட்டடங்களும் ஒரே பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கையின் ஒரே ஒரு பல்கலைக்கழகம் என்று கூறுமளவு அது வியாபித்துள்ளது. ஆசியாவில் உள்ள மிகப்பெரிய வாசிகசாலையும் இங்கு அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.


### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட இல. 7 இன், பிரிவு 11 (5) இன் பிரகாரம், பிரண்டிக்ஸ் லங்கா லிமிடெட் எனும் நாமத்தை பிரண்டிக்ஸ் லங்கா (பி வி டி) எல்ரிடி என மாற்றம் செய்துள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

நிறுவனத்தின் முன்னைய பெயர்:
பிரண்டிக்ஸ் லங்கா லிமிடெட்

நிறுவனத்தின் பதிவு இல.
PB265

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
25, ரெயின்லண்ட் பிளேஸ், கொழும்பு 03.

நிறுவனத்தின் புதிய பெயர்:
பிரண்டிக்ஸ் லங்கா (பி வி டி) எல்ரிடி

பணிப்பாளர் சபையின் ஆணையின் பிரகாரம்
பிரண்டிக்ஸ் மெனேஜ்மன்ட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் செயலாளர்கள்.

2023 ஜூன் மாதம் 13 ஆம் திகதியன்று


# இரதல்லை–கிறேட்வெஸ்டன் பகுதியில் ரயிலில் மோதி அதிபர் பலி

**ஆர்.ரமேஸ்**



நானு ஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரதல்லை கிறேட்வெஸ்டன் ரயில் நிலையத்திற்கு இடைப்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பயணிகள் ரயிலில் மோதுண்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நானு ஓயா பொலிசார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் சம்பவத்தில் நுவரெலியா கல்வி வலயத்திற்கு உட்பட்ட நானு ஓயா இரதல்ல தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றும் அதிபர் கதிர்வேலு சுப்பிரமணியம் (வயது 52) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்காக பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு மீண்டும் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் தான் கடமையாற்றும் பாடசாலையை பெற்றோர்களின் பங்களிப்புடன் சிரமதான நடவடிக்கையை மேற்கொண்ட பின் தனது வதிவிடமான லூசா கல்கந்தை தோட்டத்திற்கு வழமை போல ரயில் பாதையில் நடந்து சென்ற வேளையில் ரயிலில் மோதி வீசப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதேநேரத்தில் ரயில் நிறுத்தப்படாமல் சென்றுள்ளதாகவும் பின் ரயில் பாதை கண்காணிப்பு ஊழியர் ஒருவரால் அதிபரின் உடல் கிடந்ததை கண்டு நானு ஓயா ரயில் நிலையம் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு விசாரணைகளின் பின் வீட்டாரிடம் கையளிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## க.பொ.த சாதாரண தரம் கல்வியின் நிறைவு நாள் அல்ல

# மாணவர்களின் மனநிலை மாற்றியமைக்கப்பட வேண்டும்

**நுவரெலியா தினகரன் நிருபர்**



க.பொ.த சாதாரண தர பரீட்சையின் பின்பு மாணவர்கள் நடந்து கொள்ளும் விதம் கவலைக்குரியதாகவும் மனவேதனை தருவதாகவும் அமைந்துள்ளது. இவ் விடயம் தொடர்பாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பாக தற்பொழுது அனைத்து தரப்பினரும் பேசுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையானது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

தான் கல்வி கற்ற பாடசாலையின் தளபாடங்களையும் ஏனைய பொருட்களையும் சேதப்படுத்துவதாக இருந்தால் அவர்களின் மனநிலை எவ்வாறு இருக்கின்றது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

க.பொ.த சாதாரண தரம் என்பது கல்வியின் நிறைவு நாள் அல்ல. அடுத்த கட்டத்தை நோக்கிய ஒரு பயணம். இவ்வாறான செயல்களை செய்துவிட்டு மீண்டும் எவ்வாறு உயர்தரம் கற்பதற்கு அந்த பாடசாலைக்கு மாணவர்கள் வருகை தருவார்கள் என்பது பெரும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இவ்வாறு மாணவர்கள் நடந்து கொள்வதற்கு யார் காரணம். யாருடைய கோபத்தை இவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள். அண்மைய காலங்களிலேயே இவ்வாறான செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

அதே நேரத்தில் சில மாணவர்கள் தாங்கள் கல்வி கற்ற பாடசாலையை வணங்கிவிட்டு செல்வதையும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

அவ்வாறு பாடசாலையை வணங்கிவிட்டு சென்ற மாணவர்களை மீண்டும் பாடசாலைக்கு அழைத்து அவர்களை கௌரவப்படுத்த வேண்டும். அவர்கள் அதனை செய்வதற்கான மனநிலை எவ்வாறு ஏற்பட்டது என்பதை ஏனைய மாணவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் அதனை சமூக மயப்படுத்த வேண்டும்.

இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் இதன் பிரதிபலிப்பானது தொடர்ந்தும் அடுத்தடுத்த பரீட்சைகளிலும் வெளிப்படும். எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட இல. 7 இன், பிரிவு 11 (5) இன் பிரகாரம், 2023 மார்ச் மாதம் 15ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், பிரண்டிக்ஸ் அப்பரல் சொலூஷன்ஸ் லிமிடெட் எனும் நாமத்தை பிரண்டிக்ஸ் அப்பரல் சொலூஷன்ஸ் (பி வி டி) எல்ரிடி என மாற்றம் செய்துள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

நிறுவனத்தின் முன்னைய பெயர்:
பிரண்டிக்ஸ் அப்பரல் சொலூஷன்ஸ் லிமிடெட்

நிறுவனத்தின் பதிவு இல.
PB185

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
25, ரெயின்லண்ட் பிளேஸ், கொழும்பு 03.

நிறுவனத்தின் புதிய பெயர்:
பிரண்டிக்ஸ் அப்பரல் சொலூஷன்ஸ் (பி வி டி) எல்ரிடி

பணிப்பாளர் சபையின் ஆணையின் பிரகாரம்
பிரண்டிக்ஸ் மெனேஜ்மன்ட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் செயலாளர்கள்.

2023 ஜூன் மாதம் 13 ஆம் திகதியன்று

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட இல. 7 இன், பிரிவு 11 (5) இன் பிரகாரம், பிரண்டிக்ஸ் அப்பரல் லிமிடெட் எனும் நாமத்தை பிரண்டிக்ஸ் அப்பரல் (பி வி டி) எல்ரிடி என மாற்றம் செய்துள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

நிறுவனத்தின் முன்னைய பெயர்:
பிரண்டிக்ஸ் அப்பரல் லிமிடெட்

நிறுவனத்தின் பதிவு இல.
PB85

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
25, ரெயின்லண்ட் பிளேஸ், கொழும்பு 03.

நிறுவனத்தின் புதிய பெயர்:
பிரண்டிக்ஸ் அப்பரல் (பி வி டி) எல்ரிடி

பணிப்பாளர் சபையின் ஆணையின் பிரகாரம்
பிரண்டிக்ஸ் மெனேஜ்மன்ட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் செயலாளர்கள்.

2023 ஜூன் மாதம் 13 ஆம் திகதியன்று


# நுவரெலியா உதைப்பந்தாட்ட சங்கத்தின் லீக் போட்டியில் வெற்றி பெற்ற அணிகள்

**ஆ. ரமேஸ்**

நுவரெலியா உதைப்பந்தாட்ட சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான லீக் போட்டி தொடரில் வெற்றி பெற்ற அணிகளுக்கான பரிசளிப்பு விழா மற்றும் 2022 2023 ஆம் ஆண்டுக்கான தங்க கிண்ணம் மற்றும் வெள்ளி கிண்ணங்களுக்கான போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கான பரிசளிப்பு விழாவும் நுவரெலியா மாநகர சபை பொது மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளணத்தின் முன்னால் தலைவர் ஜஸ்வர் உமர் தலைமையில் இடம்பெற்ற இப் பரிசளிப்பு விழாவில் பல முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட கால்பந்தாட்ட அணிகளும் கலந்து கொண்டன. இதன்போது இடம் பெற்ற தங்கக் கிண்ண இறுதிப் போட்டியில் நுவரெலியா யங் பேர்ட்ஸ் மற்றும் யங்யுனைடெட் அணிகள் மோதின, இதில் யங் பேர்ட்ஸ் அணி 10 என வெற்றி பெற்றது.

தங்கக் கிண்ணத்தை வென்ற யங் பேர்ட்ஸ் அணியின் சிறந்த விளையாட்டு வீரராக வி. விவேக் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த கோல் காப்பாளராக யங் யுனைடெட் அணியின் ரஹீம் தெரிவு செய்யப்பட்டார்.




இப் போட்டி தொடரில் வெள்ளி கிண்ணத்தை ஸகிராப் தோட்டத்தை சேர்ந்த சன் பேர்ட்ஸ் அணியினர் பெற்றுக் கொண்டனர் இதில் சிறந்த விளையாட்டு வீரராக ஜே. ஸ்டீபன் ராஜ் மற்றும் சிறந்த கோல் காப்பாளராக வி .எஸ். கார்த்திக் தெரிவு செய்யப்பட்டனர். அதே வேளை "ஏ" பிரிவிற்கான போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட அணியாக நேஸ்பி லேக் சைட் அணியினரும், "பி" பிரிவிற்கான போட்டியில் முதலாம் இடத்தை ஹைபோரெஸ்ட் அணியினரும்,"சி" பிரிவுக்கான போட்டி தொடரில் பிரண்ட்ஸ் அணியினரும் பதக்கங்களை பெற்றுக் கொண்டனர்.

போட்டிகளில் "ஏ" பிரிவு சார்பாக சிறந்த விளையாட்டு வீரராக நேஸ்பி அணி சார்பாக பிரவீன் குமாரும் "பி" பிரிவு போட்டியில் வினோத்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.





ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய நிர்வாகமும், இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்திய பண்ணிசைக் கருத்தரங்கு நிகழ்வு கடந்த 7ஆம் திகதி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ் நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தேவார இசைப் பேராசிரியர் முனைவர் பாலச்சந்தர் திருஞானசம்பந்தர், மற்றும் தமிழ் நாடு தஞ்சாவூர் பல்கலைக்கழக பண்ணிசை விரிவுரையாளர் கலாநிதி சிவகௌரி இருவரும் பண்ணிசை கருத்தரங்கு வழங்குவதையும் ஆலய நிர்வாகத்தால் வழங்கப்பெற்ற பொன்னாடை கௌரவத்தையும் கலந்து கொண்ட இந்து சமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர், ஆலய நிர்வாகிகள் மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களையும் மாணவர்களையும் காணலாம்.

# தேர்தலை உடன் நடத்த SJB கட்சி வலியுறுத்து

## எரான் விக்ரமரத்ன MP ஊடகங்களுக்கு கருத்து



கடந்த வருடம் புரட்சியால் மக்கள் ஆணையை இழந்த பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடம் புரட்சி ஒன்று இடம்பெற்றது. அந்தப் புரட்சியின் விளைவாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலக்கப்பட்டார். அவர் சட்டரீதியான ஜனாதிபதி. அப்படி இருந்தும் அவருக்கான அங்கீகாரம் இல்லாமல் போனது.

பாராளுமன்றத்துக்கும் இதே நிலை தான். இதனால் மக்கள் விரும்புகின்றவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதற்கு மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட பாராளுமன்றத்தால்தான் நாட்டைச் சரியாக இட்டுச் செல்ல முடியும். இதனால் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம் என்றார்.

### போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின்

# ரிட் மனு ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் காலஅவகாசம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தம்மைக் கைது செய்வதை தடை செய்யும் வகையில் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி சர்ச்சைக்குரிய போதகர் ஜெரோம் பெர்னாண்டோவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனு தொடர்பில் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது. மேற்படி மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றுள்ள போது சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சமிந்த விக்ரம போதகர் ஜெரோம் பெர்னண்டோவின் வேண்டுகோள் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அதனையடுத்து அவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கு எதிர்வரும் 14 ஆம் திகதி வரை சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் காலஅவகாசம் வழங்கியுள்ளது.

மேற்படி மனு மீதான விசாரணையை எதிர்வரும் 15 ஆம் திகதி மேற்கொள்வதற்கும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## நச்சுத்தன்மை... 02ஆம் பக்கத் தொடர்

சுகாதாரப் பரிசோதகர்கள் அவர்கள் உட்கொண்ட உணவு மாதிரிகளை பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளதுடன் களுவாஞ்சிகுடி பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 19 வயதுடைய பெண்ணும், மூன்றரை வயது சிறுவனும் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேல், மத்திய... 02ஆம் பக்கத் தொடர்

வட மத்திய மாகாணங்களில் மிக வேகமாக பரவுவதாகவும் அது மேல் மற்றும் மத்திய மாகாணத்திலும் பரவ ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனைக் கருத்திற்கொண்டு இந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வரை மாட்டிறைச்சியை உண்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அந்தச் சங்கம் மற்றும் சுகாதார திணைக்களமும் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

## சர்வதேச விண்வெளி... 02ஆம் பக்கத் தொடர்

மாணவனான விஜேந்திரகுமார் அர்ச்சிகன் அனுப்பிய செயற்றிட்டத்தை NSS அங்கீகரித்து, அவரை வெற்றியாளராக அறிவித்துள்ளதோடு, அமெரிக்காவில் உள்ள டெஸ்ரா மாநிலத்தில் NSS அமைப்பின் தலைமையில் இடம்பெற்ற அறிவியல் மாநாட்டிற்கும் அவர் அழைக்கப்பட்டிருந்ததுடன், அங்கு உரையாற்றும் வாய்ப்பும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

## பயணச்சீட்டை மாற்றி... 02ஆம் பக்கத் தொடர்

முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்துள்ளார். இதேவேளை, நேற்றைய தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் பந்துல குணவர்தன, குறித்த சம்பவம் தொடர்பில் விரிவான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவித்தார்.

## ஆசிய விஞ்ஞானிகள்... 02ஆம் பக்கத் தொடர்

ஆகியோருடன் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

கலாநிதி ரோஹான் பெத்தியகொட விலங்கியல் துறையில் 2022 லின்னியன் பதக்கத்தை வென்றார், மேலும் பதக்கம் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையைப் பெற்றார். இலங்கையில் பல்லுயிர் பாதுகாப்பில் அவரது நிலையான ஆராய்ச்சி, எழுத்து மற்றும் வாதிட்டதற்காக அவர் அங்கீகரிக்கப்பட்டார்.

சதுரங்க ரணசிங்க 2022 ஆம் ஆண்டில் 7ஆவது ஷேக் ஃபஹாத் ஹிரோஷிமாஆசியா விளையாட்டு மருத்துவம் மற்றும் அறிவியல் விருதைப் பெற்றார். இந்த விருது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆசியாவைச் சேர்ந்த மருத்துவ நிபுணருக்கு விளையாட்டு மருத்துவத்தில் அவர்களின் பங்களிப்புக்காக வழங்கப்படுகிறது.

அஷானி சவிந்த ரணதுங்க, கைத்தொழில் மற்றும் விவசாய கழிவுகளை பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றியமைக்கும் மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த நிர்மாண மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கு மூலப் பொருட்களாக பயன்படுத்துவதற்கும் 2022 OWSDElsevier அறக்கட்டளை விருதைப் பெற்றுள்ளார்.




## தேசிய பாடசாலைகளை...

02ஆம் பக்கத் தொடர்

என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த (11) தெரிவித்துள்ளார் .

சில தேசிய பாடசாலைகளின் செயற்பாடுகள் பல வருடங்களாக கண்காணிக்கப்படவில்லை எனவும், சில தேசிய பாடசாலைகள் பெயருக்கு மாத்திரம் இயங்கும் நிலை காணப்படுவதால் அதற்கான தேவை குறைந்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## வடக்கில் மக்கள்...

சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று (12) இச்சந்திப்பு நடைபெற்றுள்ளது. வடக்கு மாகாண ஆளுநராக இருந்த ஜீவன் தியாகராஜா ஜனாதிபதியால் நீக்கப்பட்டு புதிய ஆளுநராக சார்ள்ஸ் நியமிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் முதல் தடவையாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

## பொரளையில் பொலிஸ், ...

பேரும், கஞ்சாவுடன் ஆறு சந்தேக நபர்களும் இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும், 2 வாள்களை வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்களும், பிடியாணை நிலுவையில் உள்ள இரண்டு சந்தேக நபர்களும், மேலும் 19 சந்தேக நபர்களும் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரிடமிருந்து ஹெரோயின் கடத்தல் மூலம் சம்பாதித்ததாக கருதப்படும் 26 இலட்சம் ரூபா பணமும் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட ஒருவரிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டியதாக கருதப்படும் 215,000 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் நேற்று (12) புதுக்கடை மற்றும் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவிருந்தனர்.

## ரஷ்ய சுற்றுலா....

முன்தினம் (11) கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்த கலந்துரையாடலானது திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போது ரஷ்ய தூதுவர் கிழக்கு மாகாணத்தின் சமீபத்திய அபிவிருத்திகள் குறித்தும் ஆளுநருடன் கலந்துரையாடியுள்ளார்.

## டிப்பர் வண்டியுடன்...

வாகனமொன்றும் முச்சக்கர வண்டியொன்றும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றதாகவும், அந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் மகனும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் தனுஷ்க கயான் பின்னவல, தினேஷா ஸ்ரீநானி கம்லத்கே, கீத்ம தத்சர பின்னவல ஆகிய மூவருமே உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி மூவரும் முச்சக்கர வண்டியில் காலி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள மரண சடங்கில் கலந்து கொண்டு மீண்டும் வீடு திரும்பும் போது வரக்காபொல துல்கிரிய பிரதேசத்தில் வைத்து முச்சக்கரவண்டி திடீரென்று தவறான திசையில் பயணித்துள்ள நிலையில் கொழும்பிலிருந்து பயணித்த மணல் டிப்பருடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

டிப்பர் வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அருகிலுள்ள வீடொன்றில் பொறுத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கமரா பதிவுகளைப் பெற்றுக் கொண்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கொச்சிக்கடை புனித....

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய திருவிழா கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது நாட்கள் நவநாள் வழிபாடுகள் இடம் பெற்று நேற்றைய தினம் வெஸ்பர்ஸ் ஆராதனை பேராயரின் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு அந்நிய....

வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளோரிடமிருந்து அந்நிய செலாவணியாக 2,346. 9 மில்லியன் அமெரிக்கன் டொலர் வருமானமாக கிடைத்துள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது. அதற்கிணங்க கடந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் நாட்டுக்கு கிடைத்துள்ள 1,335. 6 மில்லியன் டொலர் வருமானத்துடன் ஒப்பிடுகையில் இந்த தொகை 75 .7 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி தேர்தல்...

விரைவில் இடம்பெறும் என்ற நிலை காணப்படாத போது வேட்பு மனுவை ரத்துச் செய்து தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் மீள வேட்பு மனுவை கோருவது மிகவும் பொருத்தமானது என அந்த குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆளும் கட்சி மற்றும் எதிர் கட்சிகளின் பிரதிநிதிகள், அமைச்சர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். அதற்கிணங்க உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுவை ரத்துச் செய்வதற்கான சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அந்த அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அதன்போது தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளனர். நாடளாவிய ரீதியிலுள்ள 340 உள்ளூராட்சி சபைகளுக்காக 8,711 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு கடந்த ஏப்ரல் மாதத்தில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதற்காக வேட்பாளர்கள் 80,672 பேர் முன்வந்திருந்தனர். அந்த வகையில் 24 மாநகர சபை 41 நகர சபை 275 பிரதேச சபை ஆகியவற்றுக்காகவே இவர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரு தினங்கள்....

காய்ச்சலைக் கட்டுப்படுத்த பரசிட்டமால் மருந்தை உட்கொள்ளலாம் என்றாலும் டிஸ்பிரின், அஸ்பிரின் அல்லது இதுபோன்ற மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் டிஸ்பிரின் அல்லது அஸ்பிரின் போன்ற மருந்துகளை உட்கொண்டால் அது கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்றும் ஹரித அலுத்கே குறிப்பிட்டார். இரண்டாவது நாளில் காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்றால், மருத்துவ உதவியை நாட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## டெங்கு அபாய....

அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் நேற்று வரையான காலப் பகுதியில் டெங்கு நோயாளிகள் 43,346 பேர் பதிவாகியுள்ளதுடன் 25 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, நாட்டில் டெங்கு நோயினால் பதிவாகியுள்ளோரின் எண்ணிக்கையில் 25 வீதமானோர் சிறுவர்கள் என்றும் அதனைக் கவனத்திற்கொண்டு பாடசாலைகளில் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவின் விசேட மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, டெங்கு நோய் பரவல் தொடர்பில் நேற்றைய தினம் டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதற்கிணங்க நாட்டில் 67 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி. குருநாகல் மற்றும் புத்தளம் உள்ளிட்ட ஆறு மாவட்டங்களிலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 9,638 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்த நிலையில் இம் மாதத்தில் கடந்த 10 நாட்களுக்குள் 3,557 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கைக்கிணங்க, கொழும்பில் 9,257 பேரும் கம்பஹாவில் 9,638 பேரும் களுத்துறையில் 2,759 பேரும் கண்டியில் 2,478 பேரும் குருநாகலில் 1,555 பேரும் புத்தளத்தில் 2,634 பேரும் டெங்கு நோயாளர்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும்

இந்த மாத இறுதிக்குள் அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது மழையுடனான காலநிலை தொடரும் நிலையில் நுளம்பு பெருகும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் அதனைக் கவனத்திற்கொண்டு நீர் தேங்கியுள்ள பகுதிகளைக் கண்டறிந்து அவற்றை சுத்தப்படுத்துவதன் மூலம் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நுளம்பு உருவாகுதல் அதிகரித்துள்ளதாகவும் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசம் மற்றும் கொத்தட்டுவ பிரதேசங்களில் டெங்கு நுளம்புகள் மிக அதிகமாக காணப்படுவதாகவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித்த அலுத்கே தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, ஜூன் மாத இறுதிக்குள் டெங்கு தொற்று தீவிரமடைந்து கடுமையான தொற்றுநோய் நிலை உருவாகும் அபாயம் காணப்படுவதாகவும் அதனால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரிக்கக்கூடுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பாடசாலைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர்கள் விசேட கவனம் செலுத்துவது முக்கியமாகும்.

கடந்த வருடம் முழுவதும் 76,689 டெங்கு நோயாளர்கள் நாட்டில் பதிவாகியிருந்ததுடன் 72 மரணங்களும் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு மிக அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், மக்கள் மிகவும் அவதானமாக செயற்படவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மேல் மாகாணத்தில் எதிர்வரும் 14, 15, 16 ஆம் திகதிகளில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அமரகீர்த்தி அத்துகோரள...

கடந்த வருடம் மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவங்களின் போது மேற்படி பாராளுமன்ற உறுப்பினரும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரும் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புதிய வாக்காளர்கள்...

ஆண்டுதோறும் கிராம சேவகர்களின் பங்களிப்புடன் வாக்காளர் பதிவேடு திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது. குடிமக்கள் தங்களை வாக்காளர் பதிவேட்டில் சேர்த்துக் கொள்ளவும், திருத்தங்கள் செய்யவும் தேர்தல் ஆணையம் தற்போது வாய்ப்பளித்துள்ளது. பின்னர், அந்தந்த கிராம நிர்வாக அலுவலர்களால் சரிபார்ப்பு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்ட பின் பிரதேச செயலக கட்டிடங்களில் காட்சிப்படுத்தப்படும்.

## ஒரு மூடை யூரியா ...

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நேற்று நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 22,500 மெற்றிக் தொன் யூரியா உரத்தை பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் யூரியா உர மூடை ஒன்றின் விலையை 9 ஆயிரம் ரூபா வரை குறைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முதலுதவிச்சங்க தொண்டர்களின் கற்றல் மேம்பாட்டிற்கான உதவிகள்

*சாவகச்சேரி விசேட நிருபர்*

இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையின் தொண்டர்களின் கற்றல் மேம்பாட்டிற்காக அண்மையில் விசுவமடு பகுதியில் வைத்து ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பிரான்ஸ் நாட்டில் கராத்தே தேசிய பாடசாலை பிரதம ஆசிரியர் சுரேஷ்குமாரின் புதல்வி றிக்சிதாவின் 7ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் மற்றும் மகளிர் பிரிவு பொறுப்பாசிரியர் திருமதி ச.கேதீஸ்வரி ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.





பேருவளை ஹெட்டியாக்கந்தை 753ஏ கிராம சேவகர் பிரிவுக்கு புதிய கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அல் ஆலிமுல் பாழில் அஷ் ஷெய்ஹ் காமில் அஷ் செய்க் அஹ்மத் பின் முஹம்மத் ஆலிம் அவர்களின் வழிகாட்டலின் கீழ் இக்கட்டம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததோடு ஹெட்டியாகந்தை கிராம சேவகர் அலுவலக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வழங்கப்பட்டுள்ளது. நபவிய்யா அமைப்பினதும் பேருவளை நகர சபை முன்னாள் உறுப்பினர் பௌஸுல் அமீர், சமூக சேவையாளர்களான எம்.என்.எம் நிஹார், முஹம்மத் இஸ்மாயில் ஆகியோரின் ஏற்பாட்டில் திறப்பு விழா நிகழ்வு இம்பெற்றதோடு பேருவளை பிரதேச செயலாளர் ரன்ஜன் பீ பெரேரா பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். படம்: பேருவளை விசேட நிருபர்

# நைஜீரியாவில் தடுத்து வைக்கப்பட்ட இந்திய மாலுமிகள் விடுவிப்பு

## கொச்சி திரும்பிய மாலுமிகள் இந்திய அரசுக்கு பாராட்டு

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 'எம் டி ஹீரோயிக் இதுன்' என்ற எண்ணெய் தாங்கிக் கப்பல் நைஜீரிய கடற்படையால் தடுத்து வைக்கப்பட்டது.

முதலில் ஈகுவடோரியல் கினி நாட்டிலும் பின்னர் நைஜீரியாவிலும் இக் கப்பலும் 16 இந்திய மாலுமிகளும் தடுத்து வைக்கப்பட்டதையடுத்து இந்திய மத்திய அரசு மேற்படி நாடுகளில் உள்ள தமது தூதரகங்களின் மூலம் தொடர்ந்து நடத்திய பேச்சுவார்தைகளையடுத்து அவர்களை கடந்த வாரம் கேரளாவின் கொச்சி விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கொச்சி விமான நிலையத்தில் மாலை அணிவிக்கப்பட்டு மாலுமிகளின் குடுத்தாரால் வரவேற்கப்பட்டனர். பின்னர் ஊடகங்களின் கேள்விகளுக்கு பதிலளித்த சானுஜோஸ் என்ற மாலுமி, எமக்கு என்ன நடக்குமோ என தாம் அச்சத்தில் சூழ்ந்திருந்ததாகவும், உயிராபத்து ஏற்படலாம் என அஞ்சியதாகவும் தெரிவித்ததோடு இந்திய அரசும் கேரள அரசும் மேற்கொண்ட முயற்சிகளுக்கு நன்றி தெரிவிப்பதாகக் கூறினார்.

நைஜீரிய கடற்படை மீது குற்றச்சாட்டு, எண்ணெய் திருட்டு உட்பட பல குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தன. இந்திய அரசின் தலையீட்டையடுத்து அவர்கள் சிறைக் காவலில் வைக்கப்படாமல் கப்பலிலேயே தங்க அனுமதிக்கப்பட்டதோடு உணவுப் பொருட்களும் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டது. வீட்டாருடன் தொடர்பு கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டது. பின்னர் கப்பல் நிறுவனத்தோடு தொடர்பு கொண்ட இந்திய அரசு வழக்கு விசாரணை நடைபெறுவதில் ஒருங்கிணைந்து செயல் பட்டது.



பேருவளை நியூஸ் குழுமத்தின் நிர்வாக அங்கத்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மக்கார் ,அகில இலங்கை ஜமியத்துல் உலமா சபையின் பொருளாளர் கலாநிதி மௌலவி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி), பேருவளை முன்னாள் நகர பிதா மஸாஹிம் மொஹமட் மற்றும் பேருவளை பிரதேச மூத்த கல்விமான்கள் , புத்திஜீவிகள் இடையிலான சந்திப்பொன்று பேருவளை மருதானை அரப் வீதியில் உள்ள முன்னாள் சபாநாயகர் தேசமான்ய எம்.ஏ. பாக்கீர் மாக்காரின் இல்லத்தில் நடைபெற்ற போது,...



யாழ்ப்பாணம் அராலி ஆவரம்பிட்டி அம்பாள் ஆலய சங்காபிஷேகம் நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (படம் ;யாழ்.விசேட நிருபர் )


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.06.11
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5142 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,343,808.00
ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கங்கள் 5 2 2 4 3 7

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1172 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,489,311.60
ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கங்கள் 14 30 37 63

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 451 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,311,025.40
வெற்றி இலக்கினம் ரிஷபம் | வெற்றி இலக்கங்கள் 11 34 42 62 | விசேட இலக்கினம் ரிஷபம்

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3384 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,953,610.00
ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கங்கள் 37 47 53 54

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1490 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 328,734,662.00
ஆங்கில எழுத்து A | சுப்பர் இலக்கம் 24 | வெற்றி இலக்கங்கள் 03 29 61 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1597 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,309,813.12
வெற்றி இலக்கினம் மீனம் | வெற்றி இலக்கங்கள் 4 7 9 5 3 7


# கண்டியில் 275 கடவுச்சீட்டுகளுடன் ஒருவர் கைது

*அக்குறணை குறூப் நிருபர்*

தென்கொரியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி, நாட்டின் பல பாகங்களிலும் உள்ள நபர்களிடமிருந்து 275 கடவுச்சீட்டைப் பெற்றுக் கொண்ட நபர் ஒருவர் கண்டி கெட்டம்பே பகுதியில் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி தங்கொல்ல வீதியில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு காரியாலயம் ஒன்றை பொலிசார் சுற்றி வளைத்து மேற்படி கடவுச் சீட்டுக்களை கைப்பற்றி உள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பு தேடுதலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மற்றும் பொலிசாரும் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

தென்கொரியாவுக்கு வேலையாட்களை அனுப்ப இந்த வேலைவாய்ப்பு நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் தேடுதல் மேற்கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.


# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கீழ் குறிப்பிடப்படும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டிருக்கும் முகவரிகளுக்கு அஞ்சலிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

| தொடர் இல. | பரீட்சை | நடைபெறும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | மக்கள் வங்கியின் உதவிப் பயிற்சி செயலாளர் பதிவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சை 2021 (2023) | 2023 ஜூன் 17 | கொழும்பு |

அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப் பெயர், முகவரியுடன் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையைத் தொடர்பு கொள்ளவும். இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை www.doenets.lk இணையத்தளத்தினூடாக பதவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

தொலைபேசி :- 011-2785230/ 011-3661244/ 011-3661246
தொலைநகல் :- 011-2784232

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

5/5/2/AD/2023
நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.

2023 ஜூன் மாதம் 12ம் திகதி



ST&IS SINCE 1892
softlogic Finance

# சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி மாபெரும் வாகன ஏலவிற்பனை

88 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்
2023 ஜூன் 17 சனிக்கிழமை
இல. 463, கண்டி வீதி, களனி
என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

கார்கள்

| | | |
|---|---|---|
| CAW-9XXX | சுசூகி DAA-MH55S வெகன் R | 2017 |
| CAG-5XXX | மயிக்ரோ பண்டா LC | 2015 |
| CAI-2XXX | சுசூகி DAA-MH44S வெகன் R | 2014 |
| CAA-3XXX | டொயோட்டா அகுவா DAA-NHP10 | 2012 |
| KX -8XXX | டொயோட்டா DAA-NHP10 | 2012 |
| KK -6XXX | மாருதி அல்டோ-K10 | 2011 |
| KO -6XXX | மயிக்ரோ டிரன்ட் | 2011 |
| KI -1XXX | மயிக்ரோ டிரன்ட் | 2009 |
| KH -8XXX | லைபன் LF7160E | 2008 |
| KC -1XXX | செர்ரி QQ | 2006 |
| KE -6XXX | செர்ரி QQ | 2006 |
| KF -2XXX | மாருதி ஸ்விப்ட் ZXI | 2006 |
| KB -6XXX | டாட்டா இன்டிகோ மரினா GLX | 2005 |
| HE -0XXX | மிட்ஷுபிஷி வெராடா | 2002 |
| KD- 9XXX | ஹய்உன்டாய் அசென்ட் | 2002 |
| JM -7XXX | ஹய்உன்டாய் நுகு சொனாட்டா | 2000 |
| 302-0XXX | டேவூ நபிரா சலூன் | 1999 |
| GE -0XXX | டொயோட்டா ஹரியர் | 1998 |
| 18 -2XXX | ஹய்உன்டாய் எக்ஸி 1.5 | 1992 |

ஜீப்கள்:

| | | |
|---|---|---|
| CBK-2XXX | சுபாரு | 2014 |
| HH -7XXX | மஹின்ட்ரா பொலேரோ | 2003 |

லொறிகள்:

| | | |
|---|---|---|
| LO -4XXX | சோஜன் LF J1040G4 | 2017 |
| LP -0XXX | இசுசு TPG-NPS85AN | 2016 |
| PK -6XXX | DFSK டிரக் | 2016 |
| PY - XXX | மஹின்ட்ரா பொலேரோ மக்ஸி டிரக் | 2014 |
| PY -3XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ பிளஸ் | 2014 |
| PY -8XXX | டாட்டா ஏஸ் EX 2 | 2014 |
| PX -7XXX | டாட்டா ஏஸ் EX 2 | 2014 |
| PV -1XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2013 |
| LM -7XXX | மிட்ஷுபிஷி SKG-FEA50 nfd;IH | 2012 |
| PS -6XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2011 |
| LL -7XXX | சனி ஞுஏ டன்கர் | 2011 |
| PR -8XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ (M) | 2011 |
| PP -5XXX | மஹின்ட்ரா பொலேரோ மக்ஸி டிரக் | 2010 |
| PP -2XXX | டாட்டா ஏஸ் | 2010 |
| HG -1XXX | டைஹட்சு ஹிஜெட் | 2000 |
| 226-0XXX | நிசான் W2H41 | 1994 |

வேன்கள்:

| | | |
|---|---|---|
| PJ -0XXX | டைஹட்சு EBD-S321V | 2017 |
| 58 -6XXX | மிட்ஷுபிஷி டெலிகா | 1992 |
| 58 -3XXX | மஸ்டா பொங்கோ | 1992 |

டிப்பர்கள்:

| | | |
|---|---|---|
| LH -7XXX | டாட்டா LPK909 டிப்பர் | 2010 |
| LC -0XXX | டாட்டா NPK1615 | 2006 |
| LB -9XXX | லங்கா அசோக் லேலன்ட் கொமெட் | 2005 |
| LA -8XXX | லங்கா அசோக் லேலன்ட் கொமெட் | 2005 |
| LA -8XXX | இசுசு டம்ப் டிரக் | 1996 |

முச்சக்கர வண்டிகள்:

| | | |
|---|---|---|
| ABN-2XXX | பஜாஜ் RE | 2016 |
| ABN-7XXX | TVS கிங் | 2015 |
| ABC-2XXX | பஜாஜ் RE205 | 2015 |
| AAU-8XXX | மைகிரேட் பஜாஜ் | 2014 |
| AAS-2XXX | TVS கிங் | 2014 |
| AAS-1XXX | TVS கிங் | 2014 |
| AAM-6XXX | பஜாஜ் RE | 2013 |
| YN -2XXX | பஜாஜ் RE205 | 2011 |
| QX -5XXX | TVS கிங் | 2009 |
| QJ -6XXX | பஜாஜ் ஒட்டோ AR4S | 2007 |
| QL -0XXX | பஜாஜ் ஒட்டோ AR4S | 2007 |
| QK -7XXX | பஜாஜ் ஒட்டோ AR4S | 2007 |

மோட்டார் சைக்கிள்கள்:

| | | |
|---|---|---|
| BIT-8XXX | ஹீரோ ஹங் | 2020 |
| BIF 7XXX | ஹீரோ பிலெசர் | 2019 |
| BIT-8XXX | ஹீரோ டெஸ்டினி -125 | 2019 |
| BIC-4XXX | யமஹா அல்பா | 2019 |
| BHU-6XXX | சுசூகி பேர்க்மென் | 2019 |
| BIN 5XXX | TVS அபாச்சி 160 4V | 2019 |
| BID 1XXX | TVS விகோ | 2019 |
| BIC-3XXX | TVS என்டாக் | 2019 |
| BIC-8XXX | சுசூகி பேர்க்மென் | 2019 |
| BHZ 9XXX | ஹீரோ பிலெசர் | 2019 |
| BIE 6XXX | TVS ஸ்போர்ட் | 2019 |
| BIG 5XXX | TVS அபாச்சி | 2019 |
| BIC-1XXX | சுசூகி ஜிக்சர் | 2019 |
| BIH-8XXX | யமஹா FZ- 150 வேர்சன் 2.0 | 2019 |
| BGN-1XXX | சுசூகி இன்ட்ருடர் | 2018 |
| BGM-4XXX | சுசூகி லெட்ஸ் | 2018 |
| BIA-5XXX | ஹொண்டா நவி | 2018 |
| BHW-4XXX | ஹொண்டா CB ஹொனட் | 2018 |
| BGP-8XXX | சுசூகி ஜிக்சர் 150 | 2018 |
| BHJ-3XXX | சுசூகி ஜிக்சர் | 2018 |
| BHV-3XXX | ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ் | 2018 |
| BHB-1XXX | மஹின்ட்ரா கஸ்ட்ரோ | 2018 |
| BHC-5XXX | மஹின்ட்ரா கஸ்ட்ரோ | 2018 |
| BHF 4XXX | மஹின்ட்ரா கஸ்ட்ரோ | 2018 |
| BHW 3XXX | ஹீரோ டெஸ்டினி | 2018 |
| BHL-4XXX | ஹொண்டா ஷைன் | 2018 |
| BHF-4XXX | மஹின்ட்ரா கஸ்ட்ரோ | 2018 |
| BIB 1XXX | ஹொண்டா நவி | 2017 |
| BGZ-9XXX | மஹின்ட்ரா UZO | 2017 |
| BIB 8XXX | ஹொண்டா நவி | 2017 |
| BIA 6XXX | ஹொண்டா நவி | 2017 |
| BGW-3XXX | சுசூகி ஜிக்சர் 150 | 2011 |
| VU -3XXX | ஹீரோ ஹொண்டா | 2010 |

பார்வையிடல்
ஏல விற்பனை நடைபெறும் ஸ்தலத்தில்
2023 ஜூன் 15 வியாழன் மற்றும் 16 வெள்ளி ஆகிய தினங்களில்
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்

- **நுழைவு:** ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- **கொடுப்பனவுகள்:** விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2023 ஜூன் 20ஆந் திகதி செவ்வாய்க்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

125 Years
011 2671468
www.sandslanka.com

# கிழக்கின் குரல்



கிழக்கு ஆளுநர் முன்னிலையில்

# கதிர்காமம் காட்டுப் பாதை நேற்று திறந்துவைப்பு

**காரைதீவு குறூப், வெல்லாவெளி தினகரன், வாச்சிக்குடா விசேட, திருக்கோவில் தினகரன் நிருபர்கள்**

கதிர்காமம் ஆடிவேல் உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நேற்று (12) திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னிலையில் காலை 7.30 மணியளவில் பாதை திறக்கப்பட்டது.

இம் முறை காட்டுப்பாதையூடாக சுமார் 45 ஆயிரம் பக்தர்கள் பாதயாத்திரையை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடாத்தி ஆசியுரை வழங்கினார். அதைத் தொடர்ந்து காலை 7 மணியளவில் காட்டுப் பாதை திறக்கப்பட்டது.





இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.என். டக்ளஸ், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர், ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க, காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உகந்தையிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் வாகூரவட்டை, பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு, 12 மைல் தூரத்தில் நாவலடி, பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை, 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு, 8 மைல் தூரத்தில் கட்டகாமம், அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாக காட்டுப்பாதை 56 மைல்களை உள்ளடக்கியது .

சுமார் 6 நாட்கள் இந்த பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை.

நேற்று திறக்கப்பட்ட காட்டுப் பாதை இம் மாதம் 25 ஆம் திகதி மூடப்படுகிறது. கதிர்காம கொடியேற்றம் எதிர்வரும்19 ஆம் திகதி நடைபெற உள்ளது.

## அக்கரைப்பற்றில் நடைபெற்ற மது எதிர்ப்பு தின விழிப்புணர்வு



**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**

அக்கரைப்பற்று பிரதேச செயலக மட்டத்திலான சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவு ஏற்பாடு செய்த சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக மட்டத்தில் இடம்பெற்றது.

புகைத்தலிலிருந்து மீண்ட ஒரு கிராமம் மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் தேசம் எனும்தொனிப் பொருளிலான விழிப்பூட்டும் ஊர்வலம், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார், உதவி பிரதேச செயலாளர் யஹ்யா ராசித் மற்றும் அலுவலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச சமுதாய அமைப்பின் தவிசாளர், அங்கத்தவர்கள் இணைந்து மத்ரசா மாணவர்களின் பங்குபற்றலுடன் பிரதேச செயலக முன்றலில் ஆரம்பித்து ஊர்வலமாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வரை சென்று மீண்டும் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.

இதன்போது பிரதேச செயலக சகல உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என அனைவரும் கலந்து கொண்டு புகைத்தல் எதிர்ப்பு தேசிய விழிப்புணர்வு வேலைத்திட்டத்திற்கு ஒத்தழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## ஐஸ் போதைப் பொருள் வியாபாரி கைது

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

காத்தான்குடியில் பொலிசார் நடாத்திய திடீர் சுற்றி வளைப்பில் பிரபல ஐஸ் வியாபாரியொருவர் கைது செய்யப்பட்டதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை வஸ்த்து ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம்.சியாம் தெரிவித்தார்.

காத்தான்குடி டீன்வீதி ஜவ்பர் ஆலிம் வீதியில் இவ் வியாபாரி ஐஸ்போதை பொருளை விற்பனை செய்து கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 5850 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் ரூ.19000 பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபர் ஏற்கனவே மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிடியாணை வழங்கப்பட்டு தேடப்பட்டு வந்தவர் என்பது குறிப்படத்தக்கது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில், போதைவஸ்த்து ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம்.சியாம் தலைமையிலான பொலிஸ் குழுவினரே, இச்சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

## கல்முனையில் க.பொ.த. உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்க 30 வரை தடை

**மருதமுனை தினகரன், சாய்ந்தமருது விசேட நிருபர்கள்**

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் க.பொ.த. உயர்தர புதிய மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகளை உடனடியாக ஆரம்பிக்காமல், இம்மாதம் 30ஆம் திகதி வரை தாமதப்படுத்துமாறு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவுறுத்தியுள்ளார்.

க.பொ.த. சாதாரண தர பரீட்சை நிறைவடைந்துள்ளதையடுத்து க.பொ.த. உயர்தர டியூசன் வகுப்புகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு பல டியூட்டரிகள் ஏட்டிக்குப் போட்டியாக விளம்பரப்படுத்தியுள்ள நிலையில், அறிக்கை ஒன்றின் ஊடாக கல்முனையிலுள்ள அனைத்து தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஆசிரியர்களை அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

பரீட்சையினை நிறைவுசெய்திருக்கின்ற மாணவர்களும் பெற்றோர் மற்றும் கல்விச் சமுகத்தினரும் எம்மிடம் சுட்டிக்காட்டியமைக்கு அமைவாகவே இவ்வறிவுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயர்தர கல்விக்கான தத்தமது துறைகளை தேர்வு செய்வதற்கும் உரிய தயார்படுத்தல்களுக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு போதிய கால அவகாசமும் சுதந்திரமும் வழங்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

## பொத்துவில் வைத்தியசாலைக்கு சுகாதார சேவை பணிப்பாளர் விஜயம்



**பாலமுனை விசேட நிருபர்**

பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரின் அழைப்பின் பேரில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன சனிக்கிழமை (10) பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது வைத்தியசாலையின் விடுதி உள்ளிட்ட ஏனைய பிரிவுகளுக்கும் விஜயம் செய்து பார்வையிட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் டீ.விஜேசூரிய, ஆரம்ப பராமரிப்பு சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.எஸ்.பி.ரணசிங்க, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் மற்றும் பொத்துவில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் பீ.கார்த்திகேயன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கக்கரிக்காய் செய்கையில் ஈடுபடுவோருக்கு சலுகை

**ஏறாவூர் நிருபர்**



மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் பச்சைக் கக்கரிக்காய்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு, அரசாங்கத்தின் சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மாகாண ஆளுநர் வாரைப் பிரதேசத்திற்கு விஜயம் செய்து பச்சைக் கக்கரிக்காய் பதனிடும் தொழிற்சாலையினை பார்வையிட்டதுடன், விவசாயிகளை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடினார்.

இவ் விஜயத்தின் போது இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் விவசாயத்துறை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

வாகரைப் பிரதேசத்தில் பயிரிடப்படும் பச்சைக் கக்கரிக்காய் அப் பிரதேசத்திலேயே பதனிடப்பட்டு ஜப்பான் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 45 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இதனால் பச்சைக் கக்கரிக்காய் வெளிநாட்டு நாணயத்தினை பெற்றுத்தரும் பயிராக கருதப்படுகின்றது.

எனினும் விவசாயிகள் கக்கரிக்காய் செய்கைக்கைக்கான போதிய வசதியின்றி இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து ஆளுநர் எதிர்வரும் சில தினங்களில் ஏற்றுமதியாளர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வெளிநாடு செல்லவுள்ள வைத்தியருக்கு பாராட்டு



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கல்முனை ஆதார வைத்தியசாலையில் சேவை ஆற்றி வெளிநாடு செல்லவுள்ள பொது மயக்க மருந்து நிபுணர் டாக்டர் மிகிரு உதயங்க வின் சேவையை பாராட்டி, வழி அனுப்பி வைக்கும் நிகழ்வு வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் துறைசார்ந்த வைத்திய நிபுணர்கள், பொது வைத்தியர்கள், சத்திர சிகிச்சை பிரிவு தாதி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு டாக்டர் உதயங்க, வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஆர்.முரளீஸ்வரன், சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் சமீம் உள்ளிட்ட குழுவினரால் பொன்னாடை போர்த்தி, பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## மன்சூரின் 39 வருட அரச சேவையை பாராட்டி கௌரவிப்பு

**கல்முனை மத்திய தினகரன் சாய்ந்தமருது நிருபர்கள்**

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆதம்வாவா மன்சூரின் 39 வருட கால அரச சேவையை பாராட்டி கௌரவிக்கும் விழாவும், "மன்சூர் எனும் நிருவாக ஆளுமை" நூல் வெளியீடும் ஞாயிற்றுக்கிழமை (11) சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் நடைபெற்றது.

சாதனையாளர்களை வாழ்த்தும் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவுக்கு, மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம். அப்துல்லாஹ், தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடாதிபதி அரசியத்துறை பேராசிரியர் எம்.எம். பாஸில், கிழக்கு மாகாண பேரவை செயலாளர் எம்.எம். நஸீர், கிழக்கு மாகாண பொதுசேவை ஆணைக் குழு செயலாளர் எம்.கோபாலரத்னம், கிழக்கு மாகாண பிரதிப்பிரதம செயலாளர் (ஆளணி) திருமதி ஆர். யூ.ஏ.ஜலீல், இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.ஐ. எம். அமீர், முன்னாள் வவுனியா அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா உள்ளிட்ட பல உயரதிகாரிகள், கல்விமான்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் அடங்கலாக நூறுக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் அதிதிகளினால் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆதம்வாவா மன்சூரின் 39 வருட கால அரச சேவையை பாராட்டி உரையாற்றியதுடன், அம்பாறை மாவட்ட பல்வேறு சிவில் அமைப்புகளும், முக்கியஸ்தர்களும், சம்மாந்துறை பொது அமைப்புக்களும் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவித்தனர்.

## மாணவர்களுக்கு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு



**சாய்ந்தமருது விசேட நிருபர்**

கிழக்கு ஷோசியோ அபிவிருத்தி அமைப்பின் வேண்டுகோளின் பேரில், பிரன்ஷிப் அமைப்பின் தலைவர் ரிகாஷ் ஹாஜியின் அனுசரணையில், சம்மாந்துறை அல்அர்ஷத் மகா வித்தியாலயத்தின் விசேட தேவையுடைய மாணவர் பிரிவுக்கு இரு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் எம்.ஏ.றஹீம் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு ஷோசியோ அபிவிருத்தி அமைப்பின் தலைவர் வாஹிதா முகைதீன் இம்தியாஸ், தவிசாளர் இம்தியாஸ் காரியப்பர் மற்றும் ரிகாஷ் ஹாஜி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு இவற்றை வழங்கி வைத்தனர்.

இதில் பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஏ.எம்.சிராஜ், உதவி அதிபர் யூ.எல். றூஹுல்லாஹ், விசேட பிரிவின் தலைவர் எம்.ஐ.றியாத் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

## தனியார் வகுப்புகளை பிற்போடுமாறு கோரிக்கை

**ஒலுவில் விசேட, அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்**


அக்கரைப்பற்று மாநகர சபைக் குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் கல்விப் பொதுத்தராதர உயர்தர பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பிப்பதை தாமதப்படுத்துமாறு, அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தெரிவித்தார்.

தற்போது நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையினைத் தொடர்ந்து மாணவர்கள் தமக்கான கற்கை நெறிகளை சுயமாகவும் சுதந்திரமாகவும் தீர்மானிக்க இடமளிப்பதற்கு ஏதுவாக தனியார் கல்வி நிறுவனங்கள் வகுப்புகள் ஆரம்பிக்கப்படுவதை பிற்போடுமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவித்தார்.

இக் கோரிக்கைக்கமைய பிரத்தியேக வகுப்புகளை பிற்போடுமாறும், இவ்வாறான சூழ்நிலையில் தாங்கள் உடனடியாக தனியார் வகுப்புக்களை ஆரம்பிப்பது மாணவர்களின் எதிர்கால கல்வியில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும்.

2023ம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான உயர்தர பாடங்களை நடாத்தும் கல்வி நிறுவனங்கள் எதிர்வரும் ஜுலை 01ம் திகதிக்கு பின்னர் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார்.

# புனித அந்தோனியார் திருவிழா





கொச்சிக்கடை திருத்தலம் இன்று விழாக்கோலம் பூண்டுள்ளது. கோடி அற்புதர் என போற்றப்படும் புனித அந்தோனியாரின் வருடாந்த திருவிழா இன்று கொண்டாடப்படுகிறது.

கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகி தினமும் நவ நாட்கள் இடம்பெற்றன. நேற்றைய தினம் மாலை வெஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெற்றதுடன் இன்று காலை திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து வழமை போன்று புனித அந்தோனியாரின் திருச்சுரூப பவனி இன்று மாலை இடம் பெற்று இரவு 8 மணியளவில் இறுதி ஆசீருடன் திருவிழா நிகழ்வுகள் இனிதே நிறைவு பெறவுள்ளன.

திருவிழா திருப்பலி மற்றும் இறுதி ஆசீர்வாத வழிபாடுகள் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, துணை ஆயர் பேரருட்திரு என்டன் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட ஆயர்கள் அருட்தந்தையர்கள், அருட் சகோதரர்கள் அருட்சகோதரிகளின் பங்கேற்புடன் இடம்பெறவுள்ளன.

திருவிழா திருப்பலி மற்றும் திருச்சுரூப பவனி, வழிபாடுகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கத்தோலிக்க திருச்சபையில் பல புனிதர்கள் இருந்தாலும் அனைத்து மக்களின் நம்பிக்கைக்கும் விசுவாசத்துக்கும் அன்புக்கும் உரியவராக புனித அந்தோனியார் விளங்குகின்றார்.

காணாமற் போன பொருட்களை கண்டடையவும் இன்னோரன்ன தேவைகளையும் வேண்டுதல்களையும் சமர்ப்பிக்க அவர் அருளை நாடிவரும் பக்தர்கள் எண்ணிக்கை எண்ணிலடங்காதவை.

செவ்வாய்க் கிழமை புனிதரின் நவநாள் இடம் பெறுவதுடன் ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாய் என ஒன்பது மாதங்களுக்கு நவநாள் தொடர்ச்சியாக ஒன்பது செவ்வாய் என நவநாள் ஒப்புக்கொடுத்து பக்தர்கள் தமது வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்வர்.

உலகெங்கும் உள்ள கத்தோலிக்க மக்களும் ஏனையோரும் பாதுவா நகர் அந்தோனியாரை அண்டி அவரிடம் மன்றாடி, அவர் வழியாய் இறைவனிடம்எண்ணிலடங்கா ஆன்ம, உடல் நலன்களை பெற்று வருகின்றார்கள்.

புனித அந்தோனியார் போத்துக்கல் நாட்டவர். 1195 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி லிஸ்பன் நகரில் பிறந்தார்.

அவரது பெற்றோர்கள் மார்டின் - மேரியாகும் இவர்களுக்கு மூன்றாவதாகப் பிறந்த குழந்தைக்கு பெர்டினாந்துஎன்று அவர்கள் பெயரிட்டனர்.

பெற்றோரைப் போல குழந்தையும் சிறு வயதிலிருந்தே இறைப்பற்றில் திளைத்து

நற்குண சீலராக வளர்ந்து வந்தார். சிறுவன் பெர்டினாந்து ஒருநாள் மேற்றிராசன ஆலயத்தில் உருக்கமாக செபித்துக்கொண்டிருக்கம் போது திடீரென்று பயங்கர உருவத்தில் அலகை தோன்றியது. சிறுவன்அஞ்சி ஓடவில்லை. மனத்துணிவுடன், தான் முழந்தாளிலிருந்த சலவைக் கல்மேல் திருச்சிலுவை அடையாளத்தை வரைந்தான்.

பிசாசு வெகுண்டுஓடியது. அந்த கல்லில் பதித்த திருச்சிலுவை அடையாளத்தை இன்னும் காணலாம்.

கூரிய நுண்ணறிவு படைத்த பெர்டினாந்து திறம்படக் கல்வியில் தேர்வு பெற்றார். ஆன்மிக குருவைக் கலந்தாலோசித்து புனித அகுஸ்தின் துறவறசபையில் சேர்ந்தார்.

ஊர் உறவினரை விட்டு விலகியிருப்பதே நலம் என்று உணர்ந்த பெர்டிணாண்டு தனது விருப்பத்திற்கிணங்க அதிபரின்அனுமதியின் படி கொயிம்ரா என்னும் இடத்திற்குச் சென்று குருத்துவக் கல்வி பயின்றார். 1219ம் ஆண்டில் தமது 24 ஆம் வயதில் குருப்பட்டம் பெற்றார்.

மொராக்கோவில் வேத சாட்சிகளாக மரித்த ஐந்து பிரான்சிஸ்கன் சபையோரின் திருப்பண்டம் கொண்டு வரப்பட்டது. இதைப் பற்றி சிந்தித்த பெர்டினாந்து தானும் அவ்வாறே கிறிஸ்துவுக்காக வேத சாட்சியாக வேண்டும் என்று தனியாத தாகம் கொண்டார். எனவே 1221ஆம் ஆண்டு புனித அகுஸ்தீன் சபையை விட்டு விலகி பிரன்சீஸ்கன் சபையில் சேர்ந்தார். அப்போதுதான் பெர்டினாந்து என்ற பெயரை மாற்றி அந்தோனியார் என்ற பெயரில் அவர் அழைக்கப்பட்டார். இவ்வாறு புனிதரின் வரலாறு மிக நீண்டதாக காணப்படுகின்றது.

புனித அந்தோனியாரின் திருவிழாவை கொண்டாடும் நாம் குறிப்பாக நம் நாட்டுக்காக பிரார்த்திப்போம்.

**-எல்.செல்வா**




# இறைவனின் மீட்பு திட்டத்தில் மரியாள்

அன்னை மரியாள் தொடர்பில் முக்கியமான பல்வேறு வரலாற்றுத் தகவல்கள் உள்ளன.

வானதுதர் வழியாக அறிவிக்கப்பட்ட கடவுளின் நற்செய்தியைத் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டதால் இறைமகன் இயேசுவின் தாயாகும் பேறுபெற்றவர் நம் அன்னை கன்னிமரியாள்.



இயேசுவின் பிறப்பு, பணி வாழ்வு, சிலுவை மரணம் போன்ற மீட்பின் நிகழ்வுகளில் மரியாவின் பங்கு அளப்பரியது. அதுதொடர்பான தகவல்களை விவிலியத்தில் காணமுடிகிறது.

மனித மீட்புக்கான இறை திட்டம் கடவுளில் உருவான வேளையிலேயே மரியாள் அதில் முக்கியத்துவம் பெற்றிருந்தது தெளிவாகிறது/

இயேசுவின் தாயான புனித மரியாளைக் குறித்து நூல்கள் எழுதிய திருச்சபையின் அறிஞர்கள் அனைவரும் மரியாள் மீட்புத் திட்டத்தில் முன் நியமனம் பெற்றவர் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். உலகில் மனிதர்கள் படைக்கப்படும் முன்பே வானதூதர்களைப் படைத்த கடவுள தமது மீட்புத் திட்டத்தை ஏற்கும் வானதூதர்களுக்கு மட்டும தமது மாட்சியின் பேரின்பத்தை அளிக்க விரும்பினார்.

அதன்படி ஒரு குழந்தையை ஏந்திய பெண் ஒருவரின் காட்சியைக் காண்பித்த கடவுள் வானதூதர்களிடம், "இந்த குழந்தையே உலக மக்களின் பாவங்களைப் போக்க மனிதராகப் பிறக்கப்போகும் மகனாகிய கடவுள். இப்பெண் அவரைப் பெற்று வளர்க்கவுள்ள கன்னித் தாய். இவர்களை வணங்குங்கள்" என்றார். வானதூதர்கள் அனைவரும் இயேசுவையும் அவரது தாயையும் வணங்கச் செல்கையில் தலைவனான லூசிபர் அவர்களைத் தடுத்தான்.

வானதூதர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கடவுளின் மீட்புத் திட்டத்தைப் புறக்கணித்து லூசிபரோடு சேர்ந்து கொண்டு கடவுளுக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டனர். அவ்வேளையில் மிக்கேல் அதிதூதர், "கடவுளுக்கு நிகரானவர் யார்?" என்று முழங்கியவாறே கலகம் செய்த வானதூதர்களுக்கு எதிராகப் போரைத் தொடங்கினார். இறுதியில் அதிதூதர் மிக்கேலோடு சேர்ந்து போரிட்ட வானதூதர்கள் வெற்றி பெற்றனர். மகனாகிய கடவுளையும் அவரது தாயையும் வணங்கிய அவர்களுக்கு தமது பேரின்பத்தை கடவுள் வழங்கினார்.

இறை ஏவுதலால் எழுதப்பட்ட தொடக்க நூலில் காணப்படும் முதல் பெற்றோர் குறித்த கதை, உலக மீட்பரின் தாய் பற்றி பேசுகிறது. ஆண்டவராகிய கடவுள் பாம்பிடம் "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்" என்றார். (தொடக்க நூல் 3:14,15) அலகையாகிய பாம்பின் தலையைக் காயப்படுத்தும் வித்து இறைமகன் இயேசுவே என்பதால், அந்த பெண் மரோளே என்பதில் சந்தேகமில்லை.

கி.மு. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இறைவாக்கினர் எசாயா, "ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவர் 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார்" (எசாயா 7:14) "ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; அவர் திருப்பெயரோ வலிமைமிகு இறைவன், அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும்" (எசாயா 9:6) என குறிப்பிடுவது இயேசுவையும் அவரது தாய் மரியாளையுமே முன்னறிவிக்கின்றன. எனவே தான் 'இளம்பெண்' என்று ஏசாயா குறிப்பிடும் இடத்தில், மத்தேயு நற்செய்தியாளர் 'கன்னி' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

அந்த வகையில் இறைவனின் மீட்பு திட்டத்தில் ஆரம்பத்திலிருந்தே நம் அன்னை மரியாள் முன் குறிக்கப்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

**-எல்.எஸ்**

# அன்புறவின் உச்சமே ஆண்டவர் இயேசுவின் உயிர்த் தியாகம்

நம் ஆண்டவராகிய இயேசு மனிதர்களின் வாழ்வில் அவர்களது குற்றங்களையும் குறைகளையும் கண்டு அவர்களை ஒதுக்கி விடுபவர் அல்ல அவர்களுடன் நட்புடன், அன்புடன் உறவாடுபவர்.

பல்வேறு சம்பவங்களிலும் ஆண்டவருக்கும் எமக்கும் இடையிலான உறவின் அனுபவத்திலும் அவை தெளிவாக வெளிப்படும்.

ஓர் இளம் பெண் தன் தோழியிடம் , "உனக்கு ஒரு இளைஞன் காதல் கடிதம் எழுதினானே; அதை நீ என்ன செய்தாய் ?" என்று கேட்டதற்குத் தோழி "அக்கடிதத்தில் நிறைய எழுத்துப் பிழைகளும் இலக்கணப் பிழைகளும் இருந்தன. அவற்றையெல்லாம் திருத்தி அவனுக்கே அக்கடிதத்தை திருப்பி அனுப்பிவிட்டேன் ." என்றாள்

காதல் கடிதத்தில் அன்பைப் பார்க்க வேண்டுமே தவிர எழுத்துப் பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் பார்க்கக்கூடாது.

அப்படிப் பார்த்தால் அது உண்மையான காதலாய் இருக்க முடியாது.

கடவுன் மனிதருடைய வாழ்வில் காணப்படும் எழுத்துப் பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் அதாவது குற்றங்களையும் குறைகளையும் கண்டு அவர்களை ஒதுக்கி விடுபவர் அல்ல; மாறாக அவர்களோடு அன்பு உடன்படிக்கையைச் செய்பவரே கடவுள் .

தொடக்கக் காலத்தில் அவர் இஸ்ரயேல் மக்களுடன் உடன்படிக்கை செய்தார் . அவ்வுடன்படிக்கையை அவர் மோசே வழியாகச் சீனாய் மலை அடிவாரத்தில் மிருகங்களின் இரத்தத்தினால் செய்தார் (விப 24:8). ஆனால் அந்த மக்கள் அந்த உடன்படிக்கையை மீறியபோது கடவுள் புதிய உடன்படிக்கை செய்யப்போவதாக வாக்களித்தார் (எரே 31:31).

கடவுள் முன்னறிவித்த இப்புதிய உடன்படிக்கையைக் கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தினால் செய்தார் . "இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை" என்றார் இயேசு. (லூக் 22:20)..

ஆண்டவருடைய திருவுடல் , திரு இரத்தத்தின் பெருவிழாவினை கத்தோலிக்கத் திருச்சபை கடந்த ஞாயிறு சிறப்பித்தது.

திவ்விய நற்கருணை கிறிஸ்துவின் உடன்படிக்கையை நினைவூட்டுகின்றது; நிலைப்படுத்துகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுவதுபோல, நற்கருணைதான் கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சியுமாகும் (திருச் சபை, எண் 11).



நற்கருணை ஒரு பொருள் அல்ல; மாறாக மீட்பின் வரலாற்றை முழுமையாகத் தன்னகத்தே கொண்டுள்ளது. நற்கருணை கிறிஸ்துவின் பாடுகளை நினைவுகூருகிறது (இறந்தகாலம் ); அகம் அருளால் நிரப்பப்படுகிறது (நிகழ்காலம் ); இனி வரவிருக்கும் நமது விண்ணக மகிமைக்கு அச்சாரமாக இருக்கிறது (எதிர்காலம் ). இவ்வாறு முக்காலத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள நற்கருணை மீட்பின் வரலாற்றை, புதிய உடன்படிக்கையைக் கதிரவன் தோன்றி மறையும்வரை காலமெல்லாம் செயல்படுத்துகின்றது.

நற்கருணைப்பலி கல்வாரிப் பலியின் நீங்காத நினைவுச் சின்னம் . பழைய உடன்படிக்கையில் பலி ஒப்புக்கொடுத்த குரு வேறு; பலியாக ஓஒப்புக்கொடுக்கப்பட்ட பலிப்பொருள் வேறு; பலிபீடம் வேறு. இம்மூன்றிற்கும் இடையே இருந்த பிளவைக் கிறிஸ்து நீக்கிவிட்டார் .

அவரே பலி ஒப்புக்கொடுக்கும் குருவாகவும் பலிப்பொருளாகவும் பலிப்பீட மாகவும் திகழ்கின்றார் .

கிறிஸ்து தமது இன்னுயிரை நமக்காகக் கொடுத்தது நட்பின் வெளிப்பாடு.

"தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13). என்பதை அவரே கூறினார்.

கிறிஸ்துவே நட்புக்குச் சிறந்த இலக்கணமாகத் திகழ்கின்றார் .

**அருட்பணி வை. இருதயராஜ்**

# வடக்கின் உதயம்

## மடுத்திருத்தல திருவிழாவில்
# மூன்று இலட்சம் பேர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பு

**தலைமன்னார் விசேட நிருபர்**

மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு அன்னையின் பெருவிழாவுக்கு மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மருதமடு அன்னைக்கு முடிசூட்டப்பட்ட நுற்றாண்டு விழாவுக்கான ஆரம்ப நிகழ்வாக ஆயரால் யூபிலி பிரகடனம் செய்யப்படுவதுடன் அன்றைய தினம் ஆரம்ப நிகழ்வும் இடம்பெறுமென மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

மருதமடு அன்னையின் ஆடிமாத பெருவிழாவை முன்னிட்டு நேற்றைய தினம் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் விசேட கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மடுத்திருத்தல





திருவிழாவை முன்னிட்டு நடைபெற வேண்டிய நடைமுறைகள் மற்றும் பக்தர்களின் தேவைகளுக்கான நடைமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

குருமுதல்வர் மேலும் இங்கு கருத்து தெரிவிக்கையில்,

கடந்த வருடம் எரிபொருள் தட்டுப்பாடு மிக மோசமாக நிலவிய காலப்பகுதியிலேயே திருவிழா நடைபெற்றது.

ஆனால் இவ்வருடம் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. சுமார் மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் ஆடிமாத விழாவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்வரும் 23 ஆம் திகதி மருதமடு அன்னையின் ஆடிமாத விழாவை முன்னிட்டு கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி ஆடி மாதம் இரண்டாம் திகதி (02.07.2023) காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி நடைபெறும். மன்னார் மறைமாவட்டம் யூபிலி பெருவிழாவை 2024 ஆம் ஆண்டு கொண்டாடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.



வடக்கு மாகாண ஆளுநராக பதவியேற்ற திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை இச்சந்திப்பு நடைபெற்றது. இதன்போது வடக்கில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எதிர்கால வளர்ச்சித்திட்டங்கள், நிர்வாக நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (படம் யாழ்.விசேட நிருபர்)

## போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து 09 அட்டைகளில் 90 மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் மீட்கப்பட்ட மாத்திரைகளையும், கைது செய்யப்பட்ட நபரையும் ஒப்படைத்துள்ளதாக விசேட அதிரடி படையினர் தெரிவித்தனர்.

## வவுனியா கிராம பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு

**ஓமந்தை விசேட நிருபர்**

வவுனியா பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு முறையான போக்குவரத்து வசதிகளின்மையால் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தனர். வவுனியா சின்னத்தம்பனை, மடுக்குளம், வேலன்குளம், கந்தன்குளம், புலவநாவூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து வசதிகளின்மையால் சிரமங்களை எதிர்நோக்கினர். இதனால் பாடசாலைகளில் வரவு மிக குறைவாக காணப்படுவதுடன் மாணவர்கள் சரியான நேரத்திற்கு பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லையென தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து பூவரசங்குளம் பாடசாலை அதிபர், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலிபனிடம் தெரிவித்ததையடுத்து தற்போது



போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தற்போது மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலீபன், வட பிராந்திய பாதுகாப்பு முகாமையாளர் சுரேந்தர், வட்டார செயலாளர் தோழர் சிவா, இணைப்பாளர் நிரோஸ்ராஜ், சுதர்சன் ஆகியோர் இணைந்து புதிய போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

## செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமத்திற்கான பாதயாத்திரை

**கரவெட்டி தினகரன் ,யாழ்.விசேட நிருபர்கள்**

நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரையான பாதயாத்திரை நேற்றைய தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற யாத்திரை பயணம் சந்நிதியான் ஆலய பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாக பணிப்பாளர் மனுர சமன் பெரேரா, வடமாகாண பணிப்பாளர் காமினி யாழ் மாவட்ட பணிப்பாளர் வினோதினி சிறிமேனன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி மற்றும் அதி



காரிகள் கலந்துகொண்டு சம்பிரதாய பூர்வமாக யாத்திரையை ஆரம்பித்து வைத்தனர்.

யாத்திரிகர்கள் உகந்தை முருகன் ஆலயம் சென்று அங்கிருந்து சுமார் 300 இளைஞர்கள், யுவதிகள் நாடளாவிய ரீதியிலிருந்து யாத்திரை செல்லவுள்ளனர்.

இதில் இளைஞர்சேவை மன்றங்களின் நிர்வாகிகள், கிராம சேவகர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## விசேட அதிரடிப்படையினரை தாக்கி தப்பிச் சென்றவர் கைது

**யாழ். விசேட நிருபர்**

காரைநகரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை தாக்கிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபரொருவர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மத்திய கிழக்கு நாடொன்றுக்கு போலியான கடவுச்சீட்டினை பயன்படுத்தி தப்பிச் செல்ல முற்பட்ட போதே யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த மாதம் 26 ஆம் திகதி காரைநகர் ஊரி பகுதியில் விசேட அதிரடிப் படையினர் 8 கிலோ கஞ்சாவுடன் சந்தேக நபரை கைது செய்ய முற்பட்டபோதே விசேட அதிரடிப்படையினரை தாக்கிவிட்டு தப்பி சென்றுள்ளார்.

இந்நிலையில் நேற்று சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். இதன்போது அவரிடம் இருந்து, போலி கடவுச்சீட்டுகள் இரண்டும் கைத்தொலைபேசிகள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளன.

## வீட்டிலிருந்து உணவு பாதுகாப்பை ஆரம்பிக்கவேண்டும்

### பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

வீட்டிலிருந்து உணவுப் பாதுகாப்பை ஆரம்பிக்கவேண்டுமென பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி மந்துவில் பகுதியில் இடம்பெற்ற கரப்பிணிதாய்மார்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது வீட்டின் சமையலறையிலிருந்தே உணவுப் பாதுகாப்பின் அடிப்படை விடயங்கள் கடைப்பிடிக்க ஆரம்பிக்கவேண்டும். இதனால் உணவின் தரம் பேணப்பட்டு பிள்ளைகளுக்கு நோய் வாய்ப்புகள் ஏற்படுவது குறையும். பொருத்த



மான வளர்ச்சியையும் அடைவர். இதனால் சிறந்த மூளை வளர்ச்சி பிள்ளைகளில் ஏற்பட்டு ஆரோக்கியமான எதிர்கால சமுதாயம் உருவாக வழியேற்படும்.

உணவினால் ஏற்படும் ஒவ்வாமை ஒருவருக்கொருவர் வேறுபடக்கூடியது. எனவே ஒவ்வாமையான உணவுகளை தவிர்ப்பதே சிறந்தது. எனவே, இவ்வாறான நுட்பங்களை சமையல் அறையிலிருந்து கடைப்பிடித்து உணவுப்பாதுகாப்பை எம்மால் மேம்படுத்த முடியும் என்றார்.

## மாடுகளை திருட முயன்ற இருவர் பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா சமயபுரம் கிராமத்தில் மாடுகளை திருட முயன்ற இருவர் பொது மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



நேற்று (12) காலை 6.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமயபுரம் கிராமத்தில் கடந்த சில மாதங்களாக கால்நடை திருட்டு அதிகரித்துவருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் நேற்று (12) காலை 6.00 மணியளவில் சமயபுரம் விநாயகர் வித்தியாலய வீதியில் மாட்டை திருட முயன்ற இருவரை பொது மக்கள் மடக்கி பிடித்து வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைத்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாதிக்கப்பட்ட மக்கள்,

எமது கிராமத்தில் கால்நடைகள் களவாடப்படுகின்றமை தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.



பாபு இன்சிரியூட் கராத்தே பாடசாலையின் சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (11) யாழ் உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சிவலீமன் சிலம்பம் சம்மேளனத்தின் தலைவரும் பாபு இன்சிரியூட் கராத்தே பாடசாலை தலைவர் சென்சய் சூசைநாதர் யசோதரன் தலைமையில் இடம்பெற்றது.

(படம்: கோப்பாய் குறூப் நிருபர்)

## கிளிநொச்சியில் தென்னை மரங்கள் விசமிகளால் தீ வைத்து எரிப்பு

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி மயில்வாகனபுரம் பகுதியில் தோட்டக்காணியொன்றில் மரநடுகை செய்யப்பட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் விசமிகளால் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரம் கிராமத்திலுள்ள தோட்டக் காணியொன்றில் மரநடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த நூற்றுக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் விஷமிகளால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பகுதி கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் நடாத்தும் 22 ஆம் உலக சைவ மாநாட்டின் முதல் நாள் நிகழ்வுகள் நேற்றுமுன் தினம் லண்டன், ஈலிங்கில் நடைபெற்றன. இந்நிகழ்வில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட சமய சொற்பொழிவாளர் தமிழருவி தா சிவகுமாரன் உரை நிகழ்த்திய போது எடுக்கப்பட்ட படம்.

# நகர்வலம்



# தெற்காசியாவின் சுற்றுச்சூழலை பாதுகாக்க தெற்காசிய சூழல் கூட்டுறவுத் திட்டம் உதவும்



தெற்காசிய சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் உயிர்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்தவும் தெற்காசிய சுற்றுச் சூழல் கூட்டுறவுத் திட்டம் வழிவகுக்குமென, சுற்றாடல் அமைச்சர நஸீர் அஹமட் தெரிவித்தார்.

தெற்காசிய பிராந்தியத்தின் SACEP தலைமையகத்துக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் தெற்காசிய சுற்றாடல் திட்டமிடல் தலைவர் செல்வி சொன் குஆங் அலிஸ் கின், திட்டப் பணிப்பாளர் இரூசினி வேதகே, அமைச்சின் செயலாளர் வைத்தியக் கலாநிதி அனில் ஜாசிங்க SACEP பணிப்பாளர் நாயகம் கலாநிதி முஹம்மத் மகமூர் மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரை நிகழ்த்திய அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்ததாவது:கவர்ச்சிகரமான, வசதியான மாதிரிக் கட்டிடங்களை உருவாக்குவதற்கான தொழில்நுட்பமும் அறிவும் எங்களிடம் உள்ளதை புதிய தலைமையகம் நிரூபிக்கும்.

இது (SACEP) தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள மிக முக்கியமான அரசுகளுக்கிடையேயான அமைப்புகளின் ஒன்றாகும்.

1982 இல், SACEP நமது அப்போதைய தலைவர்களால் இவ்வமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது.நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில், தெற்காசியர்களாகிய நாம், எவ்வளவு தொலைநோக்குடன் இருந்தோம் என்பதற்கு சிறந்த ஆதாரம் இது.

காலநிலை நெருக்கடிகளில், பெரிய அளவிலான பல்லுயிர் இழப்பை எதிர்கொள்ளும் அதிக நாடுகள் தெற்காசியாவிலே உள்ளன.

தேசிய மற்றும் உலகளாவிய காலநிலை நடவடிக்கையை விரைவாகவும் சமநிலையாகவும் நிறைவேற்றுவதற்கான கூட்டுக் குரலின் அவசியத்தை இலங்கை அங்கீகரித்துள்ளது. இருப்பினும், தெற்காசியா போன்ற காலநிலை பாதிக்கப்படக்கூடிய வளரும் நாடுகளுக்கு நிதி, வளங்களின் இருப்பு மற்றும் அணுகல் முறை ஒரு பெரிய சவாலாக உள்ளது. SACEP ஐ ஒரு பிராந்திய சுற்றுச்சூழல் அமைப்பின் உலகளாவிய மாதிரியாக மாற்றியதில், இயக்குநர் ஜெனரல் டாக்டர் மசூமுர் ரஹ்மானின் அர்ப்பணிப்பு மகத்தானது.

இதற்கான உழைப்புக்கும் மற்றும் அதன் பங்காளிகள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். சுற்றுச் சூழல் பன்முகத்தன்மை, வளங்கள் மற்றும் உலகின் மிகப் பசுமையான மாற்றத்தை லட்சியமாகக் கொண்ட நமது பெரிய அண்டை நாடான இந்தியாவுக்கு அருகாமையிலே கொழும்பு உள்ளது.

## கந்தரவில் அமைக்கப்படும் துறைமுகத்தை அமைச்சர் டக்ளஸ் அதிகாரிகள் சகிதம் பார்வை

**(வெலிகம தினகரன் நிருபர் )**



கந்தரவில் அமைக்கப்பட்டு வரும் மீன்பிடித்துறைமுகப் பணிகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று அண்மையில் பார்வையிட்டார். தற்போது கட்டுமானப்பணிகள் இடம் பெறும் இத்துறைமுகத்தில், கடற்றொழிலாளர்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்வார்கள் என்பதையும் அமைச்சர் ஆராய்ந்தார்.

காலநிலைக்கேற்ப கடல் நீரோட்டங்களின் மாற்றத்திற்கு அமைய கட்டுமானப்பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும், அதிகாரிகளுக்கு இதன்போது அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.



பௌத்த சமய மற்றும் சமய விவகார, கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவை ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இலங்கைக்கான தூதுவர் காலித் நஸார் அல்மாரி சந்தித்து உரையாடினார். அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், இரு நாடுகளுக்குமிடையிலான கலாசாரம் மற்றும் பௌத்த சமய நிலையமொன்றை துபாயில் நிறுவுவது தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது.

(படம்,தெஹிவளை கல்கிஷை விஷேட நிருபர் )

## ரயில் கடவை விபத்துக்களை தடுக்க விசேட திட்டம்

### நாடு முழுவதும் அமுலாக்க தீர்மானம்



ரயில் கடவை விபத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இலங்கை ரயில்வே திணைக்களம், நாடு முழுவதும் விசேட வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

அதன்படி, ரயில்வே வலையமைப்பில் நாடளாவிய ரீதியிலுள்ள சுமார் 400 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் ஈகேட் அமைப்பை அமைக்க உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். ரயில் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பேரில் அரச அபிவிருத்தி மற்றும் கட்டுமானக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து CodeGen International ஆல் இந்த ஈ கேட் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், கொடகம ரயில் நிலையத்திற்கு அருகில் ஈகேட் பரீட்சார்த்த திட்டம், அண்மையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு, தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## மஹரகம பகுதியில் இருபது மணிநேர நீர் விநியோகத் தடை

**(பேருவளை தினகரன் விஷேட நிருபர்)**

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பெலேன்வத்த பொறுப்பதிகாரி காரியாலயத்துக் குட்பட்ட கனத்த வீதி நீர் உந்தும் நிலையத்தில், அவசரப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால்,

இன்று (13.06.2023) செவ்வாய்க்கிழமை நீர் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

மு.ப. 10 மணி முதல் மறுநாள் (14) புதன்கிழமை மு.ப. 6 மணி வரையிலான 20 மணிநேர நீர் விநியோகத்தடை

அமுலில் இருக்கும்.இந்நீர் விநியோகத் தடை

கொரக்கப்பிட்டிய, சித்தமுல், அரவ்வல, ரன்மல்தெனிய, மஹரகம – பிலியந்தல வீதி, எதிரிசிங்க மாவத்தை, மொரக்கெட்டிய வீதி, மெதவெல வீதி, போக்குந்தர வீதி மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல இணை வீதிக

ளிலும் நீர் விநியோகம் பாதிக்கப்படும்.

இதனால், பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிக்கிறது.

நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறும் மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



கொழும்பு மாவட்டத்தில் மெகொட கொலன்னாவ பிரதேசத்தைச் சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பஸ்தர் ஒருவருக்கு'கொமட்டு' டன் கூடிய சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.மேல் மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர் மஞ்சுல தர்மசேன,இச்சகர நாற்காலியை குடும்பத்தினரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. சந்துனியும் படத்தில் காணப்படுகிறார்.

(படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)



தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியில் சிரமதானப் பணிகள் நடைபெற்றன. இக்கல்லூரியின் பதில் அதிபர் எம்.எம்.ஹசன் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான நிகழ்வில் கல்லூரியின் பதிவாளர் எம்.ஏ.சீ. றக்கீப்,உட்பட விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள்,மாணவ,மாணவிகள் கலந்து கொண்டனர்.

(பாலமுனை தினகரன் நிருபர்)

## வறிய மக்களின் பிரச்சினைகளை தீர்க்க ஐந்தாண்டு வேலைத்திட்டம்

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

அநுராதபுரம் மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள 45 கிராமிய பகுதிகளில் வாழும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, ஐந்தாண்டு வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.இத்திட்டம் 2023 முதல்,2027 வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும்.இது தொடர்பான விசேட கலந்துரையாடல் அண்மையில் (09) அநுராதபுரம் சீதேவி ஹோட்டலில் அநுராதபுர மாவட்ட செயலாளர் திரு.ஜனக ஜயசுந்தர தலைமையில் நடைபெற்றது.

ரஜரட்ட சன சமூக பிரஜா மற்றும் எஃபெக்ட் சிவில் சமூக அமைப்புக்களை இணைத்து இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுத்தும். இத் திட்டத்திகென பலாகல, பதவிய, கெப்பித்திகொல்லாவ, விலச்சிய, கஹட்டகஸ்திகிலிய மற்றும் கல்நேவ பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.உதவி பெற வேண்டிய குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## முஹாஜிரீன் அரபுக்கல்லூரியின் பட்டமளிப்பு விழா; 41 பேருக்கு பட்டம்

### – தில்லையடியில் பெருந்திரளானோர் பங்கேற்பு

**(ஏ,ஜீ,எம்,தௌபீக்)**

புத்தளம் தில்லையடி முஹாஜிரீன் அபுக்கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா (11) ஞாயிற்றுக்கிழமை கல்லூரி வளாகத்தில் அதிபர் முபாரக் அல்ரஷாதி தலைமையில் இடம்பெற்றது. இதில், பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட்பதியுதீனும், விஷேட பேச்சாளராக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைவர் ரிஸ்வி முப்தியும் கலந்து கொண்டனர்.41 மாணவர்கள் இதன்போது பட்டம்பெற்று ஆலிம்களாகவும், ஹாபிழ்களாகவும் வெளியேறினர்.

மாணவர்ளுக்கான பட்டங்களை பிரதம அதிதி, விஷேட பேச்சாளர் மற்றும் கௌரவ அதிதிகள் வழங்கி வைத்தனர். ஊர்ப் பொது மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்ட இவ்விழாவில் மலேஷியாவிலிருந்தும் விருந்தினர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரி 2000.06.15 இல் ஆரம்பிக்கப்பட்டு 23 வருடங்களை கடந்துள்ள நிலையில்,கல்லூரியின் வரலாறு குறித்த விஷேட ஆக்கங்கள் தினரகன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இவ்விழாவில் கலந்து கொண்டோருக்கு தினரகன் பத்திரிகையும் விநியோகிக் கப்பட்டது.








பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் நடத்திய 22 ஆம் உலக சைவ மாநாட்டின் முதல் நாள் மாநாடு,நேற்று லண்டன், ஈலிங்கில் நடைபெற்றபோது, இலங்கையில் இருந்து கலந்து கொண்ட சமய சொற்பொழிவாளர் தமிழருவி தா. சிவகுமாரன் எழிலுரைகளை நிகழ்த்திய போது எடுக்கப்பட்ட படம்

# தினகரன் Business

# கன்னிப் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்த Cordelia Cruises



## Cordelia கப்பல் பயணத்திற்காக இலங்கையில் பொது விற்பனை முகவராகவும் துறைமுக முகவராகவும் Advantis





இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கும் வகையில் இலங்கைக்கு வரும் சொகுசு சுற்றுலாப் பயணிகளுக்கான கப்பலை அறிமுகப்படுத்தும் முகமாக, Hayleys குழுமத்தின் போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் பிரிவான Advantis, MS Empress கப்பலை வரவேற்றது.

இந்தியாவின் உயர்மட்ட கப்பல் வரிசைகளில் ஒன்றான Cordelia Cruises உடனான புதிய கூட்டாண்மையைப் பயன்படுத்தி, Advantis குழுவினர் சென்னையில் இருந்து வந்த 1,600 சுற்றுலாப் பயணிகளை அன்புடன் வரவேற்றனர். இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, பாரம்பரிய நடனக் கலைஞர்கள் மற்றும் பாரம்பரிய மேள கலைஞர்களின் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

Cordelia Cruisesஐ வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவதோடு மற்றும் இந்த புதிய சொகுசுக் கப்பல் முற்றிலும் சுற்றுலாப் பயணிகளுக்கானது. சுற்றுலாத் துறைக்கான கணிசமான வணிக வாய்ப்புகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கும் அதனை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் எமது முயற்சிகளில் இது குறிப்பிடத்தக்க மைல்கல் என்றே குறிப்பிட வேண்டும், அதே போல் எங்கள் நாட்டிலுள்ள வளத்தைப் பயன்படுத்தி, கப்பல் பயணங்களுக்கான உலகளாவிய முக்கிய இடமாகவும் இலங்கை அமைந்துள்ளது என ஹேலிஸ் குழுமத்தின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹான் பண்டிதகே தெரிவித்தார்.

Advantis மற்றும் Cordelia Cruises ஆகியன அவர்களின் நிபுணத்துவம் மற்றும் வளங்களை ஒருங்கிணைத்து, அவர்களது பகிரப்பட்ட நோக்கம் இலங்கையின் முழுத் திறனையும் வெளிக்கொணர்வதும், விதிவிலக்கான அனுபவங்களைத் தேடும் சொகுசுப் பயணிகளுக்கான சிறந்த இடமாக நாட்டை நிலைநிறுத்துவதும் ஆகும்.



MS Empress ஆனது 796 கேபின்களை ஐந்து தனித்தனி பிரிவுகளில் கொண்டுள்ளது, ஒவ்வொன்றும் அதிநவீன வசதிகளுடன் கூடியவை, அவை 1,600 பயணிகளுக்கு இணையற்ற சொகுசு மற்றும் வசதியை வழங்குகிறது. பயணிகளுக்கு நாட்டைச் சுற்றி மறக்க முடியாத பயணத்திற்கு களம் அமைத்துக் கொண்டு, இக்கப்பல் 2023 ஜூன் 5 சென்னை துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது.

Advantis நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ருவன் வைத்தியரத்ன இந்த கூட்டாண்மை குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

“ஒரு தீவான, இலங்கை பல நூற்றாண்டுகளாக கடல் வர்த்தகம் மற்றும் பயணத்தை ஈர்த்துள்ளது. எவ்வாறாயினும், நவீன யுகத்தில், நமது தேசம் இன்னும் அதன் இயற்கையான நன்மைகளை நமது திறனுக்கு ஏற்றவாறு பயன்படுத்தவில்லை.

Cordelia Cruises உடனான எங்கள் கூட்டணியின் மூலம், இலங்கையின் வளமான பாரம்பரியம், பிரமிக்க வைக்கும் இயற்கை அழகு மற்றும் உற்சாகமான கலாசார பன்முகத்தன்மையை ஆராய்வதற்கான குறிப்பிடத்தக்க வாய்ப்பை பயணிகளுக்கு வழங்குவதன் மூலம், நாடு முழுவதும் முதன்முறையாக கப்பல் பயணத்தை எளிதாக்க முடிந்தது. அடுத்த நான்கு மாதங்களில் மட்டும் குறைந்தது 80,000 உல்லாசப் பயணிகளை ஈர்ப்பதற்காக Cordelia குழுவுடன் நெருங்கி பணியாற்ற நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என தெரிவித்தார்.

குழுமத்தின் பயணம் மற்றும் விமானப் பிரிவு பொது விற்பனை முகவராக Advantis பணியாற்றும் என்பதோடு Advantis குழுமத்தின் துணை நிறுவனமான Clarion Shipping இலங்கையில் Cordelia கப்பல்களுக்கான துறைமுக முகவராக செயற்படும்.

பங்களாதேஷ், இந்தியா, இந்தோனேசியா, மாலைதீவு, மியன்மார், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவம் மற்றும் செயல்பாடுகளைக் கொண்ட Advantis இலங்கையின் மிகவும் பல்வகைப்பட்ட போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் சேவை வழங்குநராகும்.Bluechip பன்னாட்டு நிறுவனமான Hayleys PLCஇன் ஆதரவுடன், போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் துறையில் Advantis முன்னணியில் உள்ளது.

# MediHelp மருத்துவமனை 17ஆவது கிளையை கல்கிசையில் திறந்துள்ளது

குறைந்த செலவில் அடிப்படை சிகிச்சைகளை வழங்குவதில் இலங்கையின் சுகாதாரத் துறையில் முன்னோடி மற்றும் மிகப்பெரிய மருத்துவமனை வலையமைப்பான MediHelp மருத்துவமனைக் குழுமம், நவீன வசதிகளுடன் கூடிய தனது 17ஆவது மருத்துவமனை கிளையை அண்மையில் கல்கிசையில் ஆரம்பித்தது. இந்த மருத்துவமனைக் கிளை, கல்கிசை மற்றும் அதைச் சுற்றியுள்ள மக்களுக்கு உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனை சேவைகளுக்கான வசதிகளை வழங்கும்.



புதிதாக திறக்கப்பட்ட MediHelp கல்கிசை மருத்துவமனை, உள்நோயாளிகளுக்கான சிகிச்சை வசதிகளுடன் கூடிய MediHelp குழுமத்தின் இரண்டாவது மருத்துவமனையாக மாறியுள்ளதுடன், மேலும் அதன் முதல் மருத்துவமனை ஹொரண நகரில் அமைந்துள்ளது. MediHelp கல்கிசை மருத்துவமனையில் ஏற்கனவே வெளிநோயாளர் சேவைகள், அவசர சிகிச்சை பிரிவு, மருந்தகம், மருத்துவ ஆய்வக சேவைகள், சிறப்பு மருத்துவ ஆலோசனை, டிஜிட்டல் எக்ஸ்ரே பரிசோதனைகள், அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எக்கோ கார்டியோகிராபி, உடற்பயிற்சி ECG, EEG, பிசியோதெரபி சேவைகள், சிறு அறுவை சிகிச்சைகள், சுகாதார பரிசோதனைகள், பல் மருத்துவம் ஆகியவை சேவைகள் உள்ளடங்குகின்றன.

உள்நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகளுக்கான அறுவை சிகிச்சை அறை வசதிகள், உள்நோயாளிகளுக்கான தனி அறைகள், ஒரே நாளில் செய்யக்கூடிய அறுவை சிகிச்சைகளுக்கான தனி பிரிவுகள் போன்ற மருத்துவ வசதிகளுடன் இது பொருத்தப்பட்டுள்ளது, விரைவில் CT ஸ்கேன் வசதிகளும் Medihelpஇன் கல்கிசை மருத்துவமனையில் கிடைக்கும். இது தவிர, புதிய MediHelp கல்கிசை கிளையில் அதிநவீன மருத்துவ சாதனங்கள், அதிக எண்ணிக்கையிலான வாகனங்களை நிறுத்தக்கூடிய வாகன தரிப்பிடம், அனுபவம் வாய்ந்த தாதியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள், சமீபத்திய மருத்துவ உபகரணங்களும் உள்ளன.

# அமானா வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் இரட்டிப்பாக அதிகரிப்பு

அமானா வங்கி 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இரட்டை இலக்கப் பெறுமதியில் வரிக்கு முந்திய இலாபத்தைப் பதிவு செய்துள்ளது. சவால்கள் நிறைந்த பொருளாதார சூழலிலும், உறுதித்தன்மை மற்றும் மீண்டெழுந்திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தி இந்த வளர்ச்சியை அமானா வங்கி எய்தியுள்ளது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலாண்டில், அமானா வங்கி 10% எனும் உயர் வரிக்கு முந்திய இலாபத்தை எய்தி ரூ. 423.5 மில்லியனைப் பதிவு செய்திருந்தது. இந்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ. 385.8 மில்லியனாகப் பதிவாகியிருந்தது. உயர் வரிவிதிப்பனவு காரணமாக, வங்கியின் வரிச் செலவுகள் 50% அதிகரிப்பை பதிவு செய்திருந்த நிலையில், வங்கியின் வரிக்கு பிந்திய இலாபம் 12% இனால் குறைந்து ரூ. 220.7 மில்லியனாக பதிவாகியிருந்தது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தப் பெறுமதி ரூ. 250.7 மில்லியனாக பதிவாகியிருந்தது. வங்கி தனது முதல் காலாண்டு பகுதியில் மொத்த வருமானமாக ரூ. 215.3 மில்லியனைப் பதிவு செய்திருந்தது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ. 177.8 மில்லியன் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் இது 21% வளர்ச்சியாகும்.




வங்கியின் மொத்த விற்பனைகள் சார் வருமானம் கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ. 2.21 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 4.41 பில்லியனாக இரட்டிப்புப் பெறுமதியால் வளர்ச்சியடைந்திருந்தது.

# People's Insurance PLC

## சிறந்த செயல்திறன் கொண்டவர்களுக்கு பாராட்டு

நாட்டின் முன்னணி பொது காப்பீட்டு வழங்குநர்களில் ஒன்றான People’s Insurance PLC அதன் சிறந்த விற்பனை மற்றும் கேப்டிவ் செனல் சாதனையாளர்களை கௌரவிப்பதற்கும் வெகுமதி அளிப்பதற்காகவும்,

2022 ஏனைய சாதனையாளர்களை அங்கீகரிப்பதற்காகவும் 'சாதனையாளர் இரவு' எனும் நிகழ்வினை மோனார்க் இம்பீரியல் ஹோட்டலில் நடத்தியது.

2022 ஆம் ஆண்டில் People’s Insurance PLC யின் ஊழியர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளை 'சாதனையாளர்களின் இரவு' அங்கீகரித்து கொண்டாடியது. மேலும் இந்நிறுவனத்தின் மிகச் சிறந்த செயல்பாட்டாளர்களை வெளிப்படுத்தும் ஒரு தளமாக அமைந்தது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களை கௌரவிப்பதற்கும் பாராட்டுவதற்கும் தலைவர், தலைமை நிர்வாக அதிகாரி, பணிப்பாளர் சபை மற்றும் நிறுவனத்தின் ஊழியர்கள் கலந்து கொண்ட சிறந்த நட்சத்திர நிகழ்வாக அமைந்தது. 'தலைவர் விருது', இரவின் மிகவும் மதிப்புமிக்க விருதானது ஆண்டின் சிறந்த சாதனையாளருக்கு வழங்கப்பட்டது.

# சதுப்புநில மறுசீரமைப்புக்காக Adore Me உடன் கைகோர்க்கும் MAS Foundation for Change

தெற்காசிய ஆடை தொழில்நுட்ப நிறுவனமான MAS Holdingsன் இலாப நோக்கற்ற பிரிவான MAS Foundation for Change, அண்மையில் ஆரம்பித்த சதுப்புநில மறுசீரமைப்புக்கான நிதி பங்குதாரராக B Corporation சான்றளிக்கப்பட்ட நேரடிநுகர்வோருக்கு நெருக்கமான ஆடை வர்த்தக நாமமான Adore Me உடன் கைகோர்க்கப் போவதாக அறிவித்துள்ளது.



MAS Foundation for Change இன் தலைமையகத்தைக் கொண்டுள்ள இலங்கை, 22 வகையான சதுப்பு நிலங்களைக் கொண்டுள்ளது. ஆனால் சில அறிக்கைகளின்படி, விவசாயம், சுற்றுலா, குடியிருப்பு விரிவாக்கம் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு காரணமாக நாட்டின் 50% சதுப்புநிலங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

MAS Foundation for Change இன் பணிப்பாளர் திருமதி ஷரிகா சேனாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளில் சதுப்பு நிலங்கள் ஒரு முக்கிய அங்கமாகும். அவை கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றன, இயற்கை பேரழிவுகளிலிருந்து பாதுகாக்கின்றன, நிலப்பரப்பு காடுகளை விட 34 மடங்கு அதிக கார்பனை சேமித்து கடலோர சமூகங்களுக்கு உயிர் வழங்குகின்றன. இந்த கூட்டாண்மை மூலம், இலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் 2.5 ஹெக்டேயர் சதுப்பு நிலங்களை மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. MAS Foundation for Change எங்கள் புவிக்கு சுவாசத்தை வழங்க அயராது உழைக்கிறது, மேலும் Adore Me வழங்கிய ஆதரவிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என தெரிவித்தார்.

# ஈரானின் ஏவுகணை தயாரிப்புக்கு உதவும் வலையமைப்பின் மீது அமெரிக்கா தடை

ஈரானின் நெடுந்தூர வீச்சு ஏவுகணை தயாரிப்புக்கும் அதன் இராணுவத்துக்கும் அவசியமான பொருள் கொள்வனவு வலையமைப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் ஈரானிலும், சீனாவிலும் உள்ள சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது அமெரிக்கா தடைகளைக் கொண்டு வந்துள்ளது. பீஜிங்கில் உள்ள ஈரானிய பாதுகாப்புத்துறை அலுவலகத்தின் பொறுப்பாளர் தாவூத் தம்காளியம் தடைக்குள்ளான நபர்களில் ஒருவராவார்.

இது தொடர்பாக மேலதிக விவரங்களை வொஷிங்டனில் உள்ள சீனத் தூதரகத்துடனும் ஐ.நா.வின் ஈரானிய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது அவை பதிலளிக்கவில்லை என்று ரொய்ட்டர் தெரிவித்துள்ளது. ஈரானின் நெடுந்தூர ஏவுகணை தயாரிப்புக்கு இரகசியமான உதவும் வலைப்பின்னலை அமெரிக்கா தொடர்ந்தும் குறிவைத்து செயல்படும் என்று அமெரிக்க திறைச்சேரி முதன்மை செயலாளர் பிறையான் நீல்சன் கூறியுள்ளார். பயங்கரவாதம் மற்றும் நிதிஉளவுத்துறை விவகாரங்களுக்கு இவர் பொறுப்பானவர்.

சீனா ஈரானுடன் தனது நீண்டகால உறவை மேலும் ஸ்திரமடையச் செய்யும் வகையில் 2021 மார்ச் மாதம் ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டது. அமெரிக்கத் தடையையும் மீறி சீனா தொடர்ச்சியாக ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்து வருகிறது.

# நவலோகவின் நவீன மகப்பேறு, குழந்தை பராமரிப்புப் பிரிவு

நவலோக மருத்துவமனைக் குழுமம், தாய் மற்றும் குழந்தை பராமரிப்பு பிரிவில் ஒரே நேரத்தில் 15 தாய்மார்களை தங்க வைக்கும் வசதிகளைக் கொண்டுள்ளது மற்றும் நான்கு தனியார் மகப்பேறு வார்டுகளில் குழந்தையின் தந்தைகளும் பிரசவ நேரத்தில் பக்கத்தில் இருக்க முடியும்.

இந்த பிரிவில் சர்வதேச தரத்திற்கு அமைவாக பிறந்த குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை பிரிவு (NICU) மற்றும் குறைமாத குழந்தைகளின் பராமரிப்புக்கான அதிநவீன இன்குபேட்டர்கள் மற்றும் கண்காணிப்பு உபகரணங்களுடன் கூடிய குறைமாத குழந்தை பிரிவும் (PBU) இதில் அடங்கியுள்ளன.

குழந்தை கருவுற்றது முதல் பிரசவம் வரை குழந்தையின் ஆரோக்கியத்தை உன்னிப்பாகக் கண்காணிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்துடன் இந்த அலகு பொருத்தப்பட்டுள்ளது.

நவலோக மருத்துவமனையானது, பல மேற்கத்திய நாடுகளில் பரவலாக பிரபலமான epidural labour analgesiaவுடன் பாதுகாப்பான பிரசவ அனுபவத்தை வழங்குகிறது. இது ஒரு தகுதிவாய்ந்த




ஆலோசகர் மயக்க மருந்து நிபுணரின் மேற்பார்வையின் கீழ் மற்றும் வலி நிவாரணி மருந்துகளை வழங்குவதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு வழக்கமான மகப்பேறு பேக்கேஜின் விலை, ஆலோசகர் கட்டணத்தைத் தவிர்த்து, தற்போது 75,000 ரூபாவாக உள்ளது. இது மகப்பேறு கட்டணத்துடன் 1 நாட்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற உதவுகிறது. 130,000 ரூபா பேக்கேஜில் சிசேரியன் பேக்கேஜ் உள்ளது மற்றும் ஆலோசகர் கட்டணம் தவிர்த்து பிரசவக் கட்டணங்களுடன் 2 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்



106 கார்கள் விற்பனைக்கு

CP JC-7152 HYUNDAI SONATA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035771

NW GS-7676 VOLVO CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035813

WP CAN-4127 BMW 13, 2013, car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 035411

WP KT-0840 MICRO PANDA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035870

107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

SP KG-4569 Toyota Camry, 2003, car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 035408

19-8370 TOYOTA CERES CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035753

19-8466 TOYOTA MARINO CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035756

65-9786 TOYOTA COROLLA WAGON CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035763

109 மிற்சுபிஸி கார்கள் விற்பனைக்கு

SP KG-5805 Mitsubishi, 2008, car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 035404

110 மாருதி கார்கள் விற்பனைக்கு


CP KC-6484 MARUTI SUZUKI CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035772

111 ஹொண்டா கார்கள் விற்பனைக்கு

SP CAY-3738 Honda Civic, 2017, car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 035406

113 சுசுகி கார்கள் விற்பனைக்கு

WP CAR-3516 SUZUKI STINGRAY CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035867




117 வேன்கள் விற்பனைக்கு

50-6794 Toyota Hiace, 1982, van அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 035396

53-6062 TOYOTA HIACE VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035761

62-9976 NISSAN CARAVAN VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035762



118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

CP HH-9323 HYUNDAI SANTAFE SUV அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035767

CP LC-7900 MAHINDRA BOLERO LOAD CARRIER JEEP அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035775



119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

EP DAB-1089 TATA SUPER-ACE TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035785

EP NC-3858 Lanka Ashok Leyland Viking Bus அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035787

NC ZA-8522 JCB 3CX BACKHOE LOADER அதியுயர் விலைக்குண்டு .செங்கடகல பினான்ஸ் பிஎல்சி கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035791

NP NC-2555 LANKA ASHOK LEYLAND VIKING BUS அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035806

NP DAA-9610 TATA XENON S/ CAB TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035800

NP DAG-8061 Mahindra mini truck, 2018, SP PT-9321 Mahindra Ma ximo, 2012, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711210810. 035420

NP LQ-3232 TATA 1615 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035805

NWA-1915 LANKAASHOK LEYLAND 2516 TANKER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035824


NW DAA-4101 MAHINDAR MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035808

NW ND-0156 Toyota Coaster, 2016, bus அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 035399

WP LC-7043 TATA 207 S/ CAB TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035875

WP PT-5969 TATA 207 BULLET S/ CAB TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035877

41-2489 ISUZU ELF TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035758



122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

CP BEP-1045 HERO DASH BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035764

EP ABG-2158 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035777

EP BDJ-7197 BAJAJ PULSAR 150 BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035780

NC ABR-4792 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035789

NC BIU-7849 HERO PLEASURE MOTOR BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035790

NP BDJ-8428 YAMAHA R-15 MOTOR CYCLE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி கண்டி. 077 0107270, 077 4789216 திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035796

SG YK-0339 PIAGGIO APE CITY THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035852

SP GZ-4788 Bajaj, 2002, WP ABJ-0032 Bajaj, 2015, three-wheel அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711210810. 035424

UP ABN-9070 PIAGGIO APE THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035855

WP AAI-4955 PIAGGIO APE CITY THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035857

WP BFC-4133 HONDA DIO MOTOR CYCLE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035863



124 டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள் விற்பனைக்கு

NW RF-8950 TAFE 45DI TRACTOR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035850

SP SP-1925 FARM MASTER HAND TRACTOR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 035750

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2012, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 1789/30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் பிரசுரிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 318 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேறகப்பட்டுள்ளன. எனினும் அச்சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/10/2012/LRB/14.
காணி எடுத்தல் உத்தியோகத்தரின் இல. : WGSWD&EIP/ACQ/KB/02.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”, 1200/6,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர்,பிரிவில் இல.533A ரத்தனபிட்டிய, 535D திவுலபிட்டிய கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பொரலெஸ்கமுவ, திவுலபிட்டிய நகர கிராமங்களில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2015.07.01 ஆந் திகதிய, கொ.9486 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர் மற்றும் விஸ்தீரணத்தை கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள்:

01. துண்டு இல. 49 பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 23 ஐ கொண்ட காணி (ஒரு பகுதி) - விஸ்தீரணம் : 0.0002 ஹெக்டயார்

வடக்கு : துண்டு இல. 48 மற்றும் பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல.23 ஐ கொண்ட காணி கிழக்கு: பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 23 மற்றும் 21 ஐ கொண்ட காணி தெற்கு: பழைய கெஸ்பேவ வீதியின் வரி மதிப்பீட்டு இல.21 ஐ கொண்ட காணி மற்றும் துண்டு இல. 51, 52 மேற்கு: துண்டு இல. 48.

## இலங்கை தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பணியகத்தின் புதிய கட்டிடத் தொகுதிக்கு சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்

## கிரித்தலை - 2023/2024

## விலைமனுக் கோரல்

### WL/02/20/கிரித்தலை/2023/2024

இலங்கை தேசிய வனசீசராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி பணியகத்தின் புதிய கட்டிடத் தொகுதிக்கு சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் முறைமையின் கீழ் தகைமையும் இயலுமையும் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. இதற்கான தகவல்கள் விலைமனுப் படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் தேவையெனில் அலுவலகத்தைப் பரிசீலித்ததன் பின்னர் இதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
2. இதற்காக விண்ணப்பிக்கும் ஒப்பந்த நிறுவனமானது சுத்திகரிப்புச் சேவைகளை மேற்கொள்வதற்கான வியாபாரப்பதிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2023.04.30ஆம் திகதிக்கு 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் தினத்தன்று இவ்வாறான ஏனைய ஐந்து (05) நிறுவனங்களிற்கு நிகரான சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
3. கடந்த 03 ஆண்டுகளில் மாதாந்தம் ரூபா 300,000.00 இற்குக் குறையாத வருடாந்தம் ரூபா 3,600,000.00 இற்குக் குறையாத சேவையொன்றை வழங்கியமை தொடர்பாக ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்துதல வேண்டுமென்பதுடன் நிதி நிலைத்தன்மையுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்று என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கடந்த கிட்டிய 03 ஆண்டு கால கணக்காய்வு நிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தம் நிறுவனத்தில் இற்றைவறை சேவையிலுள்ள ஊழியர் குழுவினர்கள் குறைந்த பட்சம் 25 பேர் ஆக இருத்தல் வேண்டும். இதனை ஊழியர் நலன்புரி நிதியத்தின் ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.
5. 2023.07.05 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப்பிரிவில் இதற்கான விலைமனுப்படிவங்களைப் பரிசீலனை செய்து கொள்ளலாமென்பதுடன் ‘பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்’ என்ற பெயரில் கடிதத் தலைப்பில் எழுத்துருவ விண்ணப்பமொன்றுடன் காசாக ரூபா 1,500.00 இற்கான மீளளிக்கப்படாத கட்டணத்தைத் திணைக்களச் சிறாப்பருக்குச் செலுத்தி இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. ரூபா 50,000.00 இற்கான விலைமனுப்பிணையமொன்று பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் அது அரச அங்கீகாரம் பெற்ற வணிக வங்கியொன்றிலிருந்து அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் சிறாப்பருக்கு 2023.07.06 அன்று 2.00 இற்கு முன்னர் காசாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். விலை மனுப் பிணையம் இணைக்கப்பட்டிறாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. விலைமனுப் பிணையமானது விலைமனுத்திறக்கப்படும் தினத்திலிருந்து குறைந்த பட்சம் 90 நாட்களிற்குச் செல்லுபடியாகுதல் வேண்டும்.
8. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென தனித்தனியான தபாலுறைகளில் சேர்த்து முத்திரையிட்டு மீண்டும் அவற்றை ஒருறையில் உள்ளிட்டு முத்திரையிட்டு அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2023.07.06 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் முடியுமென்பதுடன் தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுத் திறத்தல் அன்றைய தினம் (2023.07.06) பி.ப. 2.00 இற்கு மேற்கொள்ளப்படுவதுடன் அவ் வேளையில் நீங்கள் அல்லது உங்களின் அதிகாரம் வழங்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
9. இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112 871537 தொலைபேசி மூலம் திணைக்களத்தின் பணிப்பாளர் (நிதி)ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம். விலைமனுத் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமை திணைக்களப் பெறுகைக்குழுவிற்கு உரித்தாவதுடன் இவ் அறிவித்தலில் அல்லது விலைமனு மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை தொடர்பான எந்தவொரு விடயம் தொடர்பாகவும் தீர்மானிக்கும் உரிமை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.
10. விலைமனுக்களைத் தயாரிக்கையில் ஏற்படும் எந்தவொரு செலவினம் தொடர்பாகவும் திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர் பொறுப்பேற்க மாட்டார்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.**

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



Magazine Issued with Sunday Observer

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want



- Auto Focus

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## விலக்களித்தலுக்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) (திருத்தப்பட்ட) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இத்தால் அறியச்செய்வது யாதெனில், சக்தி விநியோக அளவுக் குறைவு மற்றும் அவற்றின் வளாகங்களுள் ஓர் எல்லைக்குட்பட்ட விநியோக வலையமைப்பு காணப்படுதல் ஆகியவற்றால், குறித்துரைக்கப்பட்ட/ முறையான வளாகங்களில் மட்டும் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் வழங்கல் ஆகிய நோக்கங்களிற்காக, ஆணைக்குழு கீழ்வரும் அடையாளங்காணப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு விலக்களிக்க உத்தேசித்து உள்ளது என்பதாகும்.

| விண்ணப்ப இல | விண்ணப்பதாரர் | வளாகம் | நுகர்வோரின் இயல்பு |
|---|---|---|---|
| E/AE-D/23/14 | நகர அபிவிருத்தி அதிகாரசபை | ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் கிராண்ட் ஸ்டாண்ட் வளாகம், ரேய்ட் எவெனியு, கொழும்பு 07 | வணிகம் |
| E/AE-D/23/15 | இலங்கை புகையிரத திணைக்களம் | இலங்கை புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான வளாகம் | வணிகம் மற்றும் குடியிருப்பு |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்ப இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03

திகதி: 2023.06.13

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பின்வரும் நபர்க்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின் நிலையம்/ வசதியின் பெயர் | இடம் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|---|
| E/AL/N/23/18 | சி ஹைட்ரோ டெவலப்மெண்ட் பிரைவேட் லிமிடெட் | லோகல் ஓயா சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் | அகிரிய, அடகிரிய, பசறை, பதுளை | 4.00 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

திகதி: 2023.06.13

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

# களனி பல்கலைக்கழகம்
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**திகதி** : 2023 ஜூன் 13
**கடன் மற்றும் தலைப்பு** : **Loan 3698/3699 – விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம்**
**ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** : **MOE/STHRD/KE-F16: களனி பல்கலைக்கழக, கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்தில் கருத்தரங்கு மற்றும் விரிவுரை மண்டபங்களுக்கான குஷன் இருக்கைகளின் பெறுகை**

**விலைமனுக்களை சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதி: 2023 ஜூலை 11ஆம் திகதி 14.30 மணி**

1. கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் (STHRD திட்டம்) செலவை நோக்கியதாக 145 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகராக ஆசிய அபிவிருத்தி வங்கியில் (ADB) இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு நிதிப்படுத்தல் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு மேல் பெயரிடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுக்கு இந்த நிதிப்படுத்தலின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ADB இன் தகுதியுடைய மூல நாடுகளில் இருந்து விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் திறக்கப்பட்டுள்ளது.
2. MOE/STHRD/KE-F16: களனி பல்கலைக்கழக, கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்தில் கருத்தரங்கு மற்றும் விரிவுரை மண்டபங்களுக்கான குஷன் இருக்கைகளின் பெறுகைக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து (கொள்வனவாளர்) களனி பல்கலைக்கழக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், பிரதித் திட்டப் பணிப்பாளரின் சார்பில் களனி பல்கலைக்கழகத்தின் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. களனி பல்கலைக்கழக, கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்தில் கருத்தரங்கு மற்றும் விரிவுரை மண்டபங்களுக்கான குஷன் இருக்கைகளின் வழங்கல் மற்றும் விநியோகத்தை இந்த பெறுகை கொண்டிருக்கும்.
3. திறந்த போட்டிரீதியான விலைக்கேட்பானது ADB இன் பொருட்களின் பெறுகை ஒற்றை கட்ட – ஒற்றை கடித உறை நடைமுறைக்கு அமைய நடத்தப்படுவதோடு விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுடைய அனைத்து நாடுகளில் இருந்தும் அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறக்கப்பட்டுள்ளது.
4. விலைமனு ஆவணத்தில் வரையறுக்கப்பட்ட பின்வரும் முக்கிய தகைமையைக் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கு மாத்திரமே இந்த விலைக்கேட்பில் பங்கேற்கலாம்:

| உருப்படி இல. | விபரம் | அலகுகளின் எண்ணிக்கை | பிரிவு 6 இல் விபரிக்கப்பட்ட வழங்கல் நோக்கத்திற்கு ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாட்டுடன் குறைந்தபட்சம் கீழே குறிப்பிடப்பட்ட மதிப்புடன் பிரதான விநியோகஸ்தராக கடந்த 5 ஆண்டுகளுள் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். (இலங்கை ரூபா) | கடந்த மூன்று ஆண்டுகளில் முடிக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரர் மூலம் பெறப்பட்ட மொத்த கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட குறைந்தபட்ச சராசரி ஆண்டுப் புரள்வு பின்வருமாறு. (இலங்கை ரூபா) | விலைமனு பிணைத் தொகை இலங்கை ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | குஷன் இருக்கை | 1368 | 13.5 மில்லியன் | 54 மில்லியன் | 300,000.00 |

5. விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பெற மற்றும் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்:

**பிரதி திட்டப் பணிப்பாளர்
திட்ட அமுலாக்கல் பிரிவு,
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம்,
11ஆவது மாடி (அறை இல. L11-5)
கணினி மற்றும் தொழில்நுட்ப பீடம்,
களனி பல்கலைக்கழகம்,
பல்கலைக்கழக பாதை, புலுகஹ சந்தி,
கண்டி வீதி, களனி.
இலங்கை.
தொலைபேசி: +94 (0)11 2984879, 071-9607455, 071-4492382
தொலைநகல்: +94 11 2984879
மின்னஞ்சல்: dpd-sthrd@kln.ac.lk**

6. விலைமனு ஆவணங்களை ஆங்கிலத்தில் வாங்குவதற்கு, தகுதியுடைய விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 இலங்கை ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்தி MOE/STHRD/KE-F16: களனி பல்கலைக்கழக, கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்தில் கருத்தரங்கு மற்றும் விரிவுரை மண்டபங்களுக்கான குஷன் இருக்கைகளின் பெறுகைக்கான விலைமனு ஆவணங்களை கோரி மேலுள்ள முகவரிக்கு எழுத வேண்டும். ஆவணம்/கள் 2023 ஜூலை 10ஆம் திகதி 15.00 மணி வரை வழங்கப்படும். இழப்பு அல்லது தாமதமான விநியோகத்திற்கு எந்தப் பொறுப்பும் ஏற்கப்படாது.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு களனி, களனி வீதி, புலுகஹ சந்தி, பல்கலைக்கழக பாதை, களனி பல்கலைக்கழகம், கணினி மற்றும் தொழில்நுட்ப பீடம், மாநாட்டு அறையில், 2023 ஜூன் 21ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும்.
8. விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனு பிணை ஒன்றுடன் சேர்த்து 2023 ஜூலை 11ஆம் திகதி 14.30 அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு உங்களது விலைமனுவை சமர்ப்பித்தல் வேண்டும்:

**பிரதி திட்டப் பணிப்பாளர்
திட்ட அமுலாக்கல் பிரிவு,
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம்,
11ஆவது மாடி (அறை இல. L11-5)
கணினி மற்றும் தொழில்நுட்ப பீடம்,
களனி பல்கலைக்கழகம்,
பல்கலைக்கழக பாதை, புலுகஹ சந்தி,
கண்டி வீதி, களனி.**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை அசல் மற்றும் நகல் என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் வெவ்வேறாக மூடப்பட்டு முறையே முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் 'அசல்' மற்றும் 'நகல்' என குறிப்பிட வேண்டும். தொடர்ந்து இரு கடித உறைகளையும் மீண்டும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒற்றை கடித உறையில் இட்டு அந்தக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "MOE/STHRD/KE-F16: களனி பல்கலைக்கழக, கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்தில் கருத்தரங்கு மற்றும் விரிவுரை மண்டபங்களுக்கான குஷன் இருக்கைகளின் பெறுகை" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

9. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி முடிவுற்ற உடன் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
களனி பல்கலைக்கழகம்,
தலுகம, களனி,
இலங்கை.**

**திகதி: 2023 ஜூன் 13**

# களனி பல்கலைக்கழகம்
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**திகதி** : 2023 ஜூன் 13
**கடன் மற்றும் தலைப்பு** : **Loan 3698/3699 – விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம்**
**ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** : **MOE/STHRD/KE-E14: களனி பல்கலைக்கழக, கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்காக UPS (125 KVA) ஒன்றின் பெறுகை**

**விலைமனுக்களை சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதி: 2023 ஜூலை 13ஆம் திகதி 14.30 மணி**

1. கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் (STHRD திட்டம்) செலவை நோக்கியதாக 145 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகராக ஆசிய அபிவிருத்தி வங்கியில் (ADB) இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு நிதிப்படுத்தல் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு மேல் பெயரிடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுக்கு இந்த நிதிப்படுத்தலின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ADB இன் தகுதியுடைய மூல நாடுகளில் இருந்து விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் திறக்கப்பட்டுள்ளது.
2. MOE/STHRD/KE-E14: களனி பல்கலைக்கழக, கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்காக UPS (125 KVA) ஒன்றின் பெறுகைக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து (கொள்வனவாளர்) களனி பல்கலைக்கழக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், பிரதித் திட்டப் பணிப்பாளரின் சார்பில் களனி பல்கலைக்கழகத்தின் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. களனி பல்கலைக்கழக, கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்காக UPS (125 KVA) இன் வழங்கல், விநியோகம், நிறுவல் மற்றும் செயற்படவைத்தலை இந்தப் பெறுகை கொண்டுள்ளது.
3. திறந்த போட்டிரீதியான விலைக்கேட்பானது ADB இன் பொருட்களின் பெறுகை ஒற்றை கட்ட – ஒற்றை கடித உறை நடைமுறைக்கு அமைய நடத்தப்படுவதோடு விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுடைய அனைத்து நாடுகளில் இருந்தும் அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறக்கப்பட்டுள்ளது.
4. விலைமனு ஆவணத்தில் வரையறுக்கப்பட்ட பின்வரும் முக்கிய தகைமையைக் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கு மாத்திரமே இந்த விலைக்கேட்பில் பங்கேற்கலாம்:

| உருப்படி இல. | விபரம் | அலகுகளின் எண்ணிக்கை | பிரிவு 6 இல் விபரிக்கப்பட்ட வழங்கல் நோக்கத்திற்கு ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாட்டுடன் குறைந்தபட்சம் கீழே குறிப்பிடப்பட்ட மதிப்புடன் பிரதான விநியோகஸ்தராக கடந்த 5 ஆண்டுகளுள் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். (இலங்கை ரூபா) | கடந்த மூன்று ஆண்டுகளில் முடிக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரர் மூலம் பெறப்பட்ட மொத்த கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட குறைந்தபட்ச சராசரி ஆண்டுப் புரள்வு பின்வருமாறு. (இலங்கை ரூபா) | விலைமனு பிணைத் தொகை இலங்கை ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | UPS (100 KVA) | 01 | 13.5 மில்லியன் | 54 மில்லியன் | 300,000.00 |

5. விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பெற மற்றும் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம்:

**பிரதி திட்டப் பணிப்பாளர்
திட்ட அமுலாக்கல் பிரிவு,
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம்,
11ஆவது மாடி (அறை இல. L11-5)
கணினி மற்றும் தொழில்நுட்ப பீடம்,
களனி பல்கலைக்கழகம்,
பல்கலைக்கழக பாதை, புலுகஹ சந்தி,
கண்டி வீதி, களனி.
இலங்கை.
தொலைபேசி: +94 (0)11 2984879, 071-9607455, 071-4492382
தொலைநகல்: +94 11 2984879
மின்னஞ்சல்: dpd-sthrd@kln.ac.lk**

6. விலைமனு ஆவணங்களை ஆங்கிலத்தில் வாங்குவதற்கு, தகுதியுடைய விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 இலங்கை ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்தி MOE/STHRD/KE-E14: களனி பல்கலைக்கழக, கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்காக UPS (125 KVA) ஒன்றின் பெறுகைக்கான விலைமனு ஆவணங்களை கோரி மேலுள்ள முகவரிக்கு எழுத வேண்டும். ஆவணம்/கள் 2023 ஜூலை 12ஆம் திகதி 15.00 மணி வரை வழங்கப்படும். இழப்பு அல்லது தாமதமான விநியோகத்திற்கு எந்தப் பொறுப்பும் ஏற்கப்படாது.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு களனி, களனி வீதி, புலுகஹ சந்தி, பல்கலைக்கழக பாதை, களனி பல்கலைக்கழகம், கணினி மற்றும் தொழில்நுட்ப பீடம், மாநாட்டு அறையில், 2023 ஜூன் 22ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும்.
8. விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனு பிணை ஒன்றுடன் சேர்த்து 2023 ஜூலை 13ஆம் திகதி 14.30 அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு உங்களது விலைமனுவை சமர்ப்பித்தல் வேண்டும்:

**பிரதி திட்டப் பணிப்பாளர்
திட்ட அமுலாக்கல் பிரிவு,
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம்,
11ஆவது மாடி (அறை இல. L11-5)
கணினி மற்றும் தொழில்நுட்ப பீடம்,
களனி பல்கலைக்கழகம்,
பல்கலைக்கழக பாதை, புலுகஹ சந்தி,
கண்டி வீதி, களனி.**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை அசல் மற்றும் நகல் என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் வெவ்வேறாக மூடப்பட்டு முறையே முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் 'அசல்' மற்றும் 'நகல்' என குறிப்பிட வேண்டும். தொடர்ந்து இரு கடித உறைகளையும் மீண்டும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒற்றை கடித உறையில் இட்டு அந்தக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "MOE/STHRD/KE-E14: களனி பல்கலைக்கழக, கணினி மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்காக UPS (125 KVA) ஒன்றின் பெறுகை" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

9. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி முடிவுற்ற உடன் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
களனி பல்கலைக்கழகம்,
தலுகம, களனி,
இலங்கை.**

**திகதி: 2023 ஜூன் 13**

**தொடர் இலக்கம் RAT/LAN/10/F1/07
பிரதேச செயலாளர்
இரத்மலானை**
2023.06.06

## காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7வது பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொண்டுள்ள பின்வரும் காணிகளுக்காக குறித்த சட்டத்தின் 9ஆவது பிரிவின் கீழ் உரித்து மற்றும் நஷ்டஈடு சம்பந்தமாக பரீட்சிக்கும் நடவடிக்கை யானது 2023.06.15ஆம் திகதி இரத்மலானை பிரதேச செயலகத்தில் என்னால் மேற்கொள்ளப்படுவதாக பொது மக்களுக்கு அறிந்து கொள்வதன் நிமித்தம் இத்தால் அறியத்தருகின்றேன். குறித்த காணிகளுடன் தொடர்புள்ளவர்கள் குறித்த பரிசீலனைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இலக்கம் ஏப்ரல் மற்றும் 2023.06 மாதம் 2326/51ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வர்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

1. பிதேச செயலகம் : இரத்மலானை
2. நிலப்பரப்பு வரைபட இலக்கம்: 521003/09/1/46
3. துண்டுகளின் எண்ணிக்கை : 01 துண்டு இலக்கம் 207)
4. முழு விஸ்தீரணம் : 0.0275 ஹெக்டேயர்
5. காணி அமைந்துள்ள கிராமம் : விஹார (புலுகஹவத்த) மதிப்பீட்டு வரி இலக்கம் - 129/8 ரஜமாவத்த

**எச்.ஆர். ஹிமாலி கருணாரத்ன
பிரதேச செயலாளர்,
இரத்மலானை.**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்ட நஷ்டஈடு

**எனது இல. வ/18/09/2013**

கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பிரதேச செயலாளர் பி.டீ.டி.சி. ராஜிகா ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்குரிய நஷ்ட ஈடாக ஆயிரம் ரூபா (ரூ. 1000/-) பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர் பெற்றுக் கொள்வதற்கும் வெலிசர மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. 02/23/LA கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து 2023 பங்குனி 21ஆம் திகதி 2324/17ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**பி.டீ.டி.சி. ராஜிகா
பிரதேச செயலாளர்,
வத்தளை.**

2023.06.05

**அட்டவணை**

| | |
|---|---|
| அமைவிடம் | : மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் பள்ளியாவத்தை கிராமம் |
| காணியின் பெயர் | : பள்ளியாவத்தை |
| வரை பட இல. | : ஆ.வ. இல. கம் 4074 |
| துண்டு இல. | : 01 |
| விஸ்தீரணம் | : 0.0894 ஹெக்டேயர் |
| வெலிசர தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட வங்கி கணக்கு இல. | : 100830347353 |

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

# 2023 ஜூலை முதல் டிசம்பர் வரை 06 மாத காலத்திற்கு கேள்வி கோரல்

## மினுவங்கொடை - நகர சபை

கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் மினுவங்கொட நகர சபைக்கு சொந்தமான குத்தகை இடங்களை 2023 ஜூலை 01 முதல் 2023 டிசம்பர் 31 வரையான கால எல்லை சார்பாக குத்தகை விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2023.06.26 பிற்பகல் 2.00 வரை என்னால் ஏற்கப்படும்.

கேள்விகள் திறத்தல் 2023.06.26 கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் இடம்பெறும் கீழே அட்டவணை மூலம் தரப்பட்டுள்ள கட்டணங்களை காசாக செலுத்தி ஒவ்வொரு கேள்விக்கும் குறித்த கேள்விப் படிவங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகளை 2023.06.26 முற்பகல் 10.00 வரை நகர சபையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 02 பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுவதுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு குறித்த கேள்வி இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கும் கேள்வியின் பெயரை உறையின் இடது பக்கம் குறிப்பிட்டு தலைவர், மினுவங்கொட நகர சபையின் பெயரில் பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

நகர சபையில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்க அனுமதியுண்டு.

குறித்த தினம் குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் மற்றும் பூர்த்தியற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களை தொலைபேசி இலக்கம் 011-2295275 மூலம் சபையின் செயலாளரை அழைத்து அறிந்து கொள்ளலாம். எந்த கேள்விப் பத்திரத்தையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை மினுவங்கொடை நகர சபைக்கு உரியது.

**அட்டவணை இல. 01**

2023 ஜூலை 01 முதல் 2023 டிசம்பர் 31 வரையான 06 மாத கால எல்லை சார்பாக மினுவங்கொட நகர சபைக்கு சொந்தமான வியாாபரஸ்தலங்களை குத்தகைக்கு வழங்கப்படும்.

| தொடர் இலக்கம் | குத்தகை உரிமையை ஒப்படைத்தல்/ வர்த்தக உரிமையை ஒப்படைத்தல் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை தொகை ரூ. | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | வருடாந்த குறைந்தபட்ச கேள்வி ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பொதுச் சந்தை வளாகத்தில் இல. 03 மீன் தட்டு | 605,00 | 3,000.00 | 60500.00 |
| 2 | பொதுச் சந்தை வளாகத்தில் இல. 04 மீன் தட்டு | 605.00 | 3,000.00 | 60500.00 |
| 3 | பொதுச் சந்தை வளாகத்தில் இல. 06 மீன் தட்டு | 750.60 | 3,000.00 | 75060.00 |

2023.06.09
**மினுவங்கொட நகர சபை.**

**கே.எச். கபில குமார**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**மினுவங்கொட நகர சபை.**

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

MEPA

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வாகனம் மற்றும் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு விலைமனுக் கோரல்

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் கடலோர பகுதிகள் சார்ந்து மேற்கொள்ளப்படுகின்ற கரையோரங்களை சுத்தம் செய்யும் செயற்பாட்டுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் கீழுள்ளவாறு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | வாகனம்/ இயந்திர வகை | அளவு | தேவையான இடம் |
|---|---|---|---|
| 1 | குளிரூட்டப்பட்ட வேன் 12 இருக்கைகளுக்கு குறையாதது | 02 | நீர்கொழும்பு – 01, சிலாபம் - 01 |
| 2 | லொரி – Full Body (14.5 அடி நீளம்) | 02 | நீர்கொழும்பு – 01, சிலாபம் - 01 |
| 3 | குளிரூட்டப்படாத 26 இருக்கை கொண்ட பஸ் வண்டி | 01 | நீர்கொழும்பு – 01 |
| 4 | டிப்பர் (01-Cube) | 02 | நீர்கொழும்பு – 01, சிலாபம் - 01 |
| 5 | க்ரூ கெப் வண்டி | 01 | கொழும்பு – 01 |
| 6 | Fork Lift (Ton 02) | 01 | நீர்கொழும்பு – 01 |

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் வழங்குநர்களுக்கு 2023 ஜுன் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 2013 ஜுன் 26ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் அரச வேலை நாட்களில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் அமைந்துள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையிடம் அல்லது www.mepa.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து, குறித்த விபரக்குறிப்புகள் மற்றும் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா கட்டணம் ஒன்றை அதிகாரசபையின் சிறாப்பருக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை இரு (2) பிரதிகளில் தயாரித்தல் வேண்டும் என்பதோடு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என்று குறிப்பிட்டு, வெவ்வேறாக இரு உறைகளில் இட்டு அதன் பின் அந்த இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு முத்திரை இட்டு 2023 ஜுன் 27ஆம் திகதி பி.ப. 2.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு தலைவர் (பெறுகைக் குழு), கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 177, நாவல வீதி, நாராஹென்பிட்ட, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் அமைந்துள்ள இந்த அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதை மேற்கொள்ள முடியும். விலைமனுக்களை சமர்ப்பிக்கின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வாகனம் மற்றும் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்கள் கோரல் முடிவுற்ற உடன் கொழும்பு 05, நாராஹென்பிட்ட, நாவல வீதி, இலக்கம் 177 கொண்ட இடத்தில் அமைந்துள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் 2023 ஜுன் 27ஆம் திகதி பி.ப. 2.00க்கு விலைமனுக்களை திறப்பது மேற்கொள்ளப்படுவதோடு விலைமனுக்களை சமர்ப்பித்த தரப்புக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு இந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

உங்களது அனைத்து விபரங்களையும் அதிகாரசபைக்கு பணம் செலுத்திய பின் வழங்கப்படுகின்ற எமது மூல படிவத்திற்கு அமைய சமர்ப்பிப்பது அவசியம் என்பதோடு அதற்கு அப்பால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைக்காக கீழுள்ள தொலைபேசி இலக்கத்தின் மூலம் அலுவலக நேரத்தில் மேற்கொள்ள முடியும்.

- 0112554006/ 0112554373 (நீடிப்பு 101, 102)
- 0112554247

தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் முகவரி மூலம் அனுப்பப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
பொருத்தமான வழங்குநர் ஒருவரை தேர்வு செய்வது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் உரிமை அதிகாரசபையின் பெறுகைக் குழு வசமானதாகும்.

**தலைவர் (பெறுகைக் குழு)**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை**
**இலக்கம் 177, நாவல வீதி,**
**நாராஹென்பிட்ட,**
**கொழும்பு 05.**

## பிரசித்த ஏல விற்பனை தினத்தை மாற்றுதல் தொடர்பானது.

2023 ஜீன் மாதம் 06ம் திகதி தினகரன் பத்திரிகையில் LB Finance PLC இனால் பிரசுரிக்கப்பட்ட "பிரசித்த ஏல விற்பனை" தொடர்பான அறிவித்தல்.

அந்த அறிவித்தலில் LB Finance PLC இல் தங்கக்கடனுக்காக அடைவு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலத்தில் விடுவதற்க்காக திகதி, மாதம், வருடம் முறையே இடப்பட்டுள்ளது. ஆனால் அந்த அறிவித்தலில் இடப்பட்டுள்ள 2023 ஜீன் மாதம் 23ம் திகதிக்குரிய கிளையின் பிரசித்த ஏல விற்பனை 2023 ஜீன் மாதம் 26ம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதால் 2023 ஜீன் மாதம் 26ம் திகதிக்குரிய கிளையின் பிரசித்த ஏல விற்பனை 2023 ஜீன் மாதம் 23ம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த திருத்தம் தொடர்பாக பொதுமக்களாகிய உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

LB FINANCE
உதவி பொது மேலாளர் - தங்கக்கடன் பிரிவு
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தைஇ கொழும்பு 07.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

பாதுகாப்பு அமைச்சு

## 2023/2024 வருடத்தில் பாவிக்கமுடியாத பொருட்கள் மற்றும் பண்டங்கள் கொள்வனவாளர்களைப் பதிவு செய்தல்

2023-09-01ஆம் திகதி முதல் 2024-08-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு பாதுகாப்பு அமைச்சு அல்லது அதனோடிணைந்த நிறுவனங்களில் பாவிக்கமுடியாத பொருட்கள் மற்றும் பண்டங்களை ஏலவிற்பனை/ கேள்வி மூலம் விற்பனை செய்வதற்காக கொள்வனவாளர்களைப் பதிவு செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கு விண்ணப்பம் செய்வதற்கு இலங்கையில் வதியும் நபர்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் தகுதியைப் பெறும்.

இதன்பொருட்டு 2023-06-13ஆம் திகதி முதல் 2023-06-26ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்களால் 2023-06-27ஆம் திகதி முன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2023-06-26ஆம் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவு செய்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை (சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில்) பாதுகாப்பு அமைச்சின் www.defence.lk எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விண்ணப்பதாரர்களால் 2,000.00 ரூபா மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும். அக்கட்டணத்தை ''செயலாளர், பாதுகாப்பு அமைச்சு'' பெயரில் இலங்கை வங்கி 7040119 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து, குறித்த வங்கிப் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமை உறுதி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பதிவுக் கட்டணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டு சகிதம் 2023-06-27ஆம் திகதிக்கு முன் கணக்காளர் (வருமானம் மற்றும் ஆதன முகாமைத்துவம்), பாதுகாப்பு தலைமையகக் கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பாவிக்கமுடியாத பொருட்கள் மற்றும் பண்டங்கள் கொள்வனவாளர்களைப் பதிவு செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் உரிமையை பாதுகாப்புச் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# மன்னிப்புக் கோருகிறேன்

கிரிபாவ வாசல முதியன்சேலாகே கமலசிறி டிகிரிபண்டா ஆகிய எனக்கு தம்புத்தேகம நீதவான் நீதிமன்றத்தினால் வழக்கு இலக்கம் 97923 ஐ கொண்ட வழக்கில் நான் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டது என்றும் அதற்காக அபராதம் ஒன்று விதிக்கப்பட்டது என்றும் குற்றம் தொடர்பில் இலங்கை குடியரசு மற்றும் இலங்கை மக்களிடம் நான் மன்னிப்புக் கோருகிறேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

**இப்படிக்கு**
**W.M.K. டிகிரிபண்டா**

# தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிராக இலங்கை ஏ 325 ஓட்டங்கள் குவிப்பு



தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான முதலாவது உத்தியோக பூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் இலங்கை ஏ அணி முதல் இன்னிங்ஸில் 325 ஓட்டங்களை பெற்றது.

பல்லேகலவில் நேற்று (12) ஆரம்பமான நான்கு நாட்களைக் கொண்ட இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை ஏ அணித் தலைவர் நிபுன் தனஞ்சிய முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். இதன்படி களமிறங்கிய இலங்கை ஏ அணிக்கு முதல் விக்கெட்டுக்காக லசித் குரூஸ்புல்லே மற்றும் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் லஹிரு உதார 66 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து கொண்டனர்.

நிதானமாக ஆடிய லஹிரு உதார 61 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் 42 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த நுவனிந்து பெர்னாண்டோவினால் 10 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இந்நிலையில் மத்தியவரிசை வீரர்கள் நின்றுபிடித்து ஆடத் தவறினர். கமிந்து மெண்டிஸ் 28 ஓட்டங்களையே பெற்றதோடு ஜனித் லியனகே மற்றும் லக்ஷித மானசிங்க முறையே 1, 4 ஓட்டங்களையே பெற்றனர்.

எனினும் ஒருமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய குரூஸ்புல்லே சதத்தை நெருங்கியபோதும் அதனை இரண்டு ஓட்டங்களால் தவறவிட்டார். 119 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 11 பௌண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் 98 ஓட்டங்களை பெற்றார்.

அதேபோன்று பின்வரிசையில் வந்த ரமேஷ் மெண்டிஸும் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். 89 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 12 பௌண்டரிகளுடன் 78 ஓட்டங்களை பெற்றார். இதன்போது அவர் லசித் எம்புல்தெனியவுடன் இணைந்து 8 ஆவது விக்கெட்டுக்காக 55 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எம்புல்தெனிய 15 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தபோதும் 10ஆவது வரிசையில் வந்த மிலான் ரத்னாயக்க ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் இலங்கை ஏ அணி 83 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 325 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது தென்னாபிரிக்க அணி சார்பில் அதிரடியாக பந்துவீசிய இடது கை சுழற்பந்து வீச்சாளர் சனுரன் முத்துசாமி 31 ஓவர்களில் 122 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். 29 வயதான முத்துசாமி இதுவரை தென்னாபிரிக்க அணிக்காக மூன்று டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை இன்னிங்ஸ் நிறைவடைந்த உடன் முதல் நாள் ஆட்டத்தில் மேலும் 7 ஓவர்கள் இருந்தபோதும் போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இன்று (13) போட்டியின் இரண்டாவது நாளாகும்.

## இலங்கை மகளிர் ஏ அணி பரபரப்பு வெற்றி

வளர்ந்துவரும் மகளிர் அணிகளுக்கு இடையிலான ஆசியக் கிண்ணத் தொடரின் முதல் போட்டியில் இலங்கை மகளிர் ஏ அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு இராச்சிய அணியை வீழ்த்தியது.

எட்டு அணிகளின் பங்கேற்புடன் ஹொங்கொங்கில் நேற்று (12) ஆரம்பமான இந்த டி20 தொடரில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சியம் 19.3 ஓவர்களில் 95 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இலங்கை சார்பில் மதூஷிகா மெத்தானந்த 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.



இந்நிலையில் பதிலெடுத்தாடிய இலங்கை மகளிர் ஏ அணி 19.5 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 96 ஓட்டங்களை எட்டியது. ஆரம்ப வீராங்கனை விஷ்மி குணரத்ன அதிகபட்சமாக 32 பந்துகளில் 21 ஓட்டங்களை பெற்றார்.

## ஏறாவூர் இளந்தாரகை பி அணியினர் சம்பியன்

ஏறாவூர் சுழற்சி நிருபர்



கல்லடி கடல் மீன்கள் விளையாட்டுக் கழகம் நடாத்திய கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை ஏறாவூர் இளந்தாரகை விளையாட்டுக் கழகத்தின் ஏ, பி இரு அணிகளும் பெற்றுக் கொண்டன.

கல்லடி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த இந்தப் போட்டியில் 70 அணிகள் பங்கேற்றன.

இதன் இறுதிப் போட்டியில் ஏறாவூர் இளந்தாரகைக் கழகத்தின் பி அணி பெனால்டி சூட் அவுட் முறையில் 3–2 என்ற கோல் கணக்கில் ஏ அணியை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

## அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று ஜோகோவிச் சாதனை

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்ற செர்பிய நட்சத்திரம் நொவாக் ஜோகோவிச், 23ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்துடன் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் சாதனையை முறியடித்துள்ளார்.


கடந்த ஞாயிறன்று (11) நடைபெற்ற பரபரப்பான இறுதிப் போட்டியில் நோர்வே வீரர் கேஸ்பர் ரூட்டை 7–6 (7–1), 6–3, 7–5 என நேர் செட்களால் ஜோகோவிச் வீழ்த்தினார்.

இதன்மூலம் 23ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றிய ஜோகோவிச், ஸ்பெயினின் நடாலை



2ஆவது இடத்துக்கு தள்ளினார். அவர் இதுவரை அவுஸ்திரேலிய ஓபனை 10 முறைகளும், பிரெஞ்ச் ஓபனை 3 தடவைகளும், விம்பிள்டனில் கிண்ணத்தை 7 முறைகளும், அமெரிக்க ஓபனை 3 முறைகளும் வென்றுள்ளார்.

## நடுவர் தீர்ப்பை விமர்சித்த சுப்மன் கில்லுக்கு அபராதம்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் தொலைக்காட்சி நடுவரின் முடிவை விமர்சித்த இந்திய துடுப்பாட்ட வீரர் சுப்மன் கில்லுக்கு போட்டிக் கட்டணத்தில் 15 வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று இந்தப் போட்டியில் மெதுவாக பந்துவீசிய இந்தியாவுக்கு ஒட்டுமொத்த போட்டிக் கட்டணமும் அவுஸ்திரேலியாவுக்கு 80 வீத போட்டிக் கட்டணமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணி 444 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை ஆடியபோதும் கில் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரது பிடியெடுப்பை கமெரோன் கிரீன் பாய்ந்து நிலத்தில் பட்டும்படாமலும் பிடித்தார். மூன்றாவது நடுவர் ரிசட் கட்டில்பிரோ அதனை அட்டமிழப்பாக அறிவித்தார். இந்தத் தீர்ப்பை கில் சமூக ஊடகத்தில் விமர்சித்திருந்தார். இது ஐ.சி.சி விதி மீறல் எனக் கூறி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தண்டனையை கில் ஏற்றிருப்பதால் இது தொடர்பில் மேலதிக விசாரணை தேவைப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவை 209 ஓட்டங்களால் வீழ்த்திய அவுஸ்திரேலிய அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் கிண்ணத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை தடகள வீரர் சுவிட்சர்லாந்தில் மாயம்



சுவட்சர்லாந்து, ஜெனீவா நகரில் நடைபெறும் மெய்வல்லுனர் போட்டி ஒன்றில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி அங்கு பயணித்த முன்னணி தடகள வீரர் க்ராஷன் தனன்சய மாயமாகியுள்ளார்.

முப்பாய்ச்சலில் இலங்கை சாதனைக்கு சொந்தக்காரரான தனஞ்சய நீளம் பாய்தலில் தேசிய சம்பியனாகவும் உள்ளார்.

அவர் நீளம் பாய்தல் வீராங்கனை சாரங்கி டி சில்வா மற்றும் தேசிய தடகள பயிற்சியாளர் வை.கே. குளரத்னவுடனேயே சுவிட்சர்லாந்து பயணித்துள்ளார்.

'தனிப்பட்ட அழைப்பு ஒன்றாகவே இந்த சுற்றுப்பயணம் உள்ளது. இதற்கு இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் பொறுப்பாகாது. நீளம் பாய்தல் போட்டியில் பங்கேற்ற பின்னரே அவர் காணாமல்போயுள்ளார்' என்று இலங்கை மெய்வல்லுனர் சம்மேளன செயலாளர் சமன் குமார குணவர்தன தெரிவித்துள்ளார்.

## உலகக் கிண்ணம்

# இந்தியா–பாக். ஒக். 15இல் அஹமதாபாத்தில் மோதல்

இந்த ஆண்டு பிற்பகுதியில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் ஒக்டோபர் 15 ஆம் திகதி 100,000க்கும் அதிகமான இருக்கைகள் கொண்ட அஹமதாபாத் அரங்கில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த உலகக் கிண்ணத்தின் பரபரப்பான இறுதிப் போட்டியில் ஆடிய நடப்புச் சம்பியன் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் இம்முறை உலகக் கிண்ணத்தின் முதல் போட்டியில் ஒக்டோபர் 5 ஆம் திகதி பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

அடுத்த ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டிக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தயாரித்துள்ள போட்டி அட்டவணையில் இந்த விபரம் வெளியாகியுள்ளது. இந்த அட்டவணையை இந்திய சபை சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலுடன் பகிர்ந்து கொண்டிருப்பதோடு தொடர்ந்து கருத்துகளை பெறுவதற்காக பங்கேற்கும் நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.



இதனைத் தொடர்ந்து அடுத்து வாரம் போட்டி அட்டவணை உறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் எதிர்வரும் நம்பர் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் அரையிறுதிப் போட்டிகளின் மைதானங்கள் விபரம் இன்னும் வெளியிடப்படவில்லை. உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டி நவம்பர் 19 ஆம் திகதி அஹமதாபாத்தில் நடத்த அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. உலகக் கிண்ணம் ஆரம்பிப்பதற்கு இன்னும் நான்கு மாதங்களே உள்ள நிலையில் முன்னெப்போதும் நிகழாத வகையில் போட்டி அட்டவணையை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. 2015 மற்றும் 2019 ஆகிய கடந்த இரு உலகக் கிண்ணத் தொடர்களிலும் ஓர் ஆண்டுக்கு முன்னதாகவே போட்டி அட்டவணை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருமண பஸ் கவிழ்ந்து ஆஸியில் 10 பேர் பலி



அவுஸ்திரேலியாவில் திருமண வைபவம் ஒன்றில் பங்கேற்றுவிட்டு திரும்பிய பஸ் வண்டி ஒன்று விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்திருப்பதோடு மேலும் 20க்கும் அதிகமானவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தின் ஹன்ட வலி பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பஸ் வண்டி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. அந்த வண்டியின் ஓட்டுநரான 58 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதை வளைவில் கட்டுப்பாட்டை இழந்த பஸ், பாதையிலிருந்து விலகி புரண்டு பள்ளத்திற்குள் விழுந்ததால் இந்த விபத்து நடந்துள்ளதாக சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். பஸ்ஸில் சிறுவர்கள் யாரும் பயணம் செய்திருக்கவில்லை என்பதை பொலிஸார் உறுதி செய்தனர்.

பலரும் ஆபத்தான நிலையில் இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. இந்த பஸ்ஸில் மொத்தம் 50 பேர் வரை இருந்துள்ளனர்.

சம்பவ இடத்தில் காயமடைந்த இருவர் ஹெலி மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கிட்டத்தட்ட கடந்த 34 ஆண்டுகளில் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற மிக மோசமான பஸ் விபத்தாக இது பதிவாகியுள்ளது.

நியூ சௌத் வேல்ஸில் 1989இல் இரண்டு மாதங்களுக்குள் இடம்பெற்ற இரு மோசமான விபத்துகளில் முறையே 35 மற்றும் 21 பேர் கொல்லப்பட்டனர். 1973இல் சுற்றுலா பஸ் ஒன்றில் பிரேக் செயலிழந்து சாய்வு ஒன்றில் விழுந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 18 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

ரஷ்யாவுக்கு எதிரான பதில் தாக்குதல்

# 3 கிராமங்களை மீட்டதாக உக்ரைன் படை அறிவிப்பு

ரஷ்ய படைக்கு எதிரான பதில் தாக்குதலை ஆரம்பித்திருக்கும் உக்ரைனிய இராணுவம் நாட்டின் தென் கிழக்கில் மூன்று கிராமங்களை மீட்டதாக அறிவித்துள்ளது.

உக்ரைனின் 68ஆவது படையணி கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட உறுதி செய்யப்படாத வீடியோ ஒன்றில் குண்டு தாக்குதலில் சேதம் அடைந்த கட்டடம் ஒன்றில் படையினர் உக்ரைனிய கொடியை ஏற்றுவது பதிவாகியுள்ளது. அது டொனட்ஸ்க் பிராந்தியத்தின் பலொஹடட்னே குடியிருப்புப் பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'தெற்கு முன்னரங்கில் இரண்டு திசைகளால் 300 மற்றும் 1,500 மீற்றர்கள் இடையே முன்னேறி தெற்கே அடுத்த கிராமமான மகரிவ்காவை உக்ரைனிய படையினர் கைப்பற்றினர்' என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஹன்னா மலியர் வெளியிட்ட



அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இந்த பகுதியில் உக்ரைனிய நிலைக்கு மிக நெருக்கமாக உள்ள நெஸ்குச்னே கிராமத்தில் உக்ரைனிய படையினர் தமது தேசிய கொடியை ஏற்றும், உறுதி செய்யப்படாத படங்கள் டெலிகிராமில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த ஞாயிறு இரவு தொலைக்காட்சியில் தோன்றிய உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி, தமது படையினருக்கு பாராட்டுகளை தெரிவித்தபோதும், மோதல் இடம்பெறும் பகுதிகள் பற்றி குறிப்பிட்டு எதுவும் கூறவில்லை.

எனினும் குறித்த பகுதிகளில் இருந்து உக்ரைனிய படையினர் பின்வாங்கச் செய்யப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) வலியுத்தியது. தெற்கு டொனட்ஸ்க் மற்றும் சபொரிசியா பகுதிகளின் முன்னரங்குகளில் உக்ரைனிய துருப்புகள் கடந்த 24 மணி நேரத்தில் மேற்கொண்ட தாக்குதல் முயற்சிகள் 'வெற்றியளிக்கவில்லை' என்று அது குறிப்பிட்டது.

உக்ரைன் முன்னரங்குகளில் இருந்து சுயாதீனமான தகவல்கள் குறைவாகவே கிடைக்கும் நிலையில் அங்கு நீடிக்கும் போர் நிலைமை குறித்து மதிப்பிடுவது சாத்தியமில்லாத ஒன்றாக இருந்து வருகிறது.

## பெர்லுஸ்கோனி காலமானார்



பாலியல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கி அதில் இருந்து மீண்டு வந்த இத்தாலி முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி தனது 86ஆவது வயதில் காலமானார். மிலானில் உள்ள சான் ரபாயேல் மருத்துவமனையில் வைத்து அவர் மரணித்ததாக இத்தாலி ஊடகங்கள் நேற்று (12) செய்தி வெளியிட்டன. பெர்லுஸ்கோனி கடந்த ஏப்ரலில் நுரையீரல் தொற்றுக்கு சிகிச்சை பெற்றிருந்தார்.

பெரும் செல்வந்தரான அவர் 1994 ஆம் ஆண்டு பதிவிக்கு வந்து 2011 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்தார். அவரது இத்தாலியா கட்சி ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

விலை மாதுகளுடன் பாலியல் களியாட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றது மற்றும் பல ஊழல் மற்றும் வரி மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பில் பெர்லுஸ்கோனி கடந்த காலத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தினார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுன் மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.